
புதிய சமுதாயம்

KDN. 10509 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 10.4.1977



NA-8.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

கம்பம் 1 :: 10-4-1977 :: குடும்பம் 2

ம. இ. கா. தலைமைத்துவம்

மலேசிய இந்தியர் காங்கிரசின் தேசியத் தலைவராக மூன்றாவது முறையாக மிகப் பெரும்பான்மை வாக்குகளில் வாகை சூடியிருக்கும் அமைச்சர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்களுக்குப் 'புதிய சமுதாயம்" தன் மனங்கனிந்த பாராட்டுக்களையும் இனிய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

"புதிய சமுதாய"த்தின் வெளியீட்டு விழாவைத் தம் இல்லத்திலேயே நடத்த இசைந்து எங்களைச் சிறப்பித்த டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அந்த விழா நடைபெற்று ஒரு வாரத்தில் இத்தகைய பெருமிதமான வெற்றியையும் ஈட்டியிருப்பது குறித்து நாங்கள் பூரிப்படைகிறோம்; இந்திய சமூகத்திறகும் ம. இ. கா.வுக்கும் சீரிய தலைமைத்துவத்தைத் தொடர்ந்து வழங்குவதற்கு இறைவன் மாண்புமிகு அமைச்சருக்கு நீடித்த நல்வாழ்வை அருளவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம்.

உண்மையில் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் ம. இ. கா.வின் தேசியத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும்; அதுவே பொருத்தமும் கண்ணியமுமாகும். இந்திய சமூகத்திற்கும் ம. இ. கா. வுக்கும் கூட அதனால் பெருமை மிகுந்திருக்கும்,

என்றாலும் இந்தப் போட்டியினால் கூட மறைமுகமான நன்மை விளைந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம். இந்திய சமூகத்திலும் ம. இ. கா.விலும் டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்திற்கு இருந்து வருகிற "உண்மையான" பலமும் செல்வாக்கும் இதன்மூலம் புலப்பட்டிருக்கிறது. ம. இ. கா.வின் 481 கிளைகளைச் சேர்ந்த நிர்வாகிகளில் 94 சதவீதத்தினர் டான்ஸ்ரீயின் தலைமைத்துவத்தை வலுவாக ஆதரித்து நிற்கின்ற நிலையையும் நாம் அறிய முடிந்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ம. இ. கா.வில் ஜனநாயக மரபு நிலைநிறுத்தப்பட்டு மக்களின் நம்பிக்கையை அது மேலும் பெறுவதற்கும் வாய்ப்பு பிறந்திருக்கிறது.

நமது பலஇன சமுதாயத்தில் இந்திய சமூகம் தனது தேசியத் தலைவரை அரசியல் ரீதியில் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனம் காட்ட



பொருளாதாரம்

வே. மகேந்திரன், ஈப்போ

உரிமையற்ற நாட்டுக்குச் சஞ்சி யென்னும்
ஒப்பந்தம் பேசிவந்தோம் அந்த நாளில்
அரியதிற வுழைப்பாலே சொர்க்க பூமி
ஆக்கிவிட்டோம் இந்நாட்டை, பெருமை கொண்டோம்
உரியநலம் ஓங்குதற்கே நமக்கென் றிங்கோர்
உரமான அடிப்படையை அமைத்தோ மில்லை
உரிமைபெற்ற நாடான பின்னும் இங்கே
உரிமைதனைப் பயன்படுத்தத் தவறி விட்டோம்!

ஏற்றங்கள் ஒருபக்கம் தாழ்வோர் பக்கம்!
இந்நிலைதான் தொடர்ந்தால் நாட்டுக்கே வெட்கம்
மாற்றங்கள் வேண்டுமென்றே அரசாங் கத்தார்
மக்கள்நல் வாழ்வுயரத் திட்டம் தீட்டி
ஏற்றமுற நல்வாழ்வு, பொருளா தாரச்
சமத்துவத்தை எல்லார்க்கும் வழங்கு தற்கே
ஆற்றவரும் ஐந்தாண்டுத் திட்டம் நாட்டில்
அனைவர்க்கும் வாழ்வுயர்த்தும் அரிய திட்டம்

நிலத்திட்டம், தொழில்வளர்ச்சி, வேலை வாய்ப்பு,
நிலையான வீடமைப்பு, கல்வி மற்றும்
பலதிட்டம் கொண்டிங்கு பொருளா தாரப்
பலமிக்க புதியசமு தாயங் காணும்
நலமிக்க அரசாங்க நோக்கம் வெல்ல
நம்பங்கைத் தவறாமல் நாமும் சேர்த்துப்
பலமிக்க சமுதாய மாக நாமும்
பலதுறையும் சிறந்தோங்க வளர்ச்சி காண்போம்!

காற்றுள்ள போதேநாம் தூற்றிக் கொள்வோம்
காலத்தைப் பொன்போலப் போற்றிக் கொள்வோம்
நேற்றிருந்த நிலைமாறிப் பொருளா தார
நிமிர்ச்சிபெற விழிப்போடு வளர்ச்சி காண்போம்!
ஆற்றிலொரு கால்-மறுகால் சேற்றி லென்னும்
அவலநிலை ஐந்தாண்டுத் திட்டத் தாலே
மாற்றிடவே வாய்ப்புண்டு தவற விட்டால்
மறுபடியும் வாய்ப்பில்லை விழித்துக் கொள்வோம்!

அட்டைப்படம் : மாமன்

அலுவலகம்: 27-ஏ, ஜாலான் தம்பாப்பிள்ளை, பிரிக்பீல்ட்ஸ், கோலாலம்பூர் 09-05
தொலைபேசி எண்: 203552 (லிடோ தியேட்டருக்குப் பின்புறம்)

வேண்டியது இன்றியமையா தது. மற்ற சகோதர சமூகங் களும் அவற்றின் தலைவர்களும் ம. இ. கா.வில் நடந்த இந்த வாக்கெடுப்பை உன்னிப்பாகக் கவனித்திருப்பர். ஆளும் தேசிய முன்னணியில் இந்திய சமு தாயத்தைப் பிரதிநிதிக்கும் முக் கியப் பங்காளிக் கட்சி என்னும் முறையிலும் ● இத்தேர்தலின் முடிவுக்கு மிகுந்த முக்கியத்து வம் உண்டு. ம. இ. கா. கிளை களின் நிர்வாகிகள் தேசியத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் தங்களின் பொறுப்பை உணர்ந்து நடந்து கொண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறோம். இத் தேர்த லின் மூலம் ம. இ. காவின் தேசியத் தலைவர் டான் ஸ்ரீ மாணிக்கவாசகத்திற்கும் அதன் பலனாக ம. இ. கா. வுக்கும் ஒரு புதிய பலமும் உத்வேகமும் பிறந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம். இந்தப்புதியபலம் சமூகத்தின் பின்தங்கிய நிலையை மாற்றி தேச நிர்மாணத்தில் சமூ கம் பூரண பங்காற்றுவதற்கு ம. இ. கா. செய்யும் முயற்சிகளுக்குப் பக்கபலமாக அமையுமென்றும் நம்புகிறோம்.

மொரார்ஜியின் கோபம்

பாரத தேசத்தை உலுக்கிய தேர்தல் பூகம்பத்தில் இமயமலை போல் நிகரற்ற பலம் படைத்த வராகவும் அசைக்கமுடியாதவர் என்றும் கருதப்பட்டு வந்த பிரத மர் இந்திரா காந்தி தம் தொகுதி யில் தோற்றுத் தமது கட்சியும் படுமோசமான தோல்வியைத் தழுவி பிரதமர் பதவியை இழக்க நேர்ந்திருப்பது இந்திய அரசிய லில் அதிர்ச்சியூட்டுகிற திருப்ப மாகும், இமயம் இடம் பெயர்ந் தது போன்ற பிரளய மாற்றம் என்று இதனை வர்ணிப்பதும் பொருந்தும்.

இந்தியாவின் புதிய பிரதம ராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. மொரார்ஜி தேசாய் தமது ஜனதா கட்சிக்குப் பாரத மக்கள் வழங்கியிருக்கும் இந்த அமோக மான அதிகாரத்தையும் கட்டளை யையும் அந்த நாட்டின் சீரிய எதிர்காலத்திற்கு நன்கு பயன் படுத்திக்கொள்வாரென்று எதிர் பார்ப்பதில் தவறில்லை.

தேர்தல்வெற்றி தந்தஉற்சா கத்தில்மொரார்ஜி தேசாய்பெண் பிரதமர்கள் அனைவரையும் படு மோசமாகத் தாக்கிப் பேசி அர சியலில் பங்குபற்றும் மாதர் திலகங்களின் மனத்தில் ஒரு சலனத்தை ஏற்படுத்திவிட்டார். இந்திரா காந்தி மீது அவருக்கு அத்துணை கோபம்!

அதன் பிறகு இலங்கைப் பிரதமர் திருமதி பண்டார நாயகாவுக்கும் பிரிட்டனில் எதிர்காலத்தில் பிரதமராகக் கூடிய திருமதி தாட்சருக்கும் மன்னிப்புக் கோரிக் கடிதம் எழுதியிருக்கிறார் மொரார்ஜி. ஆனால் இந்தியாவில் யாரிடமும் தாம் இதற்காக "மன்னிப்பு" கேட்கப்போவதில்லை என்று அவர் தமது வழக்கமான பிடி வாதப் போக்கை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்.

இந்தியாவின் பிரதமர் பதவி என்பதுபிரமாண்டமானபொறு -ப்பாகும்.அப்படிக் கடினமான பொறுப்பை ஏற்றுக்கொண்டி ருக்கும் மொரார்ஜி பழைய பிரதமர் இந்திரா மீதோ மற்ற பெண் பிரதமர்கள் மீதோ அல் லது பெண் அரசியல்வாதிகள் மீதோ ஆத்திரப்படுவதற்கு இனி மேல் அவசியமும் இல்லை; அவ காசமும் இராது!

மனோகர் குழு

தமிழகத்திலிருந்து இங்கு வருகைபுரிந்து மாதக் கணக்கில் தங்களின் நாடகங்களை நடத்தி மலேசியமக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டுவிட்ட மனோ கர் நாடகக் குழுவிற்கு நமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். விரைந்து மாறு கிற பிரம்மாண்டமான காட்சி அமைப்புக்கள், பிரமிப்பூட்டும் தந்திரக் காட்சிகள், உன்னத மான நடிப்பு, புராதன இந்தியப் பண்பாட்டைப் புலப்படுத்தும் நாடக மாந்தர்கள் இவற்றின் மூலம் தமிழ் நாடகக் கலைக்கு மலேசிய மண்ணில் ஒரு தனிப் பெருமையை இக்குழுவினர் தேடித் தந்திருக்கின்றனர்.

மலேசியக் கலைஞர் இயக்கம் மனோகர் குழுவைச் சேர்ந்த 70 கலைஞர்களுக்கும் பாராட்டு விருந்து நடத்தி ஒவ்வொருவருக் கும் பதக்கம் வழங்கிச் சிறப் பித்தது மிகப் பொருத்தமே யாகும் மலேசியக்கலைஞர்களின் நெஞ்சங்களில் மனோகர் குழு பிடித்துக்கொண்டுவிட்ட பசு மையான இடம் இந்நிகழ்ச்சி மூலம் நன்கு புலனாயிற்று "நாட கப்பேரொளி" என்னும் விருதை யும் மலேசியக் கலைஞர்கள் "இலங்கேஸ்வரன்" மனோகருக்கு வழங்கி மகிழ்ந்தனர்; அதுமட்டு மன்றி தலைசிறந்த உள்நாட்டுக் கலைஞர்கள் தரமான கலை நிகழ்ச்சியொன்றை மனோகர் குழுவின் முன்னிலையில் படைத் தது பாராட்டுவிருந்தின் சிகரமாக அமைந்தது. இங்கு பல்லாற்றானும் பெருகி நிற்கும் கலைஞர் கூட்டம் மனோ கர் குழுவின் நாடகங்களுக்குக் கிட்டிய நிகரற்ற இவ்வெற்றி யின் பலனைக் கலைச்சேவையில் புதிய தெம்பையும் தெளிவை யும் வேகத்தையும் பெறுமென்று எதிர்பார்க்கிறோம் ●

செலவு முறை

ஒருநாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தர்மம் செய்வது பற் றிக் கட்டளையிட்டனர்.

அப்பொழுது ஒருவர் "நாய கமே! என்னிடம் ஒரு பொன் நாணயம் இருக்கிறது" என்றார். (அதுகேட்ட) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உமக்காக அத னைச் செலவழித்துக்கொள்ளும்" என்றனர்.

அவர் (மீண்டும்) "என்னிடம் மற்றொன்றும் இருக்கின்றது" என்றார். (அதுகேட்ட) அவர் கள், "உம் சந்ததியினருக்காக அதனைச் செலவழியும்" என்ற னர்.

அவர் (மீண்டும்) "என்னிடம் வேறொன்றும் இருக்கின்றது என்றார். (அதுகேட்ட) அண ணல் நபி (ஸல்) அவர்கள். "உம்முடைய மனைவிக்காக அத னைச் செலவழியும்" என்றனர்.

அவர் (மறுபடியும்) "என் னிடம் மற்றொன்றும் இருக் கிறது" என்றார். (அதுகேட்ட) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "உம்முடைய ஊழியருக்காக அதனைச் செலவழியும்" என்ற னர்.

அவர் மீண்டும் என்னிடம் "பிறிதொன்றும் இருக்கிறது" என்றார். (அதுகேட்ட) அண ணல் நபி (ஸல்) அவர்கள் "உமக்கு மேலாகத் தோன்றுபவ ருக்கு அதனைத் தர்மம் செய்யும்" என்றனர்.

— அல்ஹதீஸ்

பாராட்டியே தீருவேன்



குறை தீரும்!

அனைவரின் மனதையும் கவரும் வண்ணம் ஒரு பத்திரிகை இல்லையே என்னும் குறையைப் ''புதிய சமுதாயம்'' தீர்க்கும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. தேக்கமில்லை ஏற்படாமல் இதழைத் தொடரவும். தங்களின் சமுதாயப்பணி உயரவும் இறைவன் தங்களுக்கு அருள்புரிவானாக!

—புவான்ஸ்ரீ டத்தின் ஜானகி ஆதிநாகப்பன்,
தலைநகர்

எல்லாமே நன்று

"மலைநாடு கண்ட தமிழ் முனிவர்" கட்டுரையும் சிறுகதைகளும் பிற பகுதிகளும் மிக நன்று.

—ஆ. சு. மணியம், கோலாலம்பூர்

அதிகமாகப் புகழ்வது ஒரு வாசகனுக்கு அழகல்ல என்றாலும், மறைந்த திரு. கோ. சாரங்கபாணி, திரு ஆழி அருள்தாசன் ஆகியோரை இன்னமும் நினைவில் வைத்துக்கொண்டு அவர்களைக் கௌரவித்திருக்கும் "புதிய சமுதாயத்தின்" பண்பைப் பாராட்டாமல் இருக்க என்னால் முடியவில்லை.

—என். ராஜு, செந்தூல்

மணம்! மணம்!

தமிழ்க்கலை சொட்டும் சிறுமியின் முகப்புப் படமும், தமிழ் மணமும் மலேசிய மண்ணின் மணமும் கமழும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் யாவும் மனதுக்கும் அறிவுக்கும் விருந்தாக அமைந்துவிட்டன.

—எம். முத்தையா செட்டியார், தைப்பிங்

ஒசர்றதுக்கு ஒரு வழி

இதழ் வாங்கி ஒரு பக்கங்கூட உடாம பொரட்டிப் படிச்சு, சிந்திச்சிப் பாத்த பொறமே ஒணர்ந்தேன். இந்த மலநாட்டுல நம்ம தமிழவங்க ஒசந்து வளர்றதுக்கு ஒரு வழிகாட்டியா இந்தப் "புதிய சமுதாயத்"தைப் போல ஒரு பத்திரிகை எவ்வளவு முக்கியமுன்னு!

—அ. முனுசாமி மண்டோர், கிள்ளான்

வழிகாட்டுக!

தமிழோடு தமிழர் வாழும் வகைசெய்ய வழிகாட்டவேண்டும். இத்தகைய தமிழ்க் குடும்பங்களே "புதிய சமுதாயத்தின்" பல்கலைக்கழகங்கள்!

—இர. ச. வீரப்பன், கிள்ளான்

வாழ்க பல்லாண்டு!

அமிழ்தன்ன சுவைகூட்டி
அருந்தமிழ்க்குப் பொலிவூட்டி
அழகுநடை பயிலுமிதழ்
அவனியெலாம் பரவிநின்று
பழகுதமிழ்ப் பாவையெனப்
பல்லாண்டு வாழியவே

—காசிதாசன், கோலாலம்பூர்

வாரத்திற்கு ஒன்று

மாதம் இருமுறை என்பதைவிட வாரத்திற்கு ஓர் இதழ் என்பதே வரவேற்கத்தக்கது.

—வெ. வரதராசன், கப்பளா பத்தாஸ்

புதிய சமுதாயம்
(பிறை இதழ்)
ஒவ்வொரு மாதமும்
10, 25 தேதிகளில்
வெளிவரும்.

12 இதழ்	... ...	$ 6.00
26 இதழ்	... ...	$12.00
52 இதழ்	... ...	$23.00

'புதிய சமுதாயம்'
27A, ஜாலான் தம்பாப் பிள்ளை,
(லிடோ தியேட்டருக்குப் பின்புறம்)
கோலாலம்பூர்: 09-05.
போன்: 203552.

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

குறிஞ்சி மலர்ந்தது

நல்ல நோக்கங்கள்; உண்மையான இலட்சியங்கள்; திடமான நம்பிக்கைகள் என்றுமே தடைப்படுவதோ, தோற்பதோ இல்லை. இக்கூற்றை மெய்ப்பிக்க மலர்ந்திருப்பதே "புதிய சமுதாயம்" எனும் குறிஞ்சி மலர்.


—இளந்தமிழன், சுங்கை பூலோ

நூறு மார்க்!

நெஞ்சில் கைவைத்துச் சொல்லுகிறேன் சார், ''ராணிச் சிட்டை" ஒரே தடவையில் படித்துப் புரிந்துகொண்டேன். எனக்கு எத்தனை மார்க்?

—நா வீராசாமி, கோலாலம்பூர்

செந்தமிழ்ச் செல்வரின் மகள் திருமணம்



அமரர் "செந்தமிழ்ச் செல்வர்" சி. வி. குப்புசாமி அவர்களின் புதல்வி திருச்செல்வி சாந்தகுமாரிக்கும், ம இ.கா. தேசியப் பொருளாளர் திரு வி. ஜே பாலசுந்தரம் அவர்கள் சகோதரரின் திருச்செல்வன் பா ரங்கராஜுவுக்கும் 6—4—77 ஞாயிற்றுக்கிழமை, திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தேவான் பகாசா மண்டபத்தில் நிகழ்ந்த இத்திருமணத்திற்கு ஆயிரத்திற்கு மேற்பட்டோர் வந்திருந்தனர். மணமக்கள் இருவரும் "மாஸ்" நிறுவனத்தில் பணி புரிகின்றனர்.

இருள் அகன்றது

தமிழ்த்தாய்க்கும் சமூகத்திற்கும் தங்கள் சேவை கிடைக்காது போய்விடுமோ என்று தத்தளிக்கும் வேளையில் "புதிய சமுதாயம்" கலங்கரை விளக்கமாகத் தோன்றி இருளை அகற்றிவிட்டது.

—ரெ. தம்புராஜ், பாகான் செராய்

திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு

"புதிய சமுதாயம்" எப்படி இருக்குமோ என்று நினைத்திருந்தேன். முதல் இதழே ஆசிரியரின் திறமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துவிட்டது.

—என். குமரன் நாயர், புக்கிட் சிலாரோங் தோட்டம்

கத்தரிக்கோல்

வெறும் பத்திரிகையாக மட்டும் அல்லாமல் நம்மிடையே மலிந்துள்ள பிற்போக்குத்தனங்களைக் கத்தரிக்கின்ற கோலாகப் "புதிய சமுதாயம்" அமையவேண்டும். நிச்சயம் அமையும்.

—இரா. கலாராமு, மாசாய்

முயற்சியுடையார்...!

ஆசிரியரின் விடாமுயற்சியையும் உழைப்பையும் முதல் இதழிலேயே காண்கிறேன்.

—செல்வராஜு குமரன், கிள்ளான்

தாய்ப்பால்

பசும்பாலைவிட நம் குழந்தைகளிடத் தாய்ப்பால் தாய்மையான ஏற்ற உணவின் வளர்ச்சிக்கு நாற்றுக்கு நீரு உடல் உணவுமாகும். மிகுதியான உழைப்பு, போதிய வருத்தமுறவு. மனதில் கோளாறு, சரியான உறக்கமின்மை. தேவையான அளவு ஊட்டச்சத்தின்மை போன்ற பல காரணங்களால் தாய்மார்களுக்குப் பால் சுரக்காமல் போகலாம். பெற்றெடுத்த குழந்தைக்குத் தேவையான பால் ஊட்டவேண்டுமெனில் பசும்பால் கொடுப்பதைக் குறைத்துக்கொண்டு உணவையும் பழவகைகளையும் அதிகரித்து உண்ண வேண்டும். அப்படியும் பால் சுரக்கவில்லையெனில், பால்சுரப்பிகளில் ஏதும் கோளாறிருக்கலாம். தேர்ந்த மருத்துவரின் உதவியை நாடுவது அவசியம்.

அழகு

பெண்களுள் அழகற்றோர் எவரும் இலர்; நன்றாக ஒப்பனை செய்துகொள்ளத் தெரியாதவர்கள்தாம் பலர் உள்ளனர்.

—லா ப்ரூயேர்

மலேசிய மங்கையர்

வேலை செய்யும் நம் நாட்டுப் பெண்களுள் 57 விழுக்காட்டினர் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளனர். மூன்று விழுக்காட்டினர் குமாஸ்தா வேலையிலும், எட்டு விழுக்காட்டினர் அரசாங்கச் சேவையிலும், ஐந்து விழுக்காட்டினர் தொழில்நுட்பத்துறையிலும் நிபுணத்துவத்துறையிலும் இருந்துவருகின்றனர். முன்னேற்றம் கண்டுவரும் நாடுகளுள் குறிப்பிடத்தக்க ஒரு நாடாக நம் நாடு விளங்குவதற்குப் பெண்களின் இந்தத் தொழில் ஈடுபாடும் ஒரு காரணமாக இருக்கலாம் அல்லவா!



பெண்-பொன்

பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்

—பழமொழி

நல்ல பெண்

நல்ல பெண் அன்பு செலுத்துவோருக்கு அடிமையாகிறாள்; கணவனுக்கு நேர்மையான வாழ்வில் மேலாகிறாள்; பகைவர்களுக்கு நெருப்பாகிறாள்; பொறுமை காட்டுவதில் நிலமாகிறாள்; குடும்பத்தை நிர்வகிப்பதில் அமைச்சராகிறாள்; பிணங்கிக் கொள்ளும்போது கோங்குளிக்கும் கட்டளாகிறாள்; தாய்மையைப் பெற்றதின் மூலம் தெய்வமாகிறாள்!

துவையல்

கறிவேப்பிலைத் துவையல்

இஞ்சி, பூண்டு, பட்டமிளகாய், புளி, உப்பு ஆகியவற்றுடன் கறிவேப்பிலையை வதக்கி அரைத்த துவையல், குறைவாக உண்ணுபவர்களையும் மிகுதியாக உண்ணச்செய்யும்; கூந்தலைக் கருகருவென இருக்கச்செய்யும்.

இஞ்சித் துவையல்

சம அளவான இஞ்சி, பூண்டோடு தேவையான அளவு பட்டமிளகாய், சீனி, புளி, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து, கொதிக்கும் தேங்காயெண்ணெயில் கொட்டி எடுத்து டப்பாவில் அடைத்து வைத்துக்கொள்ளவும். தினமும் உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால் அஜீரணம், பித்த மயக்கம் போன்றவை தோன்றமாட்டா.

தூதுவளைத் துவையல்

கறிவேப்பிலைத் துவையல் போன்று இதனையும் தயாரிக்கலாம். இதைத் தொடர்ந்து உண்டுவந்தால் ஞாபகசக்தி பெருகும்; கபத்திற்கும் சிறந்த மருந்தாகும்.

—'தேவி'

புதுமைப்பெண்

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்;
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்;
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ!

—மகாகவி பாரதியார்

அப்பளம்

அப்பள டப்பாவில் ஐந்தாறு 'மேரி பிஸ்கெட்'டுகளைப் போட்டு வைத்தால் அப்பளம் விறைப்பாக மொடமொடவென்றிருக்கும்.

சந்தன மேனி

சந்தனத்தைத் தூள்செய்து இரவு வெண்ணெயில் சிறிதளவு வெந்நீரில் குழப்பி முகம், கைகளில் தடவி வந்தால் மாசு மறுவற்ற மென்மையான தோலுடன் கவர்ச்சியாகத் தோன்றலாம். விரைவில் பூசிக்கொள்ளலாம் இதன் முன்பு நாசாகும்.



இல்லத்தரசிகளே

உங்கள் கணவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் விமர்சனத்தை ஐம்பது சொற்களில் கட்டுச் செட்டாக, பட்டவர்த்தனமாக, சுவையாக எழுதி, உங்கள் இருவரின் நிழற்படத்தோடு 30-4-77-க்குள் எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் விமர்சனத்தை 10-5-77 இதழில் வாசகர்களுக்கு நாங்கள் தருவோம்.

மருதோன்றி

மருதோன்றி இலையுடன் சவர்க்காரம் கருஞ் சேர்த்து அரைத்துப் பூசினால் சொறி சிரங்கு, தேமல், படை, கால்வலி முதலியவற்றுக் கெல்லாம் இதுவேதான் மருந்து.

—சித்தர்க் காவலர் இ. ஆ. பெ. விசுவநாதம்

...அடர்த்தியாக

இரவில் உறங்கச் செல்லுமுன் புருவங்களிலும் இமைகளிலும் பசும்பாலைத் தடவிக்கொள்ளுங்கள்; உரோமம் அடர்த்தியாக வளரும்.



மாண்புமிகு துணையமைச்சர் சி. சுப்பிரமணியம்

"ருக்குன் தெத்தாங்கா" என்ருல் "டியூட்டி" நேரத்திற்குப் போவது, தங்கள் வட்டாரத்தைக் காவல் புரிவது, இரவு டியூட்டியாஞல் மறுநாள் லீவு எடுத்துக் கொள்வது- இவ்வளவுதான் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் இந்தப் பேட்டியைப் படித்த பிறகு அடடா, இத்துணை பெரிய லட்சியமும் நோக்கமும் உடைய ருக்குன் தெத்தாங்கா திட்டத்தைச் சாதாரணமாகக் கருதிவிட்டோமோ என்று வருந்தும்படி நேரிடலாம்.

ஆமாம்! அத்துணை உயர்ந்த லட்சியத்தையும் குறிக்கோள்களையும் கொண்டது ருக்குன் தெத்தாங்கா என்பது அத்துறைக்கு முழுப் பொறுப்பேற்றுள்ள பிரதமர்துறையின் துணையமைச்சர் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களை ருக்குன் தெத்தாங்கா சம்பந்தமாகப் பேட்டி கண்டபோது வெளிப்பட்டது.

சிறு சிறு வழிப்பறிகள், கொள்ளைகள், கம்யூனிச ஊடுருவல்கள் முதலான தீய சக்திகளின் நடமாட்டங்களை ஒழிக்கத்தானே ருக்குன் தெத்தாங்கா திட்டத்தை அமரர் துன் அப்துல் ரசாக் அறிமுகப்படுத்திஞர்?

இப்படிக் கேட்ட என்னைப் பார்த்து ஓர் இளநகை புரிந்துவிட்டுத் துணையமைச்சர் சுப்பிரமணியம்கூறிஞர். "அது வெளிப்படையான சாதாரணமான நோக்கம். நமது நாட்டில் எத்தனையோ தொண்டு நிறுவனங்கள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் குறிப்பிட்ட சிலர் மட்டுமே இருக்கின்ருர்கள். மக்களில் எல்லாரும் இன, மத, மொழி வேறுபாடின்றி இன்னும் சொல்லப்போனல் கட்சி வேறுபாடின்றியும்கூட இருக்கும் ஓர் இயக்கம் ருக்குன் தெத்தாங்கா ஒன்றுதான்.

ஒவ்வொருவரும் தத்தம் இனத்திற்கும், மதத்திற்கும் தனிப்பட்ட கொள்கைக்கும், தான் சார்ந்துள்ள கட்சிஅல்லது பொது இயக்கக் கொள்கைக்கும் அப்பாற்பட்டு நாட்டுப் பாதுகாப்புக்கு அதிலும் குறிப்பாகத் தத்தம் பாதுகாப்புக்குஒன்றித்த மனத்தோடு ஒத்துழைக்கும் சாத்தியம் ருக்குன் தெத்தாங்காவின் மூலமே ஏற்படுகிறது"

உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினில் தெளிவுண்டாகும் என்பதற்கொப்ப ருக்குன் தெத்தாங்கா கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கரைத்துக் குடித்திருப்பதனுலோ என்னவோ தங்குதடையின்றிக் கூறி வந்த துணையமைச்சர் சுப்பிரமணியத்தின் பேச்சு இடையில் தடைப்பட்டது. ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

"கிராமப் புறங்களிலும் தோட்டப்புறங்களிலும் மக்கள் ஒருவரை ஒருவர் தெரிந்துவைத்திருப்பது வழக்கம். நகரங்களில் பக்கத்து விட்டுக்காரரின் முகம் கறுப்பா சிவப்பா என்பதையே அறியாதவர்கள் அநேகம் பேர் உள்ளனர். இந்த ருக்குன் தெத்தாங்கா மூலம் இப்போது ஒவ்வொருவரும்தங்கள்பக்கத்து வீட்டுக்காரர் முகத்தை மட்டுமல்ல, தத்தம் வட்டாரத்தில் குடியிருக்கும் அத்தனை பேரையும் அறிந்து வைத்திருக்கின்றனர்."

"இந்தச்சூழலிஞல் யார்யார் எப்படிப்பட்டவர் என்பது எல்லோருக்கும் தெரிகிறது. அதுமட்டுமா அவர்கள் கண்களில் படாமல் எந்த ஓர் ஈ, காக்காய்கூட அவர்கள் வட்டாரத்தில் நுழைய முடியாது......" இதற்கும் மேலாக மக்களிடையேசகோதரத்துவ உணர்ச்சியும் ஒருமைப்பாடும் பிரச்சாரம் செய்யாமலேயே உண்டாகிறது. ஒருமைப்பாடுதானே நாட்டின் வலுவான ஆட்சிக்கு உறுதிப்பாடு........"

துணையமைச்சர் சுப்பிரமணியம் இவ்வாறுகூறியபோது ருக்குன்தெத்தாங்கா திட்டத்தை உருவாக்கிய அமரர் துன் ரசாக் அவர்களை எனது மனம் மானசீகமாக நினைத்து வணங்கியது. "ஒற்றுமைத் தந்தை" என்று அவர் அழைக்கப்பட்டது எத்துணைப் பொருத்தம்...நான் நினைத்ததற்கேற்ப திரு. சுப்பிரமணியமும் அப்போது துன் ரசாக் அவர்களை வாயாரப் புகழ்ந்தார்; மனமாரப் பாராட்டிஞர்.

"ருக்குன்தெத்தாங்காநிலையம் கட்டுவதற்கும், அதன்நிர்வாகச் செலவுக்கும் அரசாங்கப் பணம் தானே பயன்படுகிறது?"

இந்தக் கேள்வியைக்கேட்டு நான் வாய்கூட மூடவில்லை.

பார்த்தசன்

மக்களை இணைக்கும் ருக்குன் தெத்தாங்கா

அவர் சடாரென்று இடைமறித்ததோடு பதிலும் சொன்னார்.

"அரசாங்கத்தின் பணம் சல்லிக்காசு கூட இதற்குச் செலவிடப்படவில்லை.

"இன்னும் ஒரு முக்கியமான பயனை இத்திட்டத்திலிருந்து மக்கள் பெறுகின்றனர்!" என்றார் திரு. சுப்பிரமணியம்.

"அது என்ன?" ஆவலுடன் வினவினேன்.

"அதுதான் தொலைபேசி வசதி. முன்பெல்லாம் பொது இடங்களில் வைக்கப்பட்ட பொதுத் தொலைபேசி நிலையங்கள் குடிமை உணர்வு அற்ற சிலரால் பாழடிக்கப்பட்டன. இதனால்அவசரத் தொடர்புக்கு மக்கள் பட்ட அவதி சொல்லி முடியாது. இப்போது அது தீர்ந்தது.

பிரிக்பில்ட்ஸ் வட்டாரத்தில் பாட்மிண்டன் விளையாடக் கூடத் தளம் அமைத்திருக்கின்றனர். இப்படிக் காவல் பணிக்கு அப்பாற்பட்ட பொதுப் பணிகளையும் ருக்குன் தெத்தாங்கா உறுப்பினர்கள் செய்கின்றனர்.

"கடமையில் ஈடுபட்டிருக்கும் போது ஒரு ருக்குன் தெத்தாங்கா உறுப்பினர் அடிபட்டு இறக்க நேர்ந்தால் அல்லது வேலை செய்ய முடியாத நிலையை அடைந்தால் அவருக்கு அரசாங்கம் ஏதும் இழப்பீடு வழங்குமா?" என்று கேட்டேன்.

"நிச்சயமாக" என்று கூறிய துணையமைச்சர் அது பல பிரிவுகளாய்ப் பகுக்கப் பட்டுள்ளது என்றதோடு அதன்முழு விவரத்தையும் சொல்லத் துவங்கினார்

"வேலை செய்யும் ஒருவர் கடமையில் ஈடுபட்டிருக்கும்போது அடிபட்டு இறக்க நேர்ந்தால் அவருக்கு 48 மாதச் சம்பளம் அல்லது கூடிய பட்சம் $9,600 இழப்பீடாக வழங்கப்படும்; வேலை செய்ய முடியாத அளவுக்கு நிரந்தரப் பாதிப்புக்கு உட்படுவாரானால் 36 மாதச் சம்பளம் அல்லது கூடிய பட்சம் $7,200 வழங்கப்படும். வேலை செய்யாத ஒருவருக்கு நிரந்தரப் பாதிப்பு ஏற்பட்டால் அவருக்கும் இதேபோல 36 மாதச் சம்பளம் அல்லது கூடிய தொகை $7,200 வழங்கப்படும்.

தற்காலிகப் பாதிப்புக்கு உள்ளான வேலை செய்யும் ஒருவருக்கு அரை மாதச் (15 நாள்) சம்பளம் அல்லது கூடிய பட்சம் $50 வழங்கப்படும். இதே போன்ற தற்காலிகமான பாதிப்புக்கு உட்பட்ட வேலையில்லாத ஒருவருக்கு $25 வழங்கப்படும்" என்றார் திரு. சுப்பிரமணியம்.

"ஒரு சந்தேகம்! வேலை செய்யும் ஒருவர் அடிபட்டு இறந்தால் $9,600 இழப்பீடு வழங்கப்படுவதாகக் கூறினீர்கள். அதைப்போல இறக்க நேரும், வேலை செய்யாத ஒருவருக்கு வழங்கப்படும் இழப்பீடு எவ்வளவு என்பதைத் தாங்கள் கூறவில்லையே"—நான் எனது சந்தேகத்தை எழுப்பினேன்.

துணையமைச்சர் சுப்பிரமணியம் மேசையின் மீதிருந்த ஒரு பொத்தானை அழுத்தினார். அதைத் தொடர்ந்து சிப்பந்தி ஒருவர் விரைந்து நாங்கள் இருந்த அறைக்குள் நுழைந்தார். அவரிடம் ருக்குன் தெத்தாங்கா விதிமுறைகளின் குறிப்பேட்டைக் கொண்டுவரும்படி திரு. சுப்பிரமணியம் கூறினார்.

சிப்பந்தி கொண்டுவந்த அந்தக் குறிப்பேட்டை மிகவும் உன்னிப்பாய்ப் படித்த பின்னர் துணையமைச்சர் கூறப்போகும் பதிலை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தேன் நான்!. "அதைப்பற்றி எந்தக் குறிப்பும் இதில் இல்லை" என்று அவர் கூறியதைக் கேட்ட எனக்கு வியப்பாக இருந்தது.

"வேலை செய்பவர் இறந்தால் அவருக்கு இழப்பீடு வழங்கும் போது வேலை செய்யாதவர் இறந்தால் அவருக்கு ஏன் இழப்பீடு வழங்கக் கூடாது" என அவரிடம் வினவினேன்.

"உங்கள் கேள்வியில் நியாயம் இருக்கிறது. ஆனால் தமது சம்பாத்தியத்தில் குடும்பத்தைப் பராமரித்து வந்தவர் வேலை செய்தவர், ஆகவே அவர் இறந்து போன பிறகு அவருடைய குடும்பத்திற்கு அவரால் கிடைத்து வந்த உதவியைச் சரிக்கட்ட அந்த இழப்பீடு வழங்கப்படுகிறது. ஆனால் வேலை செய்யாதவரின் நிலை அவ்வாறல்ல! அவரால் அவரது குடும்பத்திற்குச் சம்பாத்தியம் கிடைத்து வரவில்லை. சுருங்கச் சொன்னால் அவரை நம்பி யாரும் வாழவில்லை என்பது தெளிவாகிறது. அதனால்தான் வேலை செய்யாதவர் ருக்குன் தெத்தாங்கா கடமையில் ஈடுபட்டிருந்தபோது இறந்தால் இழப்பீடு வழங்கப்படுவதில்லை."

துணையமைச்சரின் இந்த விளக்கத்தில் எனக்கு மேலும் ஒரு சந்தேகம் எழும்பியது.

"கடமையில் ஈடுபட்ட வேளையில் இறக்க நேர்ந்த ஒருவர், அதற்கும் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பு தர்ப்ப சூழ்நிலையினால் தாம் செய்துவந்த வேலையிலிருந்து நின்றுவிட்டு, குடும்பத்தைக் காப்பாற்ற வேறு வேலை தேடிக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். தங்களின் விளக்கப்படி பார்த்தால் இறந்த போது வேலை செய்யாதவர் என்பதற்காக அவருக்கும் அல்லவா இழப்பீடு கிடைக்காமல் போகிறது. அது அத்துணைப் பொருத்தமாக இல்லையே? ஏனென்றால் அவரை நம்பித்தானே அவரது வீட்டில் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது". எனது கருத்து துணையமைச்சருக்கு உடன்பாடுபோல் தோன்றியிருக்க வேண்டும். சிறிது நேரம் மௌனமாக இருந்தார்; யோசித்தார். பிறகு பேசினார்.

"உங்கள் கருத்து பரிசீலிக்கப்படவேண்டிய கருத்து. ஆகவே பரிசீலித்த பிறகுதான் அதற்கு முடிவு சொல்ல முடியும். இப்போதைக்கு அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை".

தியாக உணர்வு உள்ளவர்களுக்கு இந்த இழப்பீடு விவகாரம் பெரிதல்ல. என்றாலும் ருக்குன் தெத்தாங்கா வீரரை நம்பியிருக்கும் குடும்பத்திற்கு உதவும் அரசாங்கத்தின் நோக்கத்தில் ஏதும் குறைவந்துவிடக்கூடாதல்லவா? அதனால்தான் துணையமைச்சரிடம் அந்தப் பிரச்னையை எழுப்பினேன்.

பொதுவாக எல்லோரையும் இணைக்கும் ருக்குன் தெத்தாங்கா திட்டம் மக்களிடையே வலுவான ஒருமைப்பாட்டையும், நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும் உருவாக்குவதில் கணிசமான பங்காற்றும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமேஇல்லை. உங்களுக்கு மட்டும் இருக்கவா போகிறது?

மலேசிய மொழித் தேர்வில் வெற்றி பெற வழிமுறைகள்

எஸ்.பி.எம்./எம்.சி.இ. தேர்வு எழுதவிருக்கும் மாணவர்கள் மலேசியமொழியில் சிறப்பான தேர்ச்சிபெறச் சில வழிமுறைகளையும், உத்திகளையும் தெரிந்துகொள்வது அவசியம்

மலேசியமொழித் தேர்வுக்கு ஆயத்தப்படுத்தும் கட்டுரைத்தொடர் அடுத்த இதழிலிருந்து [25—4—1977] துவங்குகிறது.

கலையுலக வினா விடை

வி. ராமசாமி, கோலாலம்பூர்

கே: கோலாலம்பூரில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளின் தரம் எப்படி இருக்கிறது?

ப: உயர்ந்திருக்கிறது. என்றாலும் நாம் திருப்தியடைந்து விடக்கூடாது. தொடர்ந்து தரத்தை உயர்த்தும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

க. அர்ச்சுனன், பத்தாங் பெர்ஜுந்தை

கே: டி. ஆர். மகாலிங்கம் எந்தப் படத்திலாவது நடித்துக்கொண்டிருக்கிருரா?

ப: அப்படி ஏதும் தெரியவில்லை.

சி. குப்புசாமி, சுங்கைப்பட்டாணி

கே: சினிமாவில் நடிப்பவர்கள் கலையை வளர்ப்பதாகக் கூறுகிருர்களே அதை ஏற்றுக் கொள்ளலாமா?

ப: அவர்களால் கலை வளர்கிறதோ இல்லையோ அவர்கள் வளர்கிருர்கள்.

கே: சிவாஜியும் எம். ஜி. ஆரும் கூடிக் குலாவுகிருர்களே......

ப: கவலைப்படாதீர்கள். மீண்டும் பிரிவதால் வரவு கூடுமென்ருல் பிரிந்து விடுவார்கள்.

கே: ஆர். எஸ். மனோகரின் நாடங்கள் எப்படி?

ப: டி. கே. எஸ். நாடகங்களுக்குப் பிறகு மனோகரின் நாடகங்களே பிரமிக்கத்தக்க வகையில் இருந்தன. மற்ற இனத்தவர்களும் கண்டு மூக்கின் மேல் விரல் வைக்கும் அளவுக்கு காட்சி அமைப்புகள் இருந்தன. இது நமக்கெல்லாம் பெருமைதான். மனோகரின் எல்லா நாடகங்களுமே பார்த்து ரசிக்கத் தக்கவை. இவரின் நாடகங்கள் அனைத்தும் அரிய கலைச்செல்வங்கள்.

கே: புதிய நடிகைகளில் சுஜாதாவை அடுத்து முன்னணியில் நிற்பவர் யார்?

ப: ஸ்ரீபிரியாதான் அடுத்து வேகமாக வளர்ந்து வருகிருர்.

எம். சுலோசனு, பினங்கு

கே: சமீபத்தில் வந்த படங்களில் எந்தப் பாட்டு பிரபலமாகியிருக்கிறது?

ப: "அன்னக்கிளி"யில் ஒலித்த மச்சானைப் பார்த்தீங்களா "மலைவாழைத் தோப்புக்குள்ளே!" பிரபலமாகியிருக்கிறது. உங்களுக்குப் பிடிக்கிறதா?

ஏமுமலை, ஈப்போ

கே: சிவாஜி கணேசன் படங்களில் நடிப்பதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தார்? அவர் நடித்த முதல் படம் எது?

ப: பல படங்களில் நடிப்பதற்கு முன் சிவாஜி கணேசன் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். அவர் நடித்த முதல் படம் பராசக்தி. அதிலேயே அவர் நல்ல நடிகர் என்பதைக் காட்டிவிட்டார்.

சி. அருணசலம், கோலாலம்பூர்

கே: நடிகை ஸ்ரீவித்யாவுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?

ப: மலையாளப் பட அதிபர் ஒருவரை மணந்து கொள்ளப்போவதாக செய்தி அடிபடுகிறது.

த. ஆறுமுகம், மலாக்கா

கே: ஜெமினி கணேசனின் மகள் ரேகா தமிழ்ப் படம் எதிலும் நடிக்கிருரா?

ப: இதுவரை அவர் தமிழ்ப்படம் எதிலும் நடிக்கவில்லை.



இந்த முகத்தைப் பார்க்க ஒரு தடையும் இல்லை என்று லட்சுமி கூறிவிட்டால் முத்துராமன் பல் தெரியக் காரணம் வேறு வேண்டுமா?

திரை: சீர்வரிசை

கவிதா பேசுகிருர்



தமிழ் நடிகைகளிலேயே மிகவும் இளையவர் கவிதாதான். பிரபல டைரக்டர் ஸ்ரீதர் கண்டெடுத்த நல்முத்து இவர். அவருடைய "ஓ மஞ்சு" படத்தின் மூலம் தமிழ்ப்பட ரசிகர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டார்!

"ஓ மஞ்சு" படம் வெற்றி கண்டதோ இல்லையோ ஆனல் அதில் கதாநாயகியாக நடித்த கவிதாவுக்குப் பட ஒப்பந்தங்கள் குவிந்து வருகின்றன! இன்று அவர் பல படங்களில் கதாநாயகி! முதல் படத்தில் நடித்தபோது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் மற்றும் பல ருசியான தகவல்களையும் அவரே கூறுகிருர்.

"இப்போது நான் ஐந்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன் என்ருல் அதற்கு டைரக்டர் ஸ்ரீதர் அவர்கள்தான் காரணம்! "ஓ மஞ்சு" படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது அவரிடம் பெற்ற நடிப்புப் பயிற்சியால்தான் இன்றுநான் முன்னணி டைரக்டர்கள் பலர் டைரக்ட் செய்யும் பல திரைப்படங்களில் திறமையாக நடிக்க முடிகிறது!

புதுமை டைரக்டர் எஸ்.பி. முத்துராமன் துணிந்து மிகவும் பிரமாதமான நடிப்புத் திறமையைக் காட்டவேண்டிய ஒரு வேடத்தைத் தந்து "காற்றினிலே வரும் கீதம்" என்ற படத்தில் என்னை நடிக்க வைத்துக் கொண்டிருக்கிருர்!

டைரக்டர் ஸ்ரீதர் அவர்களிடம் வெறும் நன்றி மட்டுமல்ல, பக்தியும் வைத்திருக்கிறேன். இன்றைக்கும் எந்தப் புதுப் படம் வந்தாலும் அவரிடம் ஆசி பெற்ற பிறகுதான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவேன். அப்படி நான் அவருடைய வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டு ஒப்பந்தம் ஆன முதல் படம் "காலமடி காலம்". இதில் ஜெய்சங்கர் அவர்களுடன் ஜோடியாக நடிக்கிறேன். படத்தின் டைரக்டர் கோபு அவர்கள் எனக்காக தனி அக்கறையுடன் ஒவ்வொரு காட்சியிலும் நடிக்கக் கற்றுக்கொடுக்கிருர். ஜெய்சங்கர் என்னுடன் கலகலப்பாகப் பேசிப் பழகி என்னுடைய கூச்சம் பயம் எல்லாவற்றையும் போக்கிவிட்டார்.

நடிகர் முத்துராமன் அவர்களும் செட்டில் ரொம்ப கலகலப்பாக இருப்பார். விடுகதை எல்லாம் போடுவார்! போரடிக்காது! இப்படி இருந்தால்தான் எனக்குப் பிடிக்கும்.

"டைரக்டர் ஸ்ரீதர் அவர்களின் கண்டுபிடிப்பு ஒருநாளும் சோடை போனது இல்லை". என்ற பெயரை நானும் காப்பாற்றிக்கொள்ள, சிறந்தடைரக்டர்களான எஸ். பி. முத்துராமன், துரை, கோபு போன்றவர்களின் அனுபவமிக்க டைரக்‌ஷன் எனக்கு உதவும்! தேர்ந்த கலைஞர்களான முத்துராமன், ஜெய்சங்கர், ஸ்ரீகாந்த் போன்றவர்களுடன் செட்டில் நடிக்கும் போது அவர்கள் நடிக்கச் சொல்லிக் கொடுப்பது எனக்குத் கிடைத்த பெரும் பேருகக் கருதுகிறேன்! இப்போது நான் நடிக்கும் படங்களில் விதவிதமான கேரக்டர்களை ஏற்று நடிப்பதால் ரசிகப் பெருமக்களிடம் நல்ல நடிகை என்று பெயரெடுக்க முடியும் என்று பூரணமாக நம்புகிறேன்!

சிந்தையில் நிற்கும் சிவனடியார்கள்

சித்தாந்த வித்தகர்
முரு. பழ. இரத்தினம் செட்டியார்

1. சுந்தரர் வரலாறு

பெரிய புராணத்தில் முதன் முதல் சுந்தரர் வரலாற்றினைச் சொல்லியே ஏனை நாயன்மார் வரலாறுகளைச் சேக்கிழார் கூறுகிறார். அதற்குமுன் காவிய இலக்கணப்படி, "பாயிரம், திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு" மனுநீதி கண்ட புராணம், திருக்கூட்டச் சிறப்பு" ஆகிய ஐந்தையும் சுவைமிகச் சொல்லுகிறார்.

2. பெரிய புராணக் காப்பு

முதன் முதல் அம்பலவாணர் எடுத்துக் கொடுத்த "உலகெலாம்" என்னும் அடியைக் கொண்டு காப்புப் பாடுகிறார்.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

3. கடவுள் இலக்கணம்

சைவம் கடவுள்ஒருவரே எனக்கொள்கிறது அவர்க்கு எவ்வித உருவமும் இல்லை. உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்றையும் அவர் கடந்தவர். அவரை நாம் அறிவு கொண்டு உணர்ந்து ஓதமுடியாது; அவர் திருவருள்துணை கொண்டுதான் உணரவும் ஓதவும் முடியும். காணவும் கருதவும் முடியாத கடவுள் நம் பொருட்டு அருவம், அருஉருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனியும் கொள்கிறார். அருவமாக ஒவ்வொரு பொருளிலும் நிறைந்திருக்கிறார்; அருஉருவமாகச் சிவலிங்கத் திருமேனியில் நமக்குக் காட்சி தருகிறார், உருவமாக நடராஜர், சோமாஸ்கந்தர், உமாமகேஸ்வரர் முதலிய திருமேனிகளில் புலப்படுகிறார். இவ்வுருவத் திருமேனிகளை வழிபட்டு நாம் அவனருள் துணையால் அருவமும், உருவமும், அருஉருவமும் ஆகிய மூன்றும் கடந்த அவன் சொருபத் திருமேனியை தரிசித்துப் பேரின்பப் பெருவாழ்வு எய்தலாம். இதனையே சேக்கிழார் பெருமான இந்தக் காப்புச் செய்யுளில் கூறி அருளியிருக்கிறார்.

4. கயிலையில் சுந்தரர்

இமயமலைக்குப் பக்கத்தில் பூலோக கயிலாய கிரி உள்ளது. இதைப்போலவே சூக்கும உலகில் சிவலோகம் இருக்கின்றது. அங்கிருக்கின்ற கயிலாயம் நுண்ணிய கயிலாயமாகும். அக்கயிலையில் இருப்பவர்கள், நுண்ணிய தேகம் உள்ள ஆன்மாக்களாவர். அவர்கள் நம்மைவிடத் தூயவராதலால் கடவுளின் உருவத் திருமேனியை என்றும் கண்டு களித்துக் கொண்டிருப்பார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் முந்திய பிறப்பில் ஆலால சுந்தரர் என்னும் பெயரில் இந்தத் தூய கயிலையில் சிவபெருமானின் உருவத் திருமேனியைக் கண்டு களித்து அத்திருமேனிக்கு நெருங்கிய தொண்டராக இருந்து பணியாற்றி வந்தார். இதேபோல உமாதேவியார்க்குப் பணியாற்றும் பல தொண்டர்களுமிருந்தனர். அவருள் அனிந்திதை, கமலினி என்ற இரு சேடியர் இருந்தனர்.

5. பூக்கொய்யச் செல்லுதல்

ஒருநாள் ஆலால சுந்தரர் சிவபெருமானை வழிபடுவதற்காகப் பூக்கொய்யச் சென்றார். அனிந்திதை, கமலினி என்னும் இரு சேடியரும் உமா தேவியாரை வழிபடுவதற்காகப் பூக்கொய்யச் சென்றனர்.

6. காதல் தோற்றம்

பூக்கொய்ய வந்த இரு சேடியர்களையும் சுந்தரர் கண்டார். அவர் உள்ளம் அவர்களிடத்தே சிறிது சென்றது. இருப்பினும் மனத்தை அடக்கிக்கொண்டு வழிபாட்டிற்கு வேண்டிய பூக்களைக் கொய்து திரும்பினார். சேடியரும் அது போலப் பூக்கொய்து திரும்பினர்.

7. சுந்தரர் அவதாரம்

சிவபெருமான் சுந்தரர் நிலையை நோக்கினார். "மாதரிடத்தே உன் மனம் சென்றதால் பூலோகத்தில் பிறந்து அம்மாதருடன் வாழ்ந்து மீண்டும் இங்கு வருக" என இறைவன் சுந்தரர்க்கு ஆணை பிறப்பித்தார். சுந்தரர் திடுக்கிட்டுப் போனார். "என் பிழையை மன்னித்தருளவேண்டும். நான் மனிதனாகப் பிறந்து மயங்கும் பொழுது தேவரீர்வந்து ஆட்கொளல்வேண்டும்" என இறைவனை அவர் வேண்டினார். இறைவனும் அவ்வாறே அருள் செய்தார். சுந்தரர் பூலோகத்தில் வந்து பிறந்தார். அனிந்திதை, கமலினி ஆகிய இரு சேடியரும் அதுபோல் வந்து பிறந்தனர். சுந்தரர் அவர்கள் இருவரையும் மணம் செய்துகொண்டு, திருத்தலங்கள்தோறும் சென்று இறைவனைப் பாடி மீண்டும் கயிலை வந்தடைந்தார். அவர் பூலோகத்திலிருந்தபோது பாடிய திருப்பதிகங்கள்தாம் ஏழாம் திருமுறையில் உள்ள தேவாரத் திருப்பதிகங்களாகும். அத்திருப்பதிகங்களில் ஒன்று திருத்தொண்டத் தொகை; அத்திருத்தொண்டத் தொகையில் நாயன்மார் வரலாறுகளைக் குறிப்பாகச் சொல்லுகிறார். அக்குறிப்பின் துணைகொண்டு நம்பியாண்டார் நம்பி சிறிது விரிவாக அந்தாதி செய்தார். சேக்கிழார் இவ்விரண்டு அருள் வாக்குகளையும் துணையாகக்கொண்டு பெரிய புராணத்தை மிக விரிவாகப் பாடியருளினார். சுந்தரர் மீண்டும் கயிலைக்குச் சென்றபோது உபமன்னியு முனிவர் அவரின் பேரொளியைக் கண்டு உவகையுற்றுத் தலை வணங்கி அங்குள்ள முனிவர்கட்குச் சுந்தரர் வரலாற்றை இனிது எடுத்துக் கூறினர். இந்த விவரங்களைச் சேக்கிழார், "திருமலைச் சிறப்பு" என்னும் தலைப்பில் முதன்முதல் பெரிய புராணத்தில் கூறுகிறார். இதுதான் பெரிய புராணத் துவக்கமாகும்.

8. பெரிய புராணம் தமிழ் நூலே

தமிழில் உள்ள புராணங்கள் அனைத்தும் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்தவையாகும். பெரிய புராணம் மட்டுமே தமிழில் தோன்றிய புராணமாகும். அதற்கு மூலம் சுந்தரரின் திருத்தொண்டத் தொகையும், நம்பி ஆண்டார் நம்பி திருஅந்தாதியுமாகும். தனித் தமிழ் நூலாகிய பெரிய புராணத்தை இனி நாம் வரிசைக் கிரமமாகத் தொடர்ந்து நோக்குவோம்.

தமிழ்கூறும் நல்லுலகத்தின் பிரபல நாவலாசிரியர் அகிலன் அவர்கள் மலேசியாவுக்கு 1975ம் ஆண்டு வருகை புரிந்தபின்னர் "பால்மரக் காட்டினிலே......" என்னும் இத் தொடர்கதையைக் கலைமகள் இதழில் 1976 ஜனவரி முதல் டிசம்பர் வரையில் எழுதி வந்திருக்கிறார்.

நமது தோட்டப்புறச் சூழ்நிலையையும் தோட்டப் பாட்டாளிகளின் வாழ்க்கையையும் மையமாகக்கொண்டு தீட்டப்பட்டிருக்கும் இக்கதையை மலேசிய வாசகர்களின் பார்வைக்கு வைக்க வேண்டும் என்னும் காரணத்துக்காகக் கலைமகள் இதழிலிருந்து எடுத்து அகிலன் அவர்களின் அனுமதியோடு வெளியிடுகிறோம்.

அகிலன் அவர்கட்கும் கலைமகள் பத்திரிகைக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



அகிலன்



பால்மரக் காட்டினிலே

காட்டுக்குள் நுழையுமுன்

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பைப் பெற்று, சென்ற மே-ஜூன் மாதங்களில் மலேசியாவில் நான்கு வாரங்களும் சிங்கப்பூரில் ஒரு வாரமும் சுற்றுப்பயணம் செய்துவந்தேன். அங்கே செல்வதற்கு முன்பே மலேசியத் தமிழர்களைப்பற்றி-குறிப்பாக ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களாக வாழும் தமிழர்களைப்பற்றி அறிந்துகொள்ளும் ஆவல் எனக்கு ஏற்பட்டிருந்தது. மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சிலர் எழுதிய கதைகளில் அந்த ரப்பர் தோட்டத்து மண்ணின் மணம் கமழக்கண்டேன். அது என் ஆவலை மேலும் தூண்டிவிட்டது.

மலேசியாவுக்கு நான் சென்றபோது வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமான ஏதாவது ஒரு தோட்டத்தில் சில நாட்களாவது தங்கியிருக்க விரும்பினேன். தொழிலாளர் வாழ்க்கையை உடன் இருந்து கவனிக்கவேண்டும் என்ற விருப்பம் எனக்கு. அது அப்படியே நிறைவேறாவிட்டாலும், மூன்று நான்கு தோட்டங்களில் சுற்றிப் பார்த்து அவர்கள் வாழ்க்கை நிலையை ஓரளவு தெரிந்துகொள்ள முடிந்தது. கண்டு, கேட்டு, படித்து எவ்வாறெல்லாம் அறிந்துகொள்ள முடியுமோ அவ்வாறெல்லாம் அறிந்துகொள்ள முயன்றேன்.

இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்கள், இந்திய நாட்டிலுள்ள சில காபி-தேயிலைத் தோட்டங்கள் இவற்றிலிருந்தெல்லாம் ஓரளவு மாறுபட்டவை, மலேசியாவில் உள்ள ரப்பர்த் தோட்டங்கள். சில அடிப்படை அமைப்பு முறைகளில் வேண்டுமானால் ஒற்றுமை இருக்கக்கூடும். மலேசிய ரப்பர்த் தோட்டங்களுக்கென்று சில தனிப் பிரச்னைகள் உள்ளன.

இன்று பெரும்பாலான ரப்பர்த் தோட்டத் தொழிலாளர் மலேசியக் குடிகளானாலும், அவர்களுடைய மூதாதையர் அனைவருமே இந்திய மண்ணிலிருந்து அந்த மண்ணுக்குக் குடிபெயர்ந்தவர்கள். ஆங்கிலேயத் தோட்ட முதலாளிகளின் தூண்டுதலின் பேரில் அங்கு ஒப்பந்தக்கூலிகளாய் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். இன்று அங்கு உருவாகி வளர்ந்துவரும் இளைய பரம்பரை அந்த மண்ணையே சொந்த மண் என்று போற்றும் பரம்பரை.

இங்கிருந்து சிலர் தொழில் நடத்தவும், வாணிகம் செய்யவும், உத்தியோகம் பார்க்கவும் அங்கே சென்றுள்ளார்கள் என்றாலும், அவர்கள் சரியாக வேரூன்றாதவர்கள். இளம் தலைமுறையினரான தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பாலோருக்கு இந்தியாவுடன் எந்தத் தொடர்பும் கிடையாது. அங்கேயே ஆழமாக வேரூன்றி, நாட்டையும் செழிக்கவைத்து, தாங்களும் செழித்துத் தழைத்து வளரவேண்டியவர்கள்.

ஆனால் அவர்களில் பலர் அந்தக் காலத்தில் எப்படிக் காடுகளுக்குள் ஒதுங்கியும் ஒடுங்கியும் வாழ்ந்தனரோ அப்படியே இன்றும் வாழ முற்படுகின்றனர். விடுதலை பெற்ற மலேசியா, கல்வி, தொழில், வேளாண்மை, கலாசாரம் ஆகியவற்றில் தீவிரமான மறுமலர்ச்சி பெற்று வளரத் துடிக்கிறது. இந்தத் துடிப்பால் அதன் மக்களுக்குப் புதிய வாய்ப்புக்களும் ஏற்படுகின்றன; புதிய அறைகூவல்களும் எதிர்ப்படுகின்றன. இவற்றையெல்லாம் அங்கே தோட்டப்புறங்களில் வாழ்பவர்களும் புரிந்துகொண்டு, நாட்டையும் வளர்த்துத் தாங்களும் வளரவேண்டும் அல்லவா?

மலேசியாவின் மக்கள் தொகை சுமார் ஒரு கோடி என்றால், அதில் பாதிக்கும் சற்று அதிகமானவர் மலாய் மக்கள்; பாதிக்கும் சற்றுக் குறைவானவர் சீன இனத்தவர்; சுமார் பத்துச் சதவீதம் பேரே இந்திய வம்சத்தினர். இவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். இப்படிப்பட்ட தமிழர்களில் பாதிப்பேர் தோட்டப் புறங்களில் வாழ்கிறார்கள்.

ஆகவேதான் நான் பால்மரக் காட்டு வாழ்க்கையை என் கதைக்குக் கருவூலமாகக் கொண்டுள்ளேன். இந்தக் கதையை அவர்களில் பலர் படித்துப் புரிந்துகொள்ள முடியுமா என்பதுகூடச் சந்தேகமே. நடுத்தர வயதைத் தாண்டியவர்களில் பலர் மிகக் குறைந்த அளவே கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றவர்கள்.

ஆனால் இளைய தலைமுறை அங்கே மெல்ல மெல்லத் தலைதூக்கி வருவது நம்பிக்கை அளிக்கிறது. இந்தக் கதையையேகூட இன்னும் ஆழ்த்தோடும், மண்ணின் மணம் கமழவும் சொல்லத் தகுதி பெற்றவர்கள் மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள். ஏனெனில் அந்த மண் அவர்கள் சொந்த மண்.

எனினும் அந்த வாழ்க்கையில் பழக்கப்பட்டுவிட்ட அவர்களைவிட, முதல் முறையாக அதன் புதுமையைக் கண்டு, நெஞ்சில் சிறை செய்துகொண்டு வந்திருப்பவன் நான். அந்தப் புதுமை உணர்வும் அவர்களிடம் நான் கொண்டுள்ள மெய்யான அன்புந்தான் எனக்கு இதை எழுதும் துணிவைத் தந்துள்ளன. இந்தியாவில்வாழும் தமிழ் மக்கள் அங்கு



வாழும் தமிழ் மக்களைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே நான் இதை எழுதுகிறேன்.

இங்குள்ளவர்களுக்கு மலேசிய ரப்பர்த் தோட்டம், அதன் சூழ்நிலை, சுற்றுப்புறம், வாழ்க்கை முறை முதலியவற்றையெல்லாம் சற்று நிதானமாகச் சொல்லிக்கொண்டு போக வேண்டும். மலேசியத் தமிழர்கள் வெறும் குறிப்பால் உணர்ந்துகொள்ளக் கூடியதைத் தமிழ்நாட்டவருக்கு விளக்கிச் சொன்னால்தான் புரியும். அங்கு வழங்கும் வட்டாரத் தமிழ்ச் சொற்களை நான் இதில் மிகுதியாகப் பயன்படுத்தவில்லை.

வெறும் பொழுதுபோக்குச் சுவையை மட்டும் நம்பி வேகமாய்க் கதை படிப்பவர்கள் அல்லர் "கலைமகள்" வாசகர்கள். வாழ்வதற்கென்று கப்பலேறிக் கடல் கடந்து சென்று, இன்றும்கூட நன்றாக வாழமுடியாமல் வாயில்லாப் பூச்சிகளாய் நிற்கும் ஓரினத்தின் வரலாற்றுச் சிறுதுளியை இதில் நான் படம் பிடிக்க முனைந்துள்ளேன். கதைக்குப் பின்னே உள்ள வாழ்க்கையை நோக்குமாறு என் வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய குறைபாடுகளை நான் மூடி மறைக்கவில்லை. நான் எழுதும் வாழ்க்கையில் நேரடியான அநுபவம் பெறாதவன். தோட்டப்புறங்களில் வாழாதவன். ஆனாலும் தமிழ்நாட்டு எழுத்தாளன் ஒருவன் மேற்கொள்ளும் முதல் முயற்சி இது. இதுவரை இங்குள்ள எழுத்தாளர் யாரும் நமக்கு ரப்பர்த் தோட்டங்களில் வாழும் மலேசியத் தமிழர்களை அறிமுகம் செய்து வைக்கவில்லை. அந்த வகையில் இந்த நாவல் ஒரு முன்னோடியாக இருந்தால் போதும். எதிர்காலத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து வெளிவரப்போகும் தலைசிறந்த - தோட்டப்புற வாழ்க்கை கொண்ட - நாவல்களுக்குக் காலத்தால் சருகாய் உதிரும் இந்த நாவல் சிறிதளவு உரமாகப் பயன்படுமானால் அதையே நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுவேன்.

இப்படி ஒரு நாவல் எழுத வேண்டுமென என்னை மலேசியாவில் தூண்டிக் கொண்டே இருந்தவர்கள், என்னைத் தோட்டப்புறங்களுக்கு அழைத்துச் சென்றவர்கள், அவர்கள் வாழ்க்கையை அறிமுகம் செய்தவர்கள், தோட்ட வாழ்க்கையைப் பற்றிய நூல்களையும் புகைப்படங்களையும் எனக்குத் தேடித் தந்தவர்கள் ஆகிய பலப் பல நண்பர்கள் எனக்குப் பேருதவி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எங்ஙனம் நன்றி செலுத்துவது?

மலேசியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னால், "நாவலோடு வந்து சேருங்கள்" என்று ஆசி கூறி அனுப்பினார்கள், "கலைமகள்" ஆசிரியர் திரு கி. வா. ஜ. அவர்கள். அவர்களுக்கும் "கலைமகள்" அதிபர் திரு நா. ராமரத்தினம் அவர்களுக்கும் என் வாசகர்களுக்கும் நான் கூறும் பதில், "இதோ நாவலைத் தொடங்கிவிட்டேன்!" என்பதுதான்.

பொன் விளையும் பூமியான மலேசியாவின் ரப்பர்த் தோட்டங்களில், பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியை நாம் முதன் முதலில் காணச் செல்வோம். ரப்பர்த் தோட்டங்களைச் சில வெள்ளைக்கார முதலாளிகள் துண்டு போட்டு விற்றுவிட்டுக் கப்பலேற முயன்ற காலம் அது.

வாருங்கள், நாமும்கப்பலேறிக்கடல் கடந்து செல்வோம். கரையை எட்டி, நகரங்களைக் கடந்து, பால்மரக் காட்டுக்குள் நுழைவோம்.

I. விக்டரி எஸ்டேட்

பொழுது இன்னும் விடியவில்லை. இருள் இன்னும் விலகவில்லை. ஆனால் புலரும் வேளை மெல்லமெல்ல நெருங்கிக் கொண்டுதான் இருந்தது. சற்று நேரம் போனால் தோட்டத்துக்குள்ளிருந்து ரப்பர் 'பாக்டரி"யின் நாலு மணிச்சங்கு ஊதத் தொடங்கிவிடும்.

சிரம்பான் நகரத்துக்கு வடக்கே பத்து மைல் தொலைவில் ஒரு சிறு சாலையைப் பார்த்தவாறு அந்த 'விக்டரி எஸ்டேட்'டின் நுழைவாயில் இருக்கிறது. முகப்பை மட்டும் பார்த்துச் செல்பவர்களுக்கு, அது தனக்குள்ளே பெரியதோர் செயற்கைக் காட்டையே வளைத்துக்கொண்டிருக்கிறது என்ற விவரம் தெரியாது.

உள்ளே புகுந்து செம்மண் பாதை வழியே நடந்தால் திடீரென நாம் நடுக் காட்டுக்குள் வந்துவிட்டதுபோல் உணர்வோம். காட்டின் வாய்வழியே அதன் அகன்று பரந்த வயிற்றுக்குள் விழுந்து கொண்டிருக்கும் நினைவு நமக்கு வராமல் போகாது. நம்மைச் சுற்றிலும்-முன்னும் பின்னும் பக்கவாட்டிலும்-ஒரேமரங்கள், மரங்கள், மரங்கள். நூல் பிடித்து நட்டு வளர்த்ததுபோல் வரிசை வரிசையாகப் பல்லாயிரக் கணக்கான மரங்கள். நாம் நடக்க வேண்டும்; மேலே மேலே நடந்து போய்க்கொண்டே இருக்க வேண்டும்.

வலதுபுறம் ஒரு மண்மேட்டுப் பொட்டலின்மேல் தெரிவதுதான் வெள்ளைக்கார மானேஜர் துரையின் பங்களா. குறுக்கேசிறுபாலம் வருகிறது. கீழே தண்ணீர் சலசலத்தோடும் சத்தம் கேட்கிறது. மேலும் நடந்தால் ரப்பர்ப் பாலை அரைத்துத் தகடுகளாக மாற்றும் ரப்பர் பாக்டரி தொலைவில் தெரிகிறது. இன்னும் நடந்து, அதையும் கடந்து, செம்மண் பாதையில் விரைந்து செல்ல வேண்டும்.

இதோ, ரப்பர்த் தொழிற்சாலையிலிருந்து நாலு மணிச் சங்கு கூக்குரலிடத் தொடங்கிவிட்டது. தொலைவில் லயத்தில் முடங்கிக் கிடக்கும் தோட்டத் தொழிலாளர்களைத் துயில் எழுப்பும் உதய கீதமான பூபாளம் இதுதான்.

செம்மண் பாதை கப்பும் கிளையுமாகப் பிரிந்து செல்கிறது. ஒருபுறம் மாரியம்மன் கோயில், மற்றொருபுறம் கள்ளுக்கடை, வேறொருபுறம் தமிழ்ப் பள்ளிக்கூடம், அங்கங்கே தோட்டத்துச் சிறு அதிகாரிகளின் வீடுகள், சினிமாக் காட்டும் பொட்டல், மருத்துவமனை முதலியன அங்கே தெரிகின்றன.

இன்னும் தொடர்ந்து நடக்கவேண்டும். முகப்பிலிருந்து மூன்று மைல் தொலைவு நடந்தால் அங்கே தொழிலாளர்க் குடியிருப்புக்களான 'லயன்கள்' தென்படுகின்றன. மரப்பலகைகளால் இணைத்துக் கட்டப்பட்டு, மேலே தகரக் கூரை வேய்ந்த ஒருவகைப் பரண் வீடுகள். கீழே மரக் கம்பங்கள் நட்டு, வீட்டுக்கு வீடு தடுப்புச் சுவர்களைப் போன்ற பலகை அடைப்புக்கள். மேலே வரிசை வரிசையான அறைகள். அறைகளுக்கு முன்னே உள்ளே நீண்ட வராந்தா, நாலு குடும்பங்களுக்குப் பொதுவானது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் மேலே ஓர் அறை; அதற்குக் கீழே உள்ள தரைப் பகுதி, குடும்பத்தில் இரண்டு பேராக இருந்தாலும் சரி, பத்துப் பேராக இருந்தாலும் சரி, அது தான் வீடு.

சங்கொலி முழக்கத்தை அடுத்து, தலையில் முண்டாசும் கைகளில் அரிக்கேன் விளக்கும் தடியுமாகக் காவற்காரன் சத்தமிட்டுக் கொண்டும், கைத்தடியால் வீட்டுப் பலகைகளைத் தட்டி ஓசை எழுப்பிக்கொண்டும் செல்கிறான். சோம்பேறிக் கோழிகள் விழித்துக் கொண்டு கொக்கரக்கோ என்று கூவுகின்றன. லயத்தில் அங்கங்கே ஆட்கள் விழித்தெழும் அரவம் கேட்கிறது. மாடிக்கு அடியில் பெஞ்சுகளின் மேலும் மேலே அறைகளுக்குமுன் வராந்தாவிலும் முடங்கிக் கிடக்கும் ஆண்கள், போர்வைகளை நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டு, "முதல் சங்கு தானே இது?" என்ற அலட்சியத்தோடு மற்றொரு குட்டித் தூக்கம்போட முயல்கிறார்கள்.

பெண்களால் இப்படி இருக்க முடியுமா? அவர்கள் வீட்டுவேலை, குழந்தை குட்டிகள், வெளிவேலை இவ்வளவையும் சேர்த்துச் செய்தாக வேண்டும். ஆண்களைப் போல் காலை நேரத்துச் சோம்பலின் சுகத்தை அவர்களால் அநுபவிக்க முடியாது.

விரப்பன் விட்டில் முதலில் விழித்துக்கொண்டவள் அவன் மனைவி வேலம்மாள்தான். எழுந்தவுடன் சிம்னி விளக்கையும் அரிக்கேன் விளக்கையும் ஏற்றினாள். பத்தடிக்குப் பன்னிரண்டுள்ள அந்த அறைக்குள் அவள் குடும்பத்தில் பெரும்பகுதி நெருக்கியடித்துக்கொண்டு கிடந்தது. செல்லம்மாளையும் கமலத்தையும் மெல்லப் பற்றி உலுக்கினாள். கைக்குழந்தை ராஜா எழுந்து உதய ராகம் பாடிவிடக்கூடாதே என்ற கவலை அவளுக்கு. பிடித்துக்கொண்டால் விடமாட்டான். நடேசனையும் அவள் எழுப்பவில்லை. வெளி வராந்தாவில் படுத்திருந்த பாலனுக்குச் சங்கொலி கேட்டவுடனேயே விழிப்பு வந்துவிட்டது. தானாக எழுந்து கீழே வந்தான். கீழே பெஞ்சுகளில் அவன் அப்பா விரப்பனும் அண்ணன் முத்துவும் முடக்கிக்கொண்டு கிடந்தார்கள்.

அடுத்தாற்போல் வேலம்மாளும் பெண் குழந்தைகளும் விளக்குகளோடு மரப்படிகளில் இறங்கிக் கீழே வந்தார்கள். பெரிய தகரத் தொட்டியில் நிரப்பியிருந்த தண்ணீரை மொண்டு பல் விளக்கி முகம் கைகால் கழுவினார்கள். சுறுசுறுப்போடு விறகுகளை அடுக்கி அடுப்புப் பற்றவைக்கவும், தேநீர் போடவும், சமையல் செய்யவும் தொடங்கினார்கள். வேலைகளைப் பெண்களிடம் பகிர்ந்து கொடுத்துவிட்டுத் தன் கைக்குழந்தை ராஜாவைக் கவனிக்க மேலே சென்றாள் வேலம்மாள். அவளுடைய நாற்பத்தைந்தாவது வயதில், கமலத்துக்குப் பின்னால், ஆறேழு வருட இடைவெளிக்குப் பின்பு பிறந்த எட்டாவது குழந்தை ராஜா. வெந்நீரில் பால் தூளையும் சர்க்கரையையும் கலந்து ராஜாவுக்குப் புகட்டிக்கொண்டே, "காலங்கெட்ட காலத்திலே இது வேறே ஒண்ணு!" என்று தனக்குள் சலித்துக்கொண்டாள்.

பாலனுக்கு இருபது வயதிருக்கும். காலை நேரத்துக் குளிர் ஓரளவு அவனுக்கு நடுக்கத்தைக் கொடுத்ததென்றாலும் அதை அவன் சட்டைசெய்யவில்லை. பல் விளக்கக் கரித்தூளை எடுத்துக் காகிதத்தில் மடித்துக்கொண்டான். துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டான். செருப்பை மாட்டிக்கொண்டு அரிக்கேன் விளக்கோடு குளிப்பதற்குப் பொதுக்குளியல் அறைக்குக் கிளம்பினான்.

சில்லென்ற பச்சைத் தண்ணீரில் அவன் குளித்து முழுகிக்கொண்டிருக்கும்போது ஐந்து மணிச் சங்கு ஊதியது.

இந்தச் சங்கொலி கேட்டபின் லயமெங்கும் ஒரே பரபரப்பு. அநேகமாக எல்லாருமே விழித்துக்கொண்டுவிட்டார்கள். கைக்குழந்தைகளின் அழுகுரல், கங்காணிகளின் அதட்டல், தெருநாய்களின் சத்தம் எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டன.

விரப்பனும் முத்துவும் விழித்துக்கொண்டு அவசரம் அவசரமாகப் பல் விளக்கி முகம் கழுவினார்கள். சிறிய மரப்பெட்டியிலிருந்த திருநீற்றை எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டான் விரப்பன். கமலம் சுடச்சுடத் தேநீரை அலுமினியத் தம்ளர்களில் ஊற்றினாள். ஆளுக்கொன்றாய் எடுத்துப் பருகும் வேளையில் அங்கே பாலனும் வந்து சேர்ந்தான்.

காலை வேளையில் தேநீரைப் பருகும் போது வழக்கமாக ஏற்படும் கதகதப்பும் உற்சாகமும் சில நாட்களாகவே அந்த விட்டில் உள்ளவர்கள் யாருக்கும் ஏற்படுவதில்லை. மாடாய் உழைத்து விட்டு வந்து படுத்த அலுப்புத் தீர்வதற்கு முன்பே, காலைச் சங்கொலியைக் கேட்டவுடனேயே, அந்த நினைவும் அவர்களுக்குள்ளேயே ஒரு கேள்விக் குறியாகப் புகுந்துவிடுகிறது, புழுவாய்க் குடையத் தொடங்கிவிடுகிறது.

தேநீர் பருகிக்கொண்டிருந்த பாலனைப் பார்த்து விரப்பன் சொன்னான்: "அடுத்த தோட்டத்திலிருந்து நேத்து ராத்திரியே கசமுசன்னு பேச்சு வந்திச்சு. நோட்டீஸ் குடுக்கப்போறாங்கன்னு சொல்றாங்க; குடுத்தாச்சுன்னும் சொல்றாங்க. ஒண்ணும் சரியாத் தெரியலே."

எந்த நினைவுகள் பாலனை அரித்தெடுத்தனவோ அதே நினைவுகள் அவன் தகப்பனையும் அரித்தனபோலும்

"அப்படியே இன்னிக்கு அடுத்த தோட்டத்துக்குப் போய் உன் அக்கா விட்டையும் மாமா விட்டையும் பார்த்திட்டு வா. லட்சுமியையும் பழனியையும் பார்த்து நிலைமையைத் தெரிஞ்சுக்க."

"சரிப்பா" என்று சொல்லிவிட்டு உடை மாற்றிக்கொள்ள மேலேபோனான் பாலன், அவன் தம்பி நடேசன் இன்னும் எழுந்திருக்கவில்லை. முக்காடு போட்டுக் கொண்டு நன்றாகத் தூங்கினான். வயது அவனுக்குப் பதினாறு இருக்கும். படிப்பும் வரவில்லை. வேறு எந்த வேலையும் இல்லை. வெளிக்காட்டு வேலைக்கும் அவனை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

தோட்ட வேலைக்குப் போகிறவர்கள் அங்கிருந்து ஐந்தரைமணிக்குகிளம்ப வேண்டும். பள்ளிக்குப் புறப்படும் பாலனும் கமலமும் மெதுவாகச் செல்லலாம். பதினைந்து வயதுச் செல்லம்மாள் தன்னையும் கவனித்துக்கொண்டு தன் ஒன்பது வயதுத் தங்கை கமலத்துக்கும் தலை வாரிவிட்டாள். வேலம்மாள் தன் கைக் குழந்தையை விரப்பனிடம் கொடுத்துவிட்டு, சுடுசோற்றில்குழம்பை விட்டுக் கிளறி அலுமினிய டிபன் பாத்திரங்களில்நிரப்பலானாள். வெளியே தெருவில் நின்றபடி கிழட்டுச் சின்னையா கங்காணி அவர்களை விரட்டி முடுக்கிக் கொண்டிருந்தான். செல்லம்மாளைத் தவிர, மற்றவர்கள் அந்த விட்டில் அவனுடைய "காங்கை"ச் சேர்ந்த ஆட்கள். விரப்பன், வேலம்மாள், முத்து ஆகிய மூவரும் அவன் தலைமையில்வேலை செய்பவர்கள். செல்லம்மாள் மட்டுமே "வெளிக்காட்டு வேலை"க்குச் செல்கிறாள்.

பால் வெட்டப் போகிற விரப்பன் தன் கத்தி, உலர்ந்த ரப்பரைச் சேகரிக்கும் மூங்கிற் குடுவை, பால் சேகரிக்கும் பெரிய வாளி முதலியவற்றை எடுத்துக் கொண்டான். முத்துவும் தயாரானான். எல்லாரும் வேலைக்குப் பெயர் பதிவு செய்துகொள்ள "மஸ்டர்" களத்துக்குப் புறப்பட்டார்கள்.

செல்லம்மாளுக்குத் தன் சிறியதம்பி ராஜாவை "ஆயாக் கொட்டகை"யில் கொண்டு போய்விட வேண்டிய வேலை இருந்தது. அவளும் அவனை இடுக்கிக் கொண்டு கிளம்பினாள். நீண்ட சதுரமான கொட்டகை ஆயாக்கொட்டகை. மேலே தகரம் வேய்ந்திருந்தார்கள், சுற்றிலும் மூன்றடி உயரத்துக்குப் பலகையால் சுவர்போல் அடைத்திருந்தார்கள். கொட்டகைக்குள் சில துணித் தொட்டில்கள் தொங்கின. குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள இரு ஆயாக்கள் இருந்தனர். வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்கள் வேலை நேரத்தில் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான கூடம் அந்த ஆயாக் கொட்டகை. கைக்குழந்தைகளைத் தவிர, மூன்று நான்கு வயதுச் சிறுவர் சிறுமியரும்கூட அங்கே காணப்பட்டார்கள்.

மஸ்டர் களத்தில் பதினாறு பேர் கொண்ட ஒவ்வொரு "காங்கு"ம் தன் கங்காணிக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தது. "மஸ்டர் கிராணி" ஜோசப் பெயர்ப் பட்டியலுடன் மேசைக்கருகில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். தங்கள் தங்கள் காங்கில் அன்றைக்கு உடல்நலக் குறைவாலோ, வேறு காரணங்களாலோ வேலைக்கு வரமுடியாதவர்களுக்குத் "திட்டி" சொன்னார்கள் கங்காணிகள். வேலைக்குவராதவர்களின் இடத்துக்கு அங்கு நின்றுகொண்டிருந்த பதில் ஆட்களில்சிலர் அனுப்பப்பட்டார்கள். மரம் வெட்டும் ஒவ்வொருவருக்கும் நானூறு நானூற்றைம்பது மரங்கள் என ஒதுக்கியிருந்ததால், ஓர் ஆள் குறைந்தாலும் பால்எடுப்பது குறைந்துவிடும்.

ஆறு மணிக்கெல்லாம் மரக்காட்டுக்குள் மறைந்தார்கள் தொழிலாளர்கள். மிகத் தொலைவிலிருக்கும் பகுதிகளுக்குச் செல்லும் சிலர், தங்கள் வாளிகளுடன் அங்கிருந்த லாரியில் ஏறிக்கொண்டார்கள். லாரியும் புழுதி மண்ணைக்கிளப்பிக் கொண்டு நகர்ந்தது.

அவரவர் மரங்களை நாடிச் சென்று, கீறப்பட்ட பகுதிகளின் பட்டைகளைச் சீவிக் கிண்ணங்களில் பால் வடியச் செய்யவேண்டும், ஒவ்வொரு மரமாக இப்படி முதலில் சீவி விட்டுக்கொண்டே வரவேண்டும். இதற்குள் காலை பத்துப் பத்தரை மணியாகிவிடும். பிறகு அங்கேயே மரக்காட்டில் காலை ஆகாரம் நடக்கும். சாப்பிட்டவுடன் மீண்டும் பாலைச் சேகரிக்க வேண்டும். கிண்ணத்துப் பால் சிறு வாளிக்கு வந்து பின்னர் பெரிய வாளிக்கு மாற்றப்படும். அங்கிருந்து அதைக் கொண்டுபோய் நிறுத்துக் கணக்குக் கொடுப்பார்கள். அளவுக்குத் தக்கபடி நாள்தோறும் கூலி பதிவாகும். தினக்கூலிதான். மாதச்சம்பளம் இல்லை.

செல்லம்மாள் மட்டிலும் தோட்டத்து இளைஞர்களுடன் வெளிக்காட்டு வேலையில் ஈடுபட்டிருந்தாள். புதர்களை வெட்டுவது, காடாய் மண்டும் லாலான் புல் போன்றவற்றை அழிப்பதற்கு மருந்து தெளிப்பது போன்ற வேலையே வெளிக்காட்டு வேலை.

வீரப்பனின் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மூவரும் அந்தக் காட்டுக்குள் பால் வெட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

(தொடரும்)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

தமிழர் திருநாளின் மூலகர்த்தாவாக - தந்தையாக - விளங்கிய தமிழவேள் சாரங்கபாணி அவர்கள், இக்கொண்டாட்டத்தை 1952ஆம் ஆண்டு சிங்கப்பூரில் துவக்கிப் படிப்படியாக மலேசியா முழுவதிலும் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுவதற்கு வழிவகுத்துத் தந்தார். முதல் 15, 16 ஆண்டு காலம் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் ஒரு சமுதாயத் திருவிழா போன்று எல்லாச் சிறப்புக்களும் பொலிய மிக விரிவான முறையில் கொண்டாடப்பட்டு வந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

தமிழர் திருநாளின் தலையாய நோக்கம் சமுதாயத்தில் ஒற்றுமை நிலவச் செய்வதே ஆகும். தமிழர்களை நெல்லிக்காய் மூட்டைக்கு ஒப்பிடுவது முற்றிலும் பொருந்துவதாகும். தமிழர்களை ஒன்று சேர்ப்பது அத்துணை எளிதான காரியம் அல்ல. சேரர் - சோழர் - பாண்டியர் - காலத்திலிருந்தே தமிழ்ச் சமுதாயம் பிளவு பட்டு, பேதப்பட்டு, அதன் பலனாக உருக்குலைந்து சிதறிச் சின்னபின்னமாக - அடையவேண்டிய நியாயமான முன்னேற்றங்களை அடையாமல் - அவலத்தில் ஆழ்ந்துகிடக்கிறது. அந்தக் காலத்திலும் தமிழ்ப் புலவர்கள் பிளவுண்டு கிடந்த தமிழ் மன்னர்களை ஒன்றுபடுத்த முயன்றிருப்பதை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரம் கூடத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒருமைப்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டமைந்த காப்பியம் என்று சொல்வதும் மிகையாகாது. ஆனால் தமிழர்களிடையே அன்றும் சரி, இன்றும் சரி தாய்த் தமிழகத்திலானாலும் குடியேறி வாழுகின்ற மலேசியா போன்ற பிற நாடுகளானாலும், வாழும் இடமெல்லாம் தமக்குத் தாமே உட்பகையை வளர்த்துக் கொண்டு அழிந்துபோவது தமிழ் மக்களின் அழிக்க முடியாத தலைவிதியாக இருந்து வருகிறது.

இந்த மாற்றவொண்ணாத தலைவிதியை மாற்றுவதற்கு முனைப்பாக மேற்கொள்ளப்பட்ட பெரு முயற்சியே தமிழர் திருநாளாகும். தமிழர்களின் அவலங்களுக்கெல்லாம் மூலகாரணம், அவர்களிடையே காணப்படுகிற பிளவும் பூசலுமே என்பதை நன்கு உணர்ந்த தமிழவேள் அவர்கள், இந்தத் தீராப் பிணிக்குச் சஞ்சீவியாகத் தமிழர் திருநாளை வழங்கினார். தமிழர் திருநாள், தமிழர்களின் ஒற்றுமைத் திருநாளாக 'அனைவரும் ஒன்றுபடுவோம், வாரீர்' என்னும் அறைகூவலை முன்வைத்தே கொண்டாடப்பட்டு வருகிறது. நம்மிடையே இயற்கையாக உள்ள வேற்றுமைகளும் உண்டு; செயற்கையாக நாமே உண்டாக்கிக் கொள்கிற பேதங்களும் உண்டு. மலேசியாவில் பிறந்த தமிழர்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் பிறந்து இங்கே குடியேறிய தமிழர்களும் இருக்கிறார்கள். அதுபோல் இலங்கை, பர்மா போன்ற மற்ற நாடுகளில் பிறந்து இங்கே குடியேறிய தமிழர்களும் இருக்கிறார்கள். இது தவிர, சமயத்தாலும் நம்மிடையே வேறுபாடுகள் உண்டு. முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் முதலிய பல்வேறு சமயத்தைச் சார்ந்த மக்களையும் நமது சமுதாயம் உள்ளடக்கி இருக்கிறது. இது தவிர, இந்துக்களிடையே மண்டிக் கிடக்கும் ஜாதிப் பிரிவுகளும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் போன்ற ஏற்றத் தாழ்வுகளும் சமுதாயத்தைப் பிளவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. மேலும் நகர்ப்புறங்களில் வாழ்கிற தமிழர்கள், தோட்டப் புறங்களில் வாழ்கிற தமிழர்கள் என்று இரு வேறு பெருங் கூறுகளாகவும் நாம் பிரிந்து கிடக்கிறோம். உத்தியோகம் பார்க்கின்ற தமிழர்கள், வாணிகம் புரிகின்ற தமிழர்கள், முதலாளிகளாகத் திகழ்கின்ற தமிழர்கள், தொழிலாளிகளாகக் கடமையாற்றுகின்றவர்கள், குபேரர்களாகப் பெருஞ்சொத்துக்களுக்கு அதிபதிகளாக இருப்பவர்கள், வறுமையின் விளிம்பில் அன்றாடம் காய்ச்சிகளாக, வாழ்கின்றவர்கள் மற்றும் அரசியல்வாதிகள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், பொறியியல் வல்லுனர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், சொந்த உழைப்பை நம்பி வாழும் விவசாயிகள், மீனவர்கள், அங்காடி வர்த்தகர்கள், பத்திரிகை விற்பனையாளர்கள், ரொட்டி விற்பனையாளர்கள், நமக்குத் தனிப் பெருமை சேர்க்கின்ற "கச்சான் பூத்தே" வியாபாரிகள் - இப்படி வாழ்க்கையின் பல துறைகளிலும் படர்ந்து பரவி விரவி நிற்கிற தமிழ்ச் சமுதாயத்தை ஆண்டுக்கு ஒரு முறை ஒரு நாளில் ஒரே மேடையில் அணிவகுத்து மொழியின் அடிப்படையில் ஒன்றுகூடச் செய்கிற பிருமாண்டமான முயற்சியே தமிழர் திருநாளாகும்.

தங்களிடையே நிலவும் வேறுபாடுகளையும், பேதங்களையும், கருத்து வேற்றுமைகளையும் ஒதுக்கிவைத்து விட்டுச் சமுதாய ஒருமைப்பாடு என்னும் தேவையை முன்னிட்டு ஒரே அணியில் திரளவைப்பதில் தமிழர் திருநாள் குறிப்பிடத்தக்க வெற்றியைத் தன் குறிக்கோளுக்கேற்ப ஈட்டி வந்திருக்கிறது என்பதே என்னுடைய கருத்தாகும். விடா முயற்சியோடு சோர்வின்றித் தமிழர் திருநாளை இங்குள்ள மக்கள் நடத்துவதுபோல நாடெங்கும் தொடர்ந்து மனவுறுதியோடு சமுதாயம் கொண்டாடி வருமானால் தமிழர்களை ஒற்றுமைப் படுத்த அரும்பாடுபட்ட தமிழவேள் அவர்களின் ஆசைக்கனவு நனவாவது திண்ணம். தீராப்பிணியாகச் சமுதாயத்தை உருக்குலைத்துக் கொண்டிருக்கும் உட்பூசல்களுக்கும், பிளவுகளுக்கும், தனி மனிதர் போட்டா போட்டிகளுக்கும் கூட நாம் நாளடைவில் முற்றுப்புள்ளி வைத்துவிட முடியும்.

தலைவர்கள்

தமிழ்மக்களை வழி நடத்திச் செல்கின்ற தலைவர்களிடையே அவர்கள் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாயினும், தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்களாயினும், கூட்டுறவு இயக்கங்களில் இருப்பவர்களாயினும் மணிமன்றம், திராவிடர் கழகம் போன்ற சமுதாய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களாயினும், கோவில் போன்ற சமய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களாயினும் எல்லாத் தலைவர்களையும் எல்லா அமைப்புக்களையும் பேதங்களை மறந்து இணைந்து பிணைந்து ஒரே அணியில் நிற்க வைக்கின்ற பெருமிதமான குறிக்கோளைத் தமிழர் திருநாள் தன்னகத்தே கொண்டிருப்பதையும் இந்த நோக்கத்தில் அது முழு வெற்றி அடைவது சமுதாய ஒருமைப்பாட்டுக்கு மிகமிக இன்றியமையாதது என்பதையும் நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

"வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்" என்பார் பாரதிதாசன். பாரத தேசத்தின் ஒற்றுமையின்மையைச் சித்திரிக்கும் இந்த வரிகள் தனித்தனியாக, உதிரிகளாக, ஒருவரோடொருவர் சேராமல் நெல்லிக்காய்களாகச் சிதறிக்கிடக்கும் நமது சமூகத்திற்கு முற்றிலும் பொருந்தக்கூடியது. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்பார் பாரதியார். தமிழர் திருநாளின் அறைகூவலும் இதுதான். நாம் ஒன்று பட்டால் ஆனந்தமாக இந்தச் சொர்க்க பூமியில் மற்றவர்களுக்கு இணையாக மேம்பட்டு வாழலாம். இல்லாவிட்டால் சொர்க்கபூமியில் வாழுகின்ற பேறு கிடைத்தும் நரகத்தில் இடர்படுகின்ற அவலநிலையே நமக்குக் கதியாக - தலைவிதியாக அமையும்.

முருகு

தமிழர் திருநாளின் மூல நோக்கம் சமுதாய ஒற்றுமை என்பதைக் கண்டோம். தமிழர் திருநாளின் துணை நோக்கங்களாக தமிழர் முன்னேற்றம், தமிழர் பண்பாடு, தமிழ்க் கலைகள், இலக்கியங்கள் ஆகியவற்றைப் பேணி வளர்த்தல், தமிழர்களை எல்லாத் துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்களாகத் திகழச் செய்தல், இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களிடையே நாட்டுப் பற்றும், தேசிய ஒருமைப்பாட்டுணர்வும் மிளிரச் செய்தல் ஆகியவை அமைந்திருப்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழர் திருநாள் மேடைகளில் தமிழர்களின் கல்வி, தொழில், பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து அந்தக் காலத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வந்திருப்பதை நாம் அறிவோம். அதுதவிர தமிழர் கலைகள், தமிழ் இலக்கியங்கள், ஆகியவற்றைப் பேணிப்பாதுகாத்துவளர்க்கின்ற குறிக்கோள்களிலும் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் கணிசமான வெற்றியைக் கண்டிருப்பதாகவே சொல்லவேண்டும்.

இலக்கியப் பேருரைகள் மூலமும், பேச்சுப் போட்டி, பட்டி மன்றம் முதலான பல்வேறு இலக்கியப் போட்டிகள் மூலமும், பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்ற ஆர்வத்தையும் பயிற்சியையும் தமிழர் திருநாள் பெருக்கி வந்திருக்கிறது. அதுமட்டுமன்றி புத்திலக்கியம் படைக்கின்ற கவிஞர்கள், சிறுகதை மன்னர்கள், எழுத்துச் சிற்பிகள், சொல்லின் செல்வர்கள் ஆகியோரையும் நாம் தமிழர் திருநாள் மூலம் ஏராளமாக உருவாக்கி இருக்கிறோம். குறிப்பாகத்

தமிழகத்திலிருந்து தமிழர் திருநாளுக்காக ஆண்டுதோறும் அழைக்கப்பட்ட பேராசிரியர்கள் நாடு முழுவதும் பல வேறு ஊர்களிலும் தமிழர் திருநாள் மேடைகளில் நிகழ்த்திய இலக்கியப் பேருரைகளையும் அவற்றைச் செவி மடுத்து நாம் பெற்ற இன்பத்தையும் அத்துணை எளிதில் மறந்துவிட முடியாது. தமிழ்ப் பண்பாட்டையும் தமிழர் வரலாற்றையும் தமிழர்தம் அருங்கலைகளின் சிறப்பையும் நாம் உணர்வதற்கும், அவ்வழியில் நாம் உயர்வதற்கும் அந்த இலக்கியப் பேருரைகள் பெருந்துணை புரிந்தன என்று சொல்வது மிகையாகாது.

தமிழர்களின் கலைகளை மறவாமல் பேணுகிற முயற்சியின் ஒரு பகுதியாகத் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களில் கலை நிகழ்ச்சி முக்கிய இடம் பெற்று வந்திருப்பதையும் அந்தக் கலை நிகழ்ச்சிகளில் கலைத்துறையில் ஆற்றல்மிக்க அனைவரும் பங்கு கொள்கின்ற அரிய வாய்ப்பு நல்கப்பட்டு வந்திருப்பதையும் நாம் அறிவோம். கலை நிகழ்ச்சிகளின் தொடர்பாக நடனப் போட்டி, பாடல் போட்டி, ஓரங்க நாடகப் போட்டி, தனி நபர் நடிப்புப் போட்டி முதலியவை இடம்பெற்று நம்மவர்களின் கலைத் திறமை வளர்வதற்கு வழி வகுத்து வருகின்றன. கோலம் போடும் போட்டி, ஓவியப் போட்டி, பூக்கட்டும் போட்டி முதலான போட்டிகள், தமிழர் தம் பண்பாடுகளைக் கட்டிக் காத்துவரத் துணை நிற்கின்றன.

வேட்டி சேலை

அண்மையில் பெட்டாலிங் பகுதியில் நடைபெற்ற தமிழர் திருநாளில் எல்லாரும் வேட்டி கட்டிக் கொண்டு வரவேண்டும் என்று அழைப்பிதழிலேயே உடைபற்றிக் குறிப்புப் போட்டிருந்தார்கள். பெரும்பாலோர் வேட்டிகளையும் சேலைகளையும் மறந்து வருகிற இக்காலத்தில் தமிழர் திருநாள் மூலம் இத்தகைய நமது பண்பாடுகளை மக்களுக்கு அறிவுறுத்துவது தமிழர் திருநாள் தந்திருக்கிற விழிப்புணர்ச்சியின் விளைவேயாகும்.

விளையாட்டுத் துறையிலும் நம்மவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துகிற பல போட்டிகள் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களில் இடம் பெற்று வருவதைக் காண்கிறோம். தேசிய ரீதியிலும், அனைத்துலக ரீதியிலும் இடம் பெறுகிற விளையாட்டுக்களோடு சடுகுடு, பல்லாங்குழி, சிலம்பம், கிளித்தட்டு முதலிய பழந்தமிழ் விளையாட்டுக்களையும் மக்களிடையே அறிமுகப்படுத்துவதற்கும் தமிழர் திருநாள் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம். தாய்மார்களுக்குச் சமையல் போட்டி வைத்து நமது சமையல் கலையையே மறந்துவரும் பெண்களுக்கு நமது தயாரிப்புப் பக்குவங்களின் அருமையையும் தமிழர் திருநாள் உணர்த்தி வருகிறது.

குழந்தைக் காட்சி நடத்தி ஆரோக்கியமான குழந்தைகளின் எண்ணிக்கை சமுதாயத்தில் பெருகுவதற்கும் தமிழர் திருநாள் உதவி புரிந்துவருகிறது.

இப்படி வாழ்க்கையின் எல்லாத் துறைகளில் உள்ளவர்களும், முதியவர் இளைஞர் - சிறுவர் - சிறுமியர் முதலிய எல்லா வயதினரும் ஆண் பெண் இருபாலரும் பங்கு பற்றுகிற நிகழ்ச்சிகளை அமைத்து தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டு வருவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வகையில் சமுதாயத்தின் ஆற்றல்களைப் பல்வேறு துறைகளிலும் வளர்க்கிற திருநாளாகவும் இது அமைந்திருக்கிறது.

தேசிய உணர்வையும், தேசிய ஒருமைப்பாட்டையும் நமது மக்களிடையே தழைக்கச் செய்வதிலும் தமிழர் திருநாள் வெற்றி கண்டிருக்கிறது. "நாம் இருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் இது நமக்கே உரிமையாம் என்பதும் அறிந்தோம்" என்னும் பாரதியின் வரிகளை நமது மக்கள் மனத்தில் அழுத்தமாகப் பதிய வைப்பதற்குத் தமிழர் திருநாள் மேடைகள் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குடியுரிமை எடுக்கவேண்டும் என்பதையும், வாழுகின்ற மண்ணுக்கு மாறாத விசுவாசம் உள்ளவர்களாக மக்கள் தங்களை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தித் தேசிய உணர்வு நம்மிடையே தழைக்கச் செய்வதற்குத் தமிழர் திருநாள் கொண்டாட்டம் பெரிதும் கைகொடுத்து வந்திருக்கிறது. இன்று நமது சமுதாயத்தில் மிகப் பெரும்பாலோர் குடிமக்கள் ஆகியிருக்கின்ற நிலையையும், நமது சமுதாயத்தில் நாட்டுப் பற்று நிரம்பி நிற்பதையும் நமது கவிஞர்கள் எழுத்தாளர்கள் ஆகியோரின் எழுத்தோவியங்களில் தேசிய உணர்வு செறிந்து நிற்பதையும் தமிழர் திருநாள் தந்த பலன்களில் ஒன்றாகக் கருதுவது நியாயமேயாகும்.

தமிழர் திருநாள் மேடைகளில் சகோதரச் சமூகங்களைச் சேர்ந்த பிரமுகர்களை அழைத்துப் பேசச் செய்வதும் அவர்களுக்குச் சிறப்புச் செய்வதும் நமது கலை நிகழ்ச்சிகளோடு சகோதரச் சமூகங்களின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறச் செய்வதும், தமிழர் திருநாளின் ஒருசில போட்டிகளை மற்ற சமூகங்களும் பங்குகொள்ளும் பொதுப் போட்டிகளாக நடத்துவதும் தேசிய ஒருமைப்பாட்டிலும் சமூகங்களின் நல்லுறவிலும் நமக்குள்ள உண்மையான நம்பிக்கையைப் புலப்படுத்துவதற்குத் துணைபுரிகின்றன. தமிழர்களை ஒற்றுமைப்படுத்துகிற அதேசமயத்தில், மலேசிய திருநாட்டின் - தேசிய சமுதாயத்தின் - பிரிக்கமுடியாத ஒரு பகுதி



அன்னநடை கற்கப்போய் தன்னடையையும் இழந்து கொண்டிருக்கிற நமது மலேசியத் தமிழ்க் கலைஞர்கள் ஒரு சிலரை நினைக்கும்போது நமக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது.

எப்போதுமே அசலுக்குத் தான் மதிப்பு என்பதை நாம் அறிவோம். இருந்தும் நகலாகவே தங்களை அமைத்துக் கொள்வதில் நமது பாடகர்களும் நடிகர்களும் விரும்புவது, மலேசியக் கலைஞர்களின் திறத்தை வெளிப்படுத்தாது என்பதை உணரவேண்டும்.

நடிகர்களை எடுத்துக்கொண்டால் சிவாஜிகணேசனைப் போலவும், சுந்தரராஜனைப்போலவும், தங்கவேலுவைப்போலவும், பாலையாவைப்போலவும், எம். ஆர். ராதாவைப்போலவும், இன்னும் பெண் நடிகைகளைப் போலவும் நடிக்கிறார்கள். என்னதான் நடித்தாலும் நாம் அவர்களாகிவிட முடியுமா? "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச்சிறகை விரித்தாடினாற் போலாகுமே" என்ற வரிகளுக்கேற்ப வான்கோழி மயிலாகிவிட முடியாது. நமது கலைஞர்களும் வான்கோழியாகிவிடக் கூடாது என்பதுதான் நமது கவலை.

அதே போல பாடகர்களும் ஜேசுதாஸ், சௌந்தரராஜன், கண்டசாலா, ஜெயராமன், ஏ. எம். ராஜா, சந்திரபாபு குரல்களிலெல்லாம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் மற்றவர்களாகிக் கொண்டிருப்பதை விட்டு நாம் நாமாக எப்போது மாறுவது? அப்படியானால் நமக்குத் திறமை இல்லையா? காப்பியடிக்கமட்டும் தான் நமக்கு முடியுமா? நாம் மற்றவர்களின் நகலாவதற்குச் செலவிடுகிற திறமையை "அசலா"வதற்குச் செலவிட்டால் நாம் வெற்றிபெற முடியாதா?

கடந்த 28-3-77ம் நாள் நிகழ்ந்த "கலைக்குவியல் 77" நிகழ்ச்சியில் இந்த "நகல்" பாடகர்களை நிறைய சந்திக்க நேர்ந்தது. நாடகப் பேரொளி மனோகரும் அவர்தம் குழுவினரும் நம்மைப் பாராட்டினார்கள் என்றபோதிலும் தனிப்பட்ட முறையில் "அசலை தேடி ஏமாந்ததாக" குறைபட்டுக்கொண்டதை நாம் மறைத்துவிடமுடியாது.

நமது கலைஞர்கள் திறமையுள்ளவர்கள். பாடலோ நடிப்போ மற்றும் எத்துறையிலோ சிறந்து விளங்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள். அவர்கள் அடுத்தவர்களின் நகல்களாவதை விடுத்துச் சொந்தத் திறமைகளை வளர்த்துக்கொள்வார்களானால் அது அவர்களின் திறமையை நிலைப்படுத்தும்; மலேசியக் கலையுலகுக்கும் பெருமை சேர்க்கும்.

அதே நேரத்தில் பாடலோ உரையாடலோ உச்சரிப்புப் பிழையில்லாமல் இருந்தால்தான் ரசிக்கக்கூடியதாக இருக்கும் உச்சரிப்புப் பிழையோடு பாடும் போதும் பேசும்போதும் கேட்கவே பிடிக்கவில்லை. மேலும் உச்சரிப்புப் பிழையினால் அர்த்தங்களும் அனர்த்தங்களாகி விடுகின்றன. எனவே பாடுகிறவர்களும் பேசுகிறவர்களும் உச்சரிப்புப் பிழையின்றிப் பாடவும் பேசி நடிக்கவும் முன் வந்தால் தான் நமது திறமைக்கு மதிப்புண்டு. இதனை நமது நடிகர்களும் பாடகர்களும் உணர்ந்து திருத்திக்கொள்ளும் காலமே நமது தமிழ்க் கலைக்கு மதிப்புச் சேரும் காலமாகும். ●

யாகவே நாம் விளங்கி வருகிறோம் என்னும் உண்மையையும் நாட்டுக்கு நாம் ஆற்றவேண்டிய கடப்பாடுகளையும் நாம் மறந்துவிடவில்லை என்பதையே மேற்குறித்த அம்சங்களைத் தமிழர் திருநாளில் இணைப்பதன் மூலம் நாம் புலப்படுத்தி வருகிறோம்.

பிளவுகள் வேண்டாம்

எதிர்காலத்தில் தமிழர் திருநாளை இன்னும் முனைப்பாக, இன்னும் பொலிவாக இன்னும் விரிவாக நாம் நாடெங்கும் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் நடத்தவேண்டிய அவசியம் இருப்பதாகவே நான் உணருகிறேன். நம்மிடையே எதிர்காலத்தில் எந்தவகையான பிளவுகளுக்கும் இடமளிக்கக் கூடாது. தலைவர்களுக்கிடையே காய்ச்சல், போட்டி, பொறுமை, அமைப்புக்களிடையே பலப்பரீட்சை - கோவில் நிர்வாகங்களில் சண்டை - மயானத்தை நிர்வகிப்பதில் உட்பூசல் - இப்படி எந்த விதமான உட்பூசலும் நேரிடாதபடி சகோதரத்துவ ஒற்றுமையுணர்வை நம்மிடையே -நமது தலைவர்களிடையே- நமது தொண்டர்களிடையே - நமது சாதாரண மக்களிடையே தழைத் தோங்கச் செய்வதற்கு ஒற்றுமைத் திருநாளான தமிழர் திருநாள் மிக இன்றியமையாததாகும்.

ஒற்றுமையை வளர்ப்பதோடு ஒவ்வொரு பகுதியிலும் வாழ்கின்ற நமது குடும்பங்களின் தனித்தனி முன்னேற்றத்தை ஊன்றிக் கணிப்பதற்கும் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களை நன்கு பயன்படுத்த வேண்டும் என்பதும் எனது வேண்டுகோளாகும். வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிற பெரியவர்களையும் இளைஞர்களையும், கல்வியில் பெருவெற்றி கண்டிருக்கிற மாணவர்களையும், சாதனைகள் நிகழ்த்தியிருக்கிற எவரையும் அறிமுகப்படுத்துவதற்கும் அவர்களுக்குச் சிறப்புச் செய்வதற்கும் தமிழர் திருநாள் மேடைகளைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் மற்றவர்களும் தங்களை உயர்த்திக் கொள்கிற ஓர் உந்துதலை நாம் கொடுக்க முடியும்.

ஆங்காங்கு, அமைதியாகத் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொண்டு வருகிற குடும்பங்கள் பலவுண்டு. பால்வெட்டுத் தொழிலாளியாக வாழ்க்கை நடத்திய அன்பர் ஒருவர், இப்போது சீனர் நடத்திய மார்க்கெட் கடையை விலைக்கு வாங்கி ஒரு சில ஆண்டுகளில் தமது வியாபாரத்தைப் பன்மடங்கு பெருக்கிச் சொந்தக் கடை, சொந்த வீடு சொந்த லோரி என்னும் அளவுக்குஉயர்ந்திருக்கிறார் "முதலில் நாளொன்றுக்கு இரண்டு வெள்ளி வியாபாரம் நடப்பது கஷ்டமாக இருந்தது. இப்பொழுது நாளொன்றுக்குச் சராசரி ஐந்நூறு வெள்ளிக்கு வியாபாரம் நடக்கிறது" என்று பெருமையோடு என்னிடம் அந்த அன்பர் கூறியபொழுது அவரைக் கட்டித் தழுவி முத்தமிட வேண்டும் என்னும் பெருமித உணர்வு என் உள்ளத்தில் எழுந்தது. இவ்வாறு கண்ணுக்குக் கண்ணான வாழ்க்கை முன்னேற்றங்களைக் கண்டு தன்னைத்தானே உயர்த்திக் கொண்டிருப்பவர்களைத் தமிழர் திருநாள் மேடைகளில் ஆண்டுக்கு ஒருவராகத் "திருவாளர் முன்னேற்றம்" என்று அறிமுகப்படுத்துவது பெரிதும் பயன்விளைக்கும் என்பது எனது கருத்தாகும்.

தமிழர் திருநாளைக் கொண்டாடுகிறவர்கள் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குவது, பொதுக்கூட்டம் —கலை நிகழ்ச்சி ஆகியவற்றோடு ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாள் மூலம் குறிப்பிடத்தக்க நன்மை அந்த வட்டார மக்களுக்குக் கிடைக்கிற மாதிரி உருப்படியாக ஏதாவது செய்வது அவசியம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். கூடிப்பேசி கலைந்து விடுகிற கூட்டமாக மட்டும் அமையாமல் திருநாளுக்குத் திரட்டுகிற நன்கொடையில் கணிசமான ஒரு பகுதியை நினைவில் நிற்கக்கூடிய ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுத்த முன்வரவேண்டும். வழக்கமான விழாச் செலவுகளில் பலவற்றைச் சிக்கனப் படுத்துவதற்கு மார்க்கம் இருக்கிறது. விழாவில் கலந்துகொள்ளுகிற பிரமுகர்களுக்கெல்லாம் நினைவுப் பரிசுகள், விழாவுக்கு வருகிறவர்களுக்குச் சட்டையில் குத்திவிடுகிற அடையாளப் பூக்கள், விளம்பரங்களை வாங்கி அச்சுக்கூலியாகக் கொடுத்து முடித்து விடுகிற பொருள் வரவில்லாத சிறப்பு மலர்கள் முதலான பல விரயங்களைத் தவிர்த்துக் கூடுமானவரை விழாவைச் சிக்கனமாக நடத்தி நல்ல தொகையை மிச்சப்படுத்தி உருவான ஒரு காரியத்தை நடத்துவது மக்களிடையே தமிழர் திருநாள் செல்வாக்குப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். அத்தகைய உருவான காரியங்களுக்குச் சில எடுத்துக்காட்டுக்களையும் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

அந்த வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு பண்பட்ட முதிய எழுத்தாளரின் நூலை அச்சேற்றித் தமிழர் திருநாள் நினைவாக வெளியிடலாம். அவ்வட்டாரத்திலுள்ள தமிழ்ப்பள்ளிக்கூடத்திற்கு மின்விசிறி, சமையல் பாத்திரங்கள் போன்ற தேவைகள் இருந்தால் அவற்றைத் தமிழர் திருநாள் நினைவாகக் வாங்கிக் கொடுக்கலாம். மேல்படிப்புக்கு வசதியற்ற நிலையில் தவிக்கும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த மாணவனுக்குத் தக்க பொருளுதவியைச் செய்யலாம். அவ்வட்டாரத்தில் தையல் படிக்க விரும்பும் பெண்களுக்கு உதவியாகத் தையல் இயந்திரம் வாங்கிக் கொடுக்கலாம். அவ்வட்டாரத்தில் இலக்கிய வகுப்பைத் தொடங்கி அது நீடித்து நடப்பதற்கு ஆசிரியர் சம்பளம் போன்ற உதவிகளைச் செய்யலாம். இதுபோன்ற பலன் விளைவிக்கக்கூடிய ஒவ்வோர் உருப்படியான காரியத்தைத் தத்தம் சக்திக்கேற்ற அளவில் ஒவ்வோர் ஊரிலும் செய்வதே தமிழர் திருநாளைக் கொண்டாடுகிற குழுவினரின் திட்டமாக இருக்க வேண்டும்

போட்டிகளுக்குக் கொடுக்கின்ற பரிசுகள் கூட சுழற்கேடயம், சுழற்கிண்ணம் தவிர்த்து மற்றவை தமிழ் நூல்களாக இருப்பது. தமிழ் நூல்களில் விற்பனைக்கு உதவுவதோடு மக்களிடையே தமிழறிவு பரவுவதற்கும் வழி வகுக்கும்.

தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் அங்கு பயில்கிற மாணவர்களும் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களின்போது சிறப்புச் சலுகை பெறுவதற்கு உரியவர்களாவர். அவர்களுக்கென்று தனிப் போட்டிகள், பரிசுகள் வழங்குவதும் அந்த ஆண்டின் சிறந்த மாணவனுக்கும் சிறந்த ஆசிரியருக்கும் பரிசுகள் வழங்குவதும் தமிழ்ப் பள்ளிகளின்பால் பெற்றோர்களின் கவனத்தை மேலும் ஈர்ப்பதற்குத் துணைபுரியும். ●

அண்மையில் நடைபெற்ற
கின்னான் மாவட்ட வெள்ளிவிழாத்
தமிழர்திருநாளில் நிகழ்த்திய உரை



"நோயாளியின் வயிற்றுக் குள்ளே கத்திரிக்கோலை வச்சித் தைச்சிட்டீங்களே டாக்டர்?"
"போனாப் போவுது; அது பழசுதான்!



"உங்க கணவரின் ஆப்பரேசனை நெனச்சுப்பயப்படாதீங்க! எங்க டாக்டர் அறுவைப் பரம்பரையில் வந்தவர்; அவரின் அப்பா வெட்டுமர ஆலை அதிபர்; தாத்தா வயலின் வித்வான்."



"நான் ஆப்பரேசன் செஞ்ச ஒருத்தனுக்கு இருதயத்தையே காணோம்!"

"யாராவது ஒருத்தியிடம் இருதயத்தைப் பறி கொடுத்தவனாக இருப்பான்!"

'நீங்க நம்புனாலும் நம்புங்க இல்லாட்டிபோங்க, நான் சொல்லுறது உண்மை மாதிரிதான் இருக்குது. ஆனால் அது உண்மைதானா அப்படிங்கிறது எனக்கே டவுட்டுதான். இருந்தாலும் நம்புறதும் நம்பாததும் உங்க விருப்பத்தைப் பொறுத்தது.



செந்தியின் வதந்தி

சோ. பரஞ்சோதி

இப்படிச் சொல்கிறவர் பிரபல நகைச்சுவை நடிகர் எம் செந்திலாதிபன். வானொலி தமிழ் நிகழ்ச்சிகளிலும்தொலைக்காட்சியில் மலாய் நிகழ்ச்சிகளிலும் தமக்கே அமையப்பெற்ற நகைச்சுவை வெடிகளை அள்ளிப் போட்டு ரசிகர்களை வயிறு வெடிக்கச் சிரிப்பிலாழ்த்திக் கொண்டிருக்கிறார். இயல்பான யாரையும் காப்பியடிக்காத நல்ல நடிப்புத் திறன் மிக்கவர் திரு. செந்திலாதிபன். அவருக்கு நிறைய தமிழ் ரசிகர்கள் இருப்பதுபோல மலாய் ரசிகர்களும் பெருகிக்கொண்டிருக்கிறார்கள் என்பது நம் கலைஞர்களுக்குக் கிடைத்த பெருமை என்று நினைத்து வாழ்த்துவோம்.

அவர் சொல்லும் கதையைக் கேட்க ஆவலாக இருக்கிறது அல்லவா? 'செந்தி தொடருங்களேன்'

"சொல்லுறேன், நான் பயந்தது போதுமா, நீங்களும் பயப்படவேண்டாம். அப்பா இப்ப நெனேச்சா கூடா மேலெல்லாம் புல்லரிக்குது! பாருங்க என் முடியெல்லாம் துணி துவைக்கிற தேங்காய் புருஷ் கணக்கா மாறிடுச்சு. அந்தக் கதையை கேளுங்க"!

"ஒரு சமயம் எஸ். ஐ. ஏ. திடலிலே நம்ப வ. உ. சி. பந்து விளையாட்டுக்காரவுங்க போட்டி விளையாட்டுலே கலந்துகிட்டாங்க. நான் பந்து விளையாட்டு பைத்தியம். பெரிய விளையாட்டாளன் இல்லாட்டியும், நான் வெளியில் போற பந்துகளை ஒதைக்கிறதுல பெரிய சாம்பியன் தான். இந்தா பாருங்க தயவு செய்து சாம்பியன்கிறதை பெரிய எழுத்துல போடுங்க, ஆங்... கதைக்கு வருவோம்


"பந்து விளையாட்டு முடிஞ்சு நான் கால் நடையா. அப்படியே டேவான் பகாசா வழியா வந்தேன். குறுக்கே சுடுகாடு! அதுல புகுந்து வந்தா சுருக்கா விடு போயிச் சேர்ந்துடலாமும்னு நெனேச்சி, பாக்காருக்குள்ளே நொழைஞ்சு வந்தேன். அப்போ சுமார் மணி ஆறேமுக்கால் இருக்கும். வானம் கருக்கத் தொடங்கிடுச்சு. காக்கா கூட்டமெல்லாம் மரத்துமேல காய் மூயின்னு கரைஞ்சுகிட்டு அடையத தொடங்கிடுச்சு. ஜில்லுன்னு காத்து ஊய் ஊயினு வீசுது. அப்போ திடீருன்னு ஒரு சத்தம் ஆமா, சின்ன பிள்ளை அழுவுற சத்தம் கேட்டுச்சு. எனக்கு உடம்பெல்லாம் வெடவெடத்துப்போச்சு. இருந்தாலும் இன்னும் ரொம்ப இருட்டலையேங்கிற தைரியத்துல போனேன்."

"அப்போ ஒரு கல்லறையில மெழுகுவர்த்தி எரிஞ்சுகிட்டிருந்துச்சு. புதுசா பூச்செண்டெல்லாம் வைக்கப்பட்டிருந்திச்சு. பக்கத்துல அழகா செக்கச் செவேலுன்னு ஒரு பையன் சுமார் இரண்டு வயசிருக்கும். சட்டை சிலுவாரில்லாமெ தனியா அழுதுகிட்டிருந்தான். எனக்கு ரொம்ப பரிதாபமா இருந்திச்சு. அவனை அங்கே தனியா விட்டுட்டுப் போன அவுங்க அப்பா அம்மாவை திட்டணும்போல இருந்துச்சு. திட்டினேன். "பிலடிபூல், இடியட்". பையன் சிரிச்சான். ஐயோ அழகுன்னாலும் அழகு. உங்கவீட்டு அழகு எங்கவீட்டு அழகில்லே அப்படிப்பட்ட அழகு. எனக்கு ஓர் ஆசை. நாமெ தூக்கிட்டு போயிட்டா என்ன! பெத்தவங்க வந்து கேட்டா கொடுத்துட்டுப் போவோம். இல்லாட்டி நாமே வளத்துடறதுங்கிற தீர்மானத்துல, பிள்ளைய பாத்து, "ஹலோ பேபி...கம் கம் பேபி நயிஸ் பேபி கம் பேபி...கம்..."

பிள்ளை சிரிச்சுகிட்டே வந்தான். நான் ஆவலா வாரி எடுக்க என் கைகளை நீட்டினேன். ஐயோ.... ஐயோ, நெனைக்கவே பயமா இருக்குது! அந்தச் சின்னக் குழந்தை விவரிக்கமுடியாத இன்னும் என்னால புரிஞ்சு கொள்ளமுடியாத பயங்கர உருவமா மாறிடிச்சு. பூதமா காட்டேரியா...ஐயோ, பல்லு, வாய், மூக்கு, கண்ணு எல்லாம் பெரிசு பெரிசா பயங்கரமா... ஐயோ... அம்மா என்னைக் கவ்வுதே...நான் செத்தேன்...செத்...தே...ன்."

அவ்வளவுதான் எனக்கு ஞாபகத்துல இருக்குது. அதுக்குப் பிறகு எப்படி நான் விடுவந்து சேர்ந்தேன், படுக்கையில எப்படிப் படுத்தேன் ஒன்னுமே புரியலே. பொழுது விடிஞ்சு படுக்கையை விட்டு எழுந்ததுக்கப்புறம்தான் சுய உணர்வே தெரிஞ்சுது. அதுக்கிடையில என்ன நடந்துச்சுங்கிறதை இன்னைய வரை சிந்திச்சுப் பாக்கிறேன் எனக்கே புரியமாட்டேங்குது... அது நடந்து ஒரு வாரம் வரை நான் நானாகவே இல்லே. எதைக்கண்டாலும் பயம்... பயம்... ஒருவேளை கனவா இருக்குமோ... அப்படியும் நினைக்கமுடியலே...என்னத்தைச் சொல்லுறது. என் மூளையே குழம்புது. அதுசரி நீங்க நம்புறீங்களா?"

செந்திலாதிபன் கதையைக் கூறிவிட்டு "நம்புறீங்களா?" என்று என்னிடம் கேட்டார். நீங்கள் நம்பத் தயார் என்றால் நானும் ஓகே! ●



"ஏண்டி, புத்தகத்தை விளக்குமாத்துல கூட்டுறே?"

"சாரு, எழுத்தைக் கூட்டிக்கூட்டிப் படிக்கச் சொன்னாரு"



விடிந்ததிலிருந்தே ஒரே சலிப்பாக இருந்தது அந்த மண்புழுவுக்கு. தொட்டதற்கெல்லாம் கோபம், காரணம் புரியாத எரிச்சல், வெறுப்பு, விரக்தி.

"என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது! 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பதுபோல உயிரைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு நாளையும் ஓட்ட வேண்டி இருக்கிறது. தூண்டிலுக்குப் புழு தேடிக்கொண்டிருந்த சிறுவன் கையில் சிக்கிக்கொண்டு நேற்று நான் பட்டபாடு இருக்கிறதே—அவனுக்குத் தெரியாமல் கொட்டாங்கச்சியிலிருந்து நழுவி வெளியே வந்து சேர்வதற்குள் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்பதுபோல ஆகிவிட்டது!" என்று நெளிந்தது புழு.

எங்கேனும் கொஞ்சம் காற்றுடப் போய்விட்டு வரவேண்டும்போல் அதற்குத் தோன்றியது; மண்ணுக்கு வெளியே தலைநீட்டிப்பார்த்தது. ஆளரவம் இல்லை. பறவைகளின் கீச்சுக் குரல்கூட கேட்காதது அதற்கு மிகுந்த நிம்மதியைக் கொடுத்தது. அவற்றின் காலை உணவாகத் தன்னை ஆக்கிக்கொள்ள மண்புழுவுக்கு விருப்பமில்லை. மெல்ல மெல்ல ஊர்ந்து சென்றது.

"வாழ்க்கையாவது, மண்ணாவது! இந்த உடம்பும், இந்த உயிரும் இந்த வாழ்க்கையும் இன்னும் எத்தனை நாளைக்கோ, யாருக்குத் தெரியும்! பொழுது விடிந்தால் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதே பெரும்பாடாகி விடுகிறது. 'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா' என்றும் 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என்றும் என்னைப்போன்ற மண்புழுக்களுக்காகவே பெரியவர்கள் பாடினார்கள் என்று தோன்றுகிறது!"

மிகுந்த சிந்தனையோடு ஊர்ந்து சென்றுகொண்டிருந்த மண்புழு 'சடக்'கென்று நின்றது. எதிரே ஒரு பெரிய மரம் கிளைகளைப் பரப்பிக்கொண்டு பூதாகாரமாகத் தோற்றம் தந்தது. அதன் அடியில் முனிவர் ஒருவர் கண்மூடி அமர்ந்து கடுந்தவம் இயற்றிக்கொண்டிருந்தார். நிர்மலமான அவர் முகத்தில் ஞானம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. முக்காலமும் உணர்ந்த முனிவர் என்பது பார்த்த மாத்திரத்திலேயே மண்புழுவுக்குத் தெளிவாயிற்று. மிகுந்த பணிவோடு, மெல்லிய குரலில் "சுவாமி!" என்று அழைத்தது.

முனிவரின் இமைகள் விரிந்தன. மண்புழுவை ஏறிட்டு நோக்கினார்.

"சுவாமி! ஓர் ஐயம்! தங்களிடம் கேட்டுத் தெளியலாம் என்று ஆவல்; தங்கள் அனுமதி வேண்டுகிறேன்!" என்றது மண்புழு.

"கேள்!" என்றார் முனிவர்.

"எல்லா உயிரினங்களுக்கும் மறுபிறவி உண்டு என்பது உண்மையா?"

"உண்மை!"

"என்போன்ற மண்புழுக்களுக்குக்கூட மறுபிறவி உண்டா?"

"உண்டு!"

"சுவாமி! இந்தப் பிறவி எனக்குப் பெருஞ்சோதனையாகிவிட்டது. மண்ணுக்குள்ளேயே மறைந்து வாழவேண்டி உள்ளது. எதைக் கண்டாலும் பயந்து சாகிறேன். உரிமையைக் கேட்க வாயில்லை. தட்டிக் கேட்க நெஞ்சுரமில்லை. எதிர்த்துப் போராட உடலில் வலுவில்லை. முதுகெலும்பு என்று கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர அது எனக்கு அறவே இல்லை. இந்தப் புழுவாழ்க்கை எனக்கு அடியோடு வெறுத்துவிட்டது. அடுத்த பிறவியில், மிக உயர்வாக இல்லையென்றாலும் இப்போதைய வாழ்க்கையைவிட ஓரளவாவது நல்ல வாழ்க்கை வாழ விரும்புகிறேன். என் மறுபிறவி என்ன என்று தயவு செய்து கூறுவீர்களா சுவாமி!"

ஒருகணம் கண்களை மூடித் தியானித்த முனிவர் மிக அமைதியாகச் சொன்னார்: "அடுத்த பிறவியில் நீ ஒரு தமிழனாகப் பிறப்பாய்!"

"ஐயோ! தமிழனாகவா? அதைவிட மீண்டும் மண்புழுவாகவே பிறந்துவிடுகிறேனே! அதற்கு வழியே இல்லையா சுவாமி?" என்று பதறியது மண்புழு.

மறுமொழி ஏதும் கூறாமல் முனிவர் மீண்டும் தவத்தில் ஆழ்ந்தார்.

முன்னைவிடப் பலமடங்கு விரக்தியோடு அங்கிருந்து நகர்ந்தது மண்புழு. ■



உலகத்திலேயே இரைச்சல் நிறைந்த நகரம் ஜப்பானிலுள்ள தோக்கியோ நகரமா? இங்கிலாந்திலுள்ள லண்டன் நகரமா? இரண்டும் அல்ல! ஹாங்காங் நகரம் தான் உலகத்திலேயே இரைச்சல் மிகுந்த நகர் என்பது ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது.



ஹாங்காங்கில் அதிகமான இரைச்சல் ஏற்படப் பாதி காரணம், அந்த நகரத்தின் வசிப்பிடப் பகுதிக்குள்ளேயே அனைத்துலக விமான நிலையம் இருப்பதுதான். பாவம், அங்கு வசிப்போர் எப்படித் தூங்குகிறார்களோ?

பிள்ளை வரம்

சி. வடிவேல்

"இந்தியர்களுக்கு எத்தனை இடங்கள் தான் தன்றாள் இருக்கின்றன" என்பதைப்பற்றிச் சிறிதும்கவலையின்றி, புதிதாகக் கட்டப்படும் சிரம்பான் பெரிய மார்க்கெட், திறப்பு விழாவுக்காக புதுமணப் பெண்ணைப்போலத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தது. தூரத்திலிருந்து பார்க்கும்போதே "பசார் பெசார் சிரம்பான்" என்றும் பொன்னிறத்தால் எழுதப்பட்ட எழுத்துக்கள் மின்னின. வெளிப்புறப் பூச்சுக்கள் எல்லாம் முடிந்துவிட்டன. கார் பார்க் செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்க கோடுகளிடப்பட்டு எண்களும் போடப் பட்டுவிட்டன. புதிய மார்க்கெட்டையும் பெரிய சாலையையும் இணைக்கும் சாலைப் பகுதிகள் மட்டுமே இன்னும் சிறிது பூர்த்தியாகாமல் இருந்தன.

"சிறிது வாயில் அள்ளிப் போட்டுக் கொள்ளலாமா" என்று மணக்கும்படி காப்பிக் கொட்டையில் கறுப்புச் சீனியும் கலந்து கருவலாக வறுத்ததுபோன்று கல்லுக் குவாரியிலிருந்து கொண்டுவந்த "தாரு"டன் கலந்த பொடிக் கற்களான பிரிமிக்ஸை பாபர் கிரின் இயந்திரம் ஒரே அளவில் கொட்டி நிரவிக்கொண்டிருந்தது. அடுத்துச் சிறிது தூரத்தில் ஆறு டன் எடையுள்ள ரோலரை ரோலர் டிரைவர் ஆறுமுகம் முன்றும் பின்றுமாக உருளச் செய்து பிரிமிக்ஸை மேலும் இறுக்கிச் சாலையை உறுதிப்படுத்திக்கொண்டிருந்தான்.

ஆறுமுகத்தின் தந்தை அந்தக் காலத்தில் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தலைப்பாகையையும் சுற்றிக் கொண்டு மூன்று டன் ரோலரை ஓட்டி இந்த மலாயா மண்ணுக்கே உரமானான். இன்று அவன் மகன் ஆறுமுகம் நீண்ட சிலுவார் அணிந்து ஸ்கூட்டரில் வந்து இரண்டு மடங்கு கனமான ஆறு டன் ரோலரை ஓட்டுகிறான். இதுதான் "முன்னேற்றம்"


இந்த ரோலர் டிரைவர் வேலையும் அவன் தந்தை வேலை செய்த அனுபவமும் ஒரு எக்ஸ்கோ மெம்பரின் சிபாரிசும் சேர்ந்த பின்னர்தான் கிடைத்தது! எல். சி. இ.யில் மூன்றாவது தகுதியில் தேர்ச்சி பெற்ற அவனுக்கு இந்த ரோலர் டிரைவர் வேலையே பெரிய உத்தியோகம்தான்! கிடைக்கும் ஓவர் டைம் வேலைகளை அவன் நழுவவிடுவதே இல்லை. அவனுக்குப் பின்னால் வயதுக்கு வந்த மூன்று தங்கைகளும் ஒரு தம்பியும்வேறு இருக்கின்றனர். டவுன் கௌன்சில் வேலையில் ஓய்வு பெற்ற பின்னரும் ஓர் ஆங்கிலப் பள்ளி ஆசிரியர் வீட்டில் ஆயாவாக வேலை செய்து அவனது தனி வருமானத்திற்குத் துணை செய்கிறாள் அவன் தாய் காமாட்சி.

தங்கைகளுக்குத் திருமணம் செய்து முடித்தபின்னர்தான் அவன் திருமணம் செய்வதைப்பற்றி நினைப்பது என்னும் பிடிவாதத்தை அவன் தாய் ஒரு பலமான மாற்று ஆயுதத்தால் தாக்கிப் பிளந்து விட்டாள்!

"உங்க அப்பா போன மாதிரி நானும் போயிட்டா இந்த மூணு பொம்பளைப் பிள்ளைகளையும் நீ எப்படி கவனிச்சுக்க முடியும்? முன்னாலே நீ ஒரு கலியாணத்தைப் பண்ணிக்கிட்டு வீட்டுக்கு ஒரு பொண்ணு வந்துட்டா அது உனக்குத் துணையா இருக்கும்" என்று அழுத்தமாக வாதஞ்செய்து பக்கத்து எஸ்டேட்டிலிருந்து ஒரு பெண்ணையும் பார்த்து அவனுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டாள் காமாட்சி.

அந்தப் பெண்ணும் எஸ்டேட் தமிழ்ப் பள்ளியில் ஆறாவது வகுப்பு வரை படித்துவிட்டு ரிமூவ் வகுப்பு வழியாகச் சென்று ஒரு மூன்றாவது கிரேட் எல். சி. இ. அத்தாட்சிப் பத்திரத்தையும் வைத்துக்கொண்டிருக்கின்றாள்.

"மூன்று தங்கைகளுடன் இந்த எஸ்டேட் பெண் எப்படி ஒத்துப் போகுமோ என்று அஞ்சிக்கொண்டிருந்த ஆறுமுகத்திற்குப் பெரும் வியப்பாகவே இருந்தது. தாயும் தனது தங்கைகளுமாவது சில சமயங்களில் வம்பு செய்து கொள்வார்கள். இதுவரை மாமியார், மருமகள், நாத்தனார் சண்டை என்று இல்லாதது அவனுக்கு நிம்மதியாக இருந்தது. அவன் கடைசித்தம்பி கோபாலுக்கு லட்சுமிதான் டியூஷன் வாத்தியார்.



"அண்ணி, அண்ணி" என்று அவள் பின்னாலேயே சுற்றிக்கொண்டிருப்பான். தமக்கைகளைக்கூட இப்போது அவன் கவனிப்பதில்லை.

திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டாலும் ஆறுமுகம் இன்னும் புது மாப்பிள்ளைபோல்தான் இருந்துகொண்டிருக்கின்றான். இரண்டு வாரங்களுக்கு முன்தான் பெரிய தங்கையை ஓர் இடத்திலிருந்து பெண் பார்க்க வந்திருந்தனர்.

ரோலரை இருபது அடி தூரத்திற்குள் முன்னும் பின்னும் நகர்த்திக்கொண்டிருப்பது போலவே ஆறுமுகத்தின் எண்ணமும் வீட்டைச் சுற்றியே முன்னும் பின்னும் நகர்ந்துகொண்டிருந்தது. இன்று காலையில்கூட அவன் தாய், தான் ஆயா வேலை செய்யும் வீட்டுக்குப் புறப்படுவதற்கு முன்னர் "இன்னிக்கு வியாழக்கிழமை; ஓவர்டைம் வேலைன்னு இருந்திடாதே. கண்டிப்பா அஞ்சி மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்திடு" என்று சொல்லிவிட்டுப் போனது நினைவில் ஓடிக்கொண்டிருந்தது. அவனுக்குத் திருமணம் முடிந்துவிட்டாலும் வீட்டுச் சாவி அம்மா கையில்தான் இருந்தது.

புதிய மார்க்கெட் திறப்பு விழாவுக்கு விரைவில் சாலை பூர்த்தியாக வேண்டியிருந்ததால் அவனுக்குத் தொடர்ந்து ஓவர் டைம் வேலை இருந்துகொண்டிருந்தது. ஆயினும் இன்று அம்மாவின் சொல்லை மீறமுடியாமல் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டான் வீட்டுக்கு.

வழக்கமாக ஆறு மணிக்குமேல் வீட்டுக்கு வரும் அவன் தாயார் அன்று ஐந்து மணிக்கு முன்னரே வந்திருந்தாள். நெற்றியில் விபூதி பட்டையாக இருந்தது! அதைப் பார்த்தவுடன் இன்று வியாழக்கிழமையா அல்லது வெள்ளிக்கிழமையா என்று அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

வீட்டில் ஒரு பெரிய முருகன் படத்தை வைத்துப் பூசை செய்வதும், வெள்ளிக்கிழமை தோறும் தவறாமல் பாலதெண்டாயுதபாணி ஆலயத்திற்குச் சென்று வருவதும் அம்மாவின் வழக்கமான கடமை என்பது அவனுக்குத் தெரியும். இன்று எதிர்பாராதவிதமாக வியாழக் கிழமை மாலையே விபூதிப் பட்டையுடன் இருப்பது என்ன முக்கியம் என்று அவனுக்கு விளங்கவில்லை.

"ஆறுமுகம், நீயும் லட்சுமியும் குளிச்சிட்டு தயாரா இருங்க. ஏழு மணிக்கெல்லாம் ஒரு இடத்துக்குப் போவணும்" என்று கூறிக்கொண்டே வீட்டின் பின் பகுதிக்குச் சென்றாள் அவன் அம்மா.

தாயின் இந்த ஆணை, "வீட்டுக்குச் சிக்கிரமாய் வரச் சொன்னது தங்கைக்கு மாப்பிள்ளை பார்க்கச் செல்ல அல்ல" என்பது புரிந்துவிட்டது. "சரி, வழக்கமாக எந்தப் புதிய கோயிலுக்குப் பிள்ளை வரம் கேட்கவோ!" என்று உதட்டைப் பிதுக்கியபடி செய்தியைக் கேட்டுவிட்டு உள்ளே ஓடிய மனைவி லட்சுமியைக் கண்களை அகல விரித்து நோக்கினான் ஆறுமுகம்.

இந்த ஆண்டில் எல். சி. இ. எழுதப் போகும் அவன் தம்பி வீட்டின் வெளிப்புறம் அல்லூர் ஓரமாக உட்கார்ந்து பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தான். அண்ணி வந்தபிறகு எல்லா வேலைகளையும் அவள் பொறுப்பில் விட்டுவிட்டு எந்த வேலை எப்படியிருந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டுச் சிங்கப்பூர்-கோலாலம்பூர் என்று மாற்றிமாற்றித் தொடர் நாடகங்களையும், கதைகளையும் ஹிந்தி நேயர் விருப்பங்களையும் கேட்கும் அவனுடைய சகோதரிகள் மூவரும் வீட்டுப் பின்புறத்தில் டிரான்சிஸ்டரைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர்.

பெரிய அதிகாரிகளின் விட்டு கார் நிறுத்தும் காரேஜ் அளவுகூட இல்லாத அந்த டவுன் கவுன்சில் வீட்டில் அவனது மாமனார் திருமணப் பரிசாக வாங்கித் தந்த கட்டிலைப் போட்டபோது, உள்ள அந்த ஒரே அறையின் முக்கால் பகுதியையும் அடைத்துக்கொண்டது. வயதுக்கு வந்த மூன்று தங்கைகளும் தாயும் உடன் இருக்கும்போது அந்த ஒரு கட்டிலில் இவர்கள் இருவரும் படுத்துக்கொண்டால் மற்றவர்கள் என்ன செய்வது? திருமணமான ஏதோ முதல்நாள் சடங்கிற்குப் பின் ஆறுமுகமும் லட்சுமியும் ஒருநாள்கூட அந்தக் கட்டிலில் சேர்ந்து படுத்ததில்லை. அவனுடைய தங்கைகள் மூவருடன் லட்சுமி மட்டும் குறுக்கு வாட்டில் படுத்துக்கொள்வாள். கட்டிலுக்கு உள்ள இடம்போக மிஞ்சிய மூலையில் தாய் சிறிய பாயில் படுத்துக்கொள்வாள். ஆறுமுகமும் அவன் சிறிய தம்பியும் வெளி முற்றத்தில்தான். அந்த முற்றத்தின் ஒரு மூலையில் அவன் அம்மாவின் பூஜை மேடை. அதில் பெரிய முருகன் படம் மஞ்சள் துணியால் மூடியிருக்கும்.

இந்த நெருக்கடியில் ஏதோ மாதத்தில் சில நாட்களுக்கு மட்டுமே லட்சுமியிடம் நெருங்க ஆறுமுகத்திற்கு வாய்ப்புக் கிடைக்கும். அதுவும் தங்கைகள் மூவரும் அன்று கேட்ட வானொலி நாடகங்கள், படித்த சினிமாச் செய்திகள் பற்றிப் பேசி உரையாடி பேச்சுச் சத்தம் ஓய்ந்து தூங்கிய பிறகு தாகத்திற்காகத் தண்ணீருக்குக் குரல் கொடுப்பான் மெதுவாக. அந்த நேரத்தில் லட்சுமியும் விழித்துக் கொண்டிருந்து கட்டிலை ஆட்டாமல் எழுந்து வெளியே வந்தால் உண்டு. இல்லையேல் தாகத்துடன் சோர்ந்து உறங்கிய நாட்களும் பல உண்டு.

திருமணமாகி ஆறு மாதம் வரை பொறுமையாக இருந்த பக்கத்து வீட்டுப் பெண்கள்கூட "லட்சுமி குளிக்கிறாளா?" என்று கேள்வி கேட்டுத் தொலைக்க ஆரம்பித்துவிட்டார்கள். மகனுக்குத் தெரியா

மலைகூட எங்கெங்கோ வேண்டிக்கொண்டு மருமகளுக்கு விபூதி பிரசாதம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறாள் காமாட்சி. யாரோ பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு பெட்டாலிங் ஜெயா யூனிவர்சிட்டி ஆஸ்பத்திரிக்காவது அழைத்துப் போகும்படி இரண்டொரு முறை மகனிடம் சொல்லிப் பார்த்தாள். ஆறுமுகம் இவற்றையெல்லாம் கண்டும் காணாததுபோலும் கேட்டும் கேளாதது போலும் இருந்துகொண்டிருந்தான்.

"தன்னைப்போலவே தனக்குப் பிறக்கும் பிள்ளையும் மூன்றாவது தலைமுறையாக இந்த எலிப்பொந்து வாழ்க்கை வாழாமல் உயர்ந்த படிப்புப் படிக்க வேண்டும். அதற்குத் தனது வருமானத்தைப் பெருக்கித் தயார் படுத்திக் கொள்ளவேண்டும். அதுவரை சில ஆண்டுகளுக்காவது குழந்தை இல்லாமல் இருக்கவேண்டும்" என்று ஆறுமுகம் எண்ணியிருந்தான். ஆனால் அவன் தாயோ "மருமகளுக்குக் குழந்தை இருக்காதோ" என்று லட்சுமியிடமே சில சமயம் சாடைமாடையாகக் கேட்கும்போது அவனுக்கு வேதனையாக இருந்தது.

"இன்று பிள்ளை வரத்திற்காக எந்தக் கோயிலுக்கு நேர்ந்துகொண்டு வந்திருக்கிறார்களோ?" என்று எண்ணிக்கொண்டிருக்கும்போதே, பின்பக்கம் சென்று பறித்துவந்த மல்லிகை மலர்களை 'முருகா முருகா" என்று அடிக்கொருதரம் சொல்லிக்கொண்டிருக்கும் முருகன் படத்திற்குப் பக்கத்தில் புதிதாக வைத்துள்ள ஒரு படத்திற்கு வைப்பதைப் பார்த்தான். அது என்ன சாமி படம் என்று அவனுக்குச் சரியாகத் தெரியவில்லை. போஸ்ட் கார்டு அளவில் இருந்தது. அந்த படத்திற்குப் பக்கத்தில் வைத்திருந்த சில புத்தகங்களை எடுத்துக் கொண்டு வந்தாள் காமாட்சி.

"ஆறுமுகம், இந்த புக்கெல்லாம் படிச்சுப்பார். நான் வேலை செய்ற விட்டு இங்கிலீஸ் வாத்தியார் ஐயா இந்த தமிழ்ப் புக்கெல்லாம் உங்கிட்டே கொடுத்துப் படிக்கச் சொன்னார். இன்னிக்கு இரவுக்கு அந்த ஐயா விட்டுக்குத்தான் லட்சுமியை நீ அழைச்சுக்கிட்டுப் போகணும். வியாழக்கிழமை ராத்திரியிலே தான் பஜனை, பூசை எல்லாம் நடக்குது. பெரிய பெரிய படிச்சவங்களெல்லாம் வந்து இராத்திரி பன்னிரண்டு மணி வரைக்கும்கூட பஜனைப் பாட்டு பாடறாங்க. இன்னிக்கு வியாழக்கிழமை, நான் வேலை செய்ற ஐயா விட்லே பஜனை நடக்குது. பொங்கல், பிரசாதம் எல்லாம் துணையாயிருந்து செய்து வைச்சிட்டு உன்னையும் லட்சுமியையும் அனுப்பி வைக்கிறதுக்குத்தான் சீக்கிரமா வந்துட்டேன். பஜனை முடிஞ்ச உடனே அந்த பகவான் படத்திலே இருந்து விபூதி கொட்டுதாம்! அந்த பகவான் கிருபையாலே லட்சுமிக்கு ஒரு பிள்ளை பிறக்கும்னு நம்பிக்கிட்டிருக்கேன்" என்று தழுதழுத்த குரலில் கூறிக்கொண்டே கையிலிருந்த புத்தகங்களை மகனிடம் கொடுத்தாள் காமாட்சி.

தன் தாய் கணகண்ட தெய்வமாக இத்தனை நாள் வணங்கும் முருகன் படத்திற்கு ஒரு படி மேலாக மதித்துப் புதிதாகப் பேசப்பட்டு வரும் சாயிபாபா படத்தைப் போற்றி அதற்கு மலர் வைத்து வணங்கியதை அப்போதுதான் ஆறுமுகத்தால் சரியாக உணர முடிந்தது.

தாயிடமிருந்து புத்தகங்களை வாங்கும்போது ஏனோ அவனுக்குக் கைகள் நடுங்குவது போலிருந்தது. நல்ல உயர்ந்த தாளில் அச்சிடப்பட்ட புத்தகங்கள். முதல் புத்தகத்தைத் திறந்தான். "ஓம் ஸ்ரீ பகவான் சத்ய சாயிபாபா நம" எனத் தொடங்கி "ஓம் ஸ்ரீ பகவான் சத்யசாயி சர்வலோக நாதாய நம" என்னும் அஷ்டோத்தர சதநாமாவளியாகிய ஆயிரத்தெட்டு நாமாவளிகள் இருந்தன. அடுத்து இருநூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பஜனைக் கீர்த்தனைகளும் இருந்தன.

அடுத்த நூல் "சத்தியம்-சிவம்-சுந்தரம்" சத்திய சாயிபாபாவின் வாழ்க்கை வரலாறு. அடுத்த நூல் "ஞான வாஹினி" சாயிபாபாவின் உபதேசங்கள். தலைப்புக்களை மட்டும் பார்த்துவிட்டு பக்கத்திலிருந்த சிறிய முக்காலி மீது வைத்தான்.

தனக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காகத் தனது தாய் நிலைமையைத் தெரியாமல் படும்பாட்டை நினைக்கும்போது ஆறுமுகம் குறுகிப் போனான். தான் அன்றாடம் வணங்கும் முருகனைக்கூடப் புறக்கணித்துவிட்டு மனிதனைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளுமளவு மனம் மாறிவிட்டதை அறிய பெரும் வேதனையாக இருந்தது. படித்தவர்களே இப்படி மயக்கத்தில் மூழ்கும்போது படிப்பறிவில்லாத தாய் மாறுவது வியப்பாகத் தோன்றவில்லையாயினும் தன் தாயின் தெய்வ வழிபாட்டின் மனமாற்றத்திற்குத் தான்தான் காரணம் என்று நினைக்கும்போது பெரிதும் வருந்தினான்.

"இந்தப் பஜனையிலே, மெம்பரா உள்ளவங்க மட்டுந்தானே கலந்து கொள்ளமுடியுமாமே!" என்று லேசாக ஒரு மறுப்பைத் தெரிவித்துப் பார்த்தான் ஆறுமுகம்.

"இல்லேப்பா, நான் அந்த ஐயா கிட்டே கேட்டுகிட்டு வந்திருக்கேன். அதனால்தான் இந்தத் தமிழ்ப்புத்தகமெல்லாம் கொடுத்தாரு. இந்த வியாழக்கிழமை விட்டுட்டா அப்புறம் அடுத்த கிழமைதான் வேற விட்டிலே இருக்கும், இன்னிக்குப் போய் அந்தப் பகவான் விபூதியை வாங்கி லட்சுமிக்குப் பூசிட்டு வா" என்றாள் மறுபடியும் காமாட்சி.

"சரிம்மா" என்று மெல்லிய குரலில் சம்மதம் தெரிவித்தான் ஆறுமுகம். இந்த உரையாடல்களை எல்லாம் கேட்டும் கேட்காததுபோல் ஒரு சிறு தடுப்புக்கு அப்பால் உள்ள சமையல் பகுதியில் இருந்து சமையல் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள் லட்சுமி.

மகன் சம்மதம் தெரிவித்ததும் தாய்க்குப் பெரிதும் மகிழ்ச்சியாகிவிட்டது. "பூஜை முடிய இராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலே ஆனாலும் ஆகும். ஏழு மணிக்குப் புறப்படறதுக்கு முன்னமேயே லட்சுமியை ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு அவளை அழைச்சிட்டுப்போ" என்று மருமகள் மீது கரிசனத்துடன் கூறிவிட்டுப் பூஜைமேடையில் உள்ள எண்ணெய் விளக்கை ஏற்றிவிடச் சென்றாள் காமாட்சி. சுமார் ஏழு மணியளவில் ஆறுமுகம் புறப்பட்டான்.

லட்சுமியும் ஒரு தலைக் கவசத்தை மாட்டிக்கொண்டு ஸ்கூட்டரின் பின் ஏறிக்கொண்டாள். ஸ்கூட்டர் லோபாக் சாலையைக் கடந்து சிரம்பானில் தமிழர்கள் கடைகள் உள்ள பவுல் தெருவழியாக அத்தெருவின் கடைசியிலுள்ள பாலதெண்டாயுதபாணி ஆலயத்தின் முன்வந்து நின்றது.

"என்ன அத்தான் மாமி திமியாங் ரோட்டுப் பக்கம் உள்ள ஒரு விட்டுக்குப் போகச் சொன்னாங்க! நீங்க சுப்பிரமணியர் கோயிலுக்கு அழைச்சிட்டு வந்திருக்கீங்க?" என்று வியப்புடன் கேட்டுக்கொண்டே ஸ்கூட்டரிலிருந்து இறங்கினாள் லட்சுமி. ஆறுமுகம் ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனமாக கோயிலுக்குள் சென்றான்.

அன்று வியாழக்கிழமையாதலால் பக்தர்கள் ஓரிருவர் மட்டுமே இருந்தனர். கோயிலின் சுற்றுப்புற விளக்குகள் கூட எல்லாம் எரியவில்லை. ஆறுமுகம் கோயிலை ஒரு முறை வலம் வந்து சந்நிதானத்திறகு முன்வந்து நின்று கைகூப்பி வணங்கிவிட்டு வெளியே வந்தான். லட்சுமியும் மௌனமாக அவனைப் பின்தொடர்ந்து வலம் வந்து வணங்கி விட்டு உள்சென்று சிறிது விபூதியைத் தொட்டுப் பூசிக்கொண்டு ஸ்கூட்டரின் பின் வந்து ஏறிக்கொண்டாள்.

கோயிலை விட்டுப் புறப்பட்ட ஆறுமுகம் பால தெண்டாயுதபாணி ஆலயத்திற்கு எதிர்ப்புறமுள்ள பழைய தபால் ஆபீஸ் வழியாக குளக்கரைப் பூங்கா பக்கம் ஸ்கூட்டரை விட்டான்.

குளக்கரைப் பூங்காவின் மத்தியில் அமைக்கப்பட்ட மேடை மீது வர்ண விளக்குகள் அழகாக ஒளிவீசிக்கொண்டிருந்தன. சாலை ஓரத்தில் ஆங்காங்கே சில கார்களும், மோட்டார் சைக்கிள்களும் நிறுத்தப்பட்டிருந்தன. குளக்கரைப்பூங்காவிற்கு எதிர்ப்புறமுள்ள புல்தரையில் குழந்தைகளை விளையாடவிட்டு விட்டுப் பெற்றோர்கள் சிலர் சிமெண்ட் பெஞ்சுகளில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். சில காதலர்கள் நெருக்கமாகக் கைகளைக் கோத்துக்கொண்டு பூங்காவின் ஓரமாக நடந்துகொண்டிருந்தனர். வானத்து நிலவொளியைப் பெரிய பூமரங்கள் தடுத்து மறைத்துக் கீழே உட்கார்ந்திருப்பவர்களுக்குக் கேடயமாக இருந்துகொண்டிருந்தன.

ஆறுமுகம் குளக்கரைப் பூங்கா ஓரமாக ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு இதுவரை மௌனமாக வந்த அவன், லட்சுமியை அணைத்துப் பிடித்து ஸ்கூட்டரிலிருந்து இறக்கிக் கீழேவிட்டான். அவளும் ஒரு கையில் தலைக் கவசத்தை மாட்டிக்கொண்டு மறு கையில் கைப்பையை எடுத்துக் கொண்டாள். இருவரும் குளக்கரை ஓரமாக நடந்தனர்.

ஆறுமுகம் லட்சுமியின் கையிலிருந்த கைப் பையை வாங்கினான். அதில் இரகசியமாக அவர்கள் இருவருக்கு மட்டும் தெரியும் உள் பகுதியில் உள்ள ஜிப்பைத் திறந்து அதிலிருந்த மாத்திரைகளை எடுத்து குளத்தில் வீசினான். அதை வியப்புடன் பார்த்த லட்சுமி "என்ன அத்தான் உங்கள் டவுன் கவுன்சிலிலே குளத்து மீன்களுக்குக்கூட கர்ப்பத்தடை மாத்திரை கொடுக்கும் உத்தியோகம் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்களா?" என்றாள் சிரித்துக்கொண்டே கேலியுடன். வழக்கத்திற்கு மாறாக இன்று குளக்கரைப் பூங்காவிற்கு வந்ததும் நெருக்கமாக அணைத்து நடப்பதும் மாறுதலாக இருந்தது.

"இன்னும் கொஞ்சம் நாளைக்கு நாம் குடும்பக் கட்டுப்பாட்டைக் கவனிச்சா, உன்னோட மாமியார் நம்ம ரெண்டு பேரையும் புதிசா வர எந்தெந்த சாமி பகவான்களிடமெல்லாம் அனுப்பி வைப்பார்களோ தெரியாது! அதற்குள் நாம் மூணு பேராயிடணும். அதற்குப் பிறகு வேண்டுமானால் இந்த மாத்திரைகளைப் பார்த்துக் கொள்வோம்!" என்று நகைப்புடன் கூறிக்கொண்டே கன்னத்தைப் பிடித்து லேசாகக் கிள்ளிவிட்டு மரத்தடியிலிருந்த பெஞ்சை நோக்கிநடந்தான். ■

கவனம்!

மூட்டைப் பூச்சி கடிப்பதனால் இரத்தம் மட்டும் தான் வீணாகிறது; வேறு ஆபத்து எதுவும் இல்லை என்பது தவறாகும். தொழுநோய், காசநோய், பிளேக் வைசூரி, மலேரியா, இளம் பிள்ளை வாதம், மஞ்சள் காமாலை போன்ற ஏறத்தாழ முப்பது நோய்கள் மூட்டைப் பூச்சிகளின்வழி பரவலாம் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

மறக்க முடியாதவர்

எஸ். ராஜா பி.பி.டி.

வாழ்க்கையில் எதிர்பாராமல் சில நல்ல, சுவையான நேரங்கள் அமைவதுண்டு. வாழ்நாளில் அத்தகைய நேரங்களையோ, காலங்களையோ நம்மால் மறக்கவே முடியாது. என் வாழ்க்கையிலும் அத்தகைய ஒரு காலம் அமைந்தது என்பதைச் சொல்லிக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அகிலன் நம் நாட்டுக்கு வருகை தந்தார். அதற்கு முன்பே அவரது நாவல்களில் சிலவற்றைப் படித்து இப்படியும் ஒரு சிந்தனையாளர் இருக்க முடியுமா என்று நான் வியந்ததுண்டு. டாக்டர் மு. வ. வுக்குப் பிறகு நான் விரும்பிப் போற்றிய ஒரு நாவலாசிரியர் அகிலன்தான்.

கார்த்திகேசு, அவரது வருகைக்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்கிறார் எனக் கேள்விப்பட்டேன். எதிர்பாராமல் கார்த்திகேசுவே இதைப்பற்றி என்னிடம் ஒருநாள் கூறினார். "உங்கள் உதவியெல்லாம் எனக்குத் தேவை ராஜா" என்றார்.

அகிலனும் வந்து சேர்ந்தார். கணிசமான ஒரு குழுவினர் அவரை விமான நிலயத்திற்குச் சென்று வரவேற்றோம். அதற்கு முன் நான் அகிலன் அவர்களைப் பார்த்திராததால் உருவத்தைப் பார்த்ததும் மலைத்தேன். இந்தக் குள்ளமான உருவத்திடமா இவ்வளவு உயர்ந்த எண்ணங்கள் பளிச்சிடுகின்றன! இவ்வளவு எளிமையான தோற்றத்திடமா, அவ்வளவு பெரிய எழுத்தாற்றல் விளங்குகிறது! இவ்வளவு மெலிந்த விரல்களா பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கின்றன என்றெல்லாம் என் மனத்தில் கேள்விகள் எழுந்தன. எல்லாருமாக டாக்டர் தண்டாயுதம் வீட்டுக்குச் சென்றோம், டாக்டர் அவர்கள் அகிலனுக்கு மிக நெருங்கிய நண்பராதலால், அவர் வீட்டிலேயே அகிலன் தங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. அகிலன் சுற்றுப் பயணத்திற்கு மிக ஒழுங்கான திட்டத்தைக் கார்த்திகேசு வகுத்திருந்தார். பயணம் தொடங்கியது.

எங்கெங்கு அவர் சென்றார் என்பதைப் பட்டியலிடுவதைக் காட்டிலும், அவரின் மனம் எப்படியிருந்தது என்பதைப் புரிந்துகொள்வதுதான் நமக்கு இன்றியமையாதது. அவர் மலேசிய மண்ணில் கால் வைத்ததும் அவர் கேட்ட கேள்விகள் இரண்டு. ஒன்று இந்த நாட்டு எழுத்தாளர்கள் எப்படியிருக்கிறார்கள்? இந்நாட்டுத் தோட்டப் பாட்டாளி மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பது இரண்டு.

இந்த இரண்டு கேள்விகளுமே அகிலனின் மனம் எத்தகையது என்பதைக் காட்டின. நான் வியந்தேன். இந்த நாட்டுக்கு எத்தனையோ கலைஞர்கள் வருகின்றார்கள். அனைவரும், ரேடியோ கடை எங்கிருக்கிறது, துணிக்கடை எங்கிருக்கிறது என்றுதான் கேட்பார்கள். ஆனால் அகிலனின் கேள்வி வேறு வகையானது.

முன்னவர்களுக்குத் தங்களைப் பற்றி மட்டுமுள்ள ஆடம்பரமான சிந்தனை. அகிலனுக்கோ மற்றவர்களைப் பற்றிய பொதுச் சிந்தனை. கார்த்திகேசுவின் ஏற்பாட்டில் அவர் சில இடங்களுக்குச் சென்று சொற்பொழிவு செய்துவிட்டு வந்தார். வட மலாயா பக்கம் செல்லும்போது நானும் வரவேண்டுமென்று அழைத்தார். என் காரில், அகிலன், டாக்டர், கேசு, செல்வராஜ் ஆகியோர் புறப்பட்டோம்.

தைப்பிங் நகரில் கூட்டம். தைப்பிங் சென்று சேரும்வரை ஒரே இலக்கியகருத்தரங்குதான். எழுத்தாளர்களைப் பற்றியும், தோட்டப் பாட்டாளி மக்களைப்

கிறேன்! என்று இந்தக் களங்கம் என் சமுதாயத்தை விட்டு நீங்கும்" என்று மனமுருகினார்.

பின்னர் லயத்துப் பக்கம் சென்றோம். அங்குள்ள வீடுகளைக் கண்டோம். இந்த நாட்டுக்குச் செல்வத்தைத் தேடிக்கொடுக்கும் மக்கள் வாழும் வீடுகளா இவை என்று ஏங்கினார்.

சில அன்பர்களைக் கண்டோம். சில விளக்கங்களைப் பெற்றோம். அந்த சூழ்நிலை எல்லோருக்கும் கலக்கத்தை விளைவித்ததே தவிர யாருக்கும் மகிழ்ச்சியில்லை. பின்னர் மீண்டும் கோலாலம்பூரை நோக்கிப் பயணமானோம். வரும்போதெல்லாம் அவருக்கு இதைப் பற்றித்தான் பேச்சு.

போர்ட்டிக்சன் நகரில் ஒரு கூட்டம். அங்குதான் அவரிடம் நான் அதிரத்தக்க ஒரு சிறப்பைக் கண்டேன். ஆம், இது எனக்குப் புது அனுபவம்தான். இதுவரை இதுபற்றி எனக்குத் தெரியாது. காலையில் படுக்கையைவிட்டு எழுந்ததும், தான் உடுத்தியிருந்த உடைகளை அவரே துவைத்துக் காயவைத்துவிட்டு

பற்றியும் பேசிக்கொண்டே வந்தார். எழுத்தாளர்கள் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி அழுத்தமாகக் கூறியவர், பாட்டாளிகளின் வாழ்வையும் எண்ணி மனம் உருகினார். தைப்பிங் கூட்டம் ஒருவாறாக முடிந்தது. பலர் கேள்விகளை எழுப்பினர். அதற்கெல்லாம் தக்கவிடை கூறினார்.

தைப்பிங்கிலிருந்து திரும்பும்போது வரும் வழியில் ஒரு தோட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்று விரும்பினார். அதற்கு முன் சொல்லிக்கொண்டு சென்ற ஒரு தோட்டத்தில் அவருக்கு ஒரு பெரிய வரவேற்பு வழங்கப்பட்டுவிட்டதாம். அதனால் அவர் சொல்லாமலே சென்று ஒரு தோட்டத்தைக் காண வேண்டும் என்று கூறினார்.

வரும் வழியில் சுங்கைசிப்புட்டுக்கு அருகில் இருந்த ஒரு தோட்டத்திற்குச் சென்றோம். முதலில் அவர் கண்டது ஒரு கள்ளுக்கடையைத்தான். பார்த்து மலைத்து நின்றார். "என் சமுதாயத்தை இந்தக் கொடிய அரக்கன் தானே அழித்துக்கொண்டிருக்

வந்தார். இப்படிச் செய்வது ஒரு பெரிய காரியமல்லவென்றாலும் இதன் நோக்கம் என்னவென்பதைப் புரிந்துகொள்ள அவரைக் கேட்டேன்.

அதற்கு அவர் "இங்கு மட்டுமல்ல. என் வீட்டிலும் அப்படித்தான். எனக்குரிய எல்லா வேலைகளையும் நானே செய்துகொள்வது என்ற லட்சியத்தை வைத்துக் கொண்டிருக்கிறேன். இது காந்தியடிகள் காட்டிய நெறி. அவரது நெறியில் ஓரளவேனும் வாழவேண்டும் என்று எண்ணுகின்ற நான் கூடுமான வரையில் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறேன்" என்றார். இந்தப் பெரிய வாழ்க்கையை எண்ணி என் மனம் உருகியது. ஒரு சான்றோரின் கொள்கையை அறிந்துகொள்வது வேறு. அதைப் பின்பற்றுவது அவ்வளவு எளிதல்ல. இது அகிலன் மீது எனக்கிருந்த மதிப்பை மேலும் உயர்த்தியது என்றே சொல்ல வேண்டும்.

ஃ ஃ ஃ

அடுத்த ஒரு நிகழ்ச்சி. வானொலி தொலைக்காட்சி பயிற்சி நிலயத்தில் இயக்குநராகப் பணி

யாற்றும் எனது நண்பரான பாலா, அகிலனை தமது நிலையத்திற்கு அழைத்து, நிலையத்தில் உள்ளவர்களுக்கு அவரது அனுபவங்களை விளக்கி, சில ஆலோசனைகளை நல்க வேண்டிக் கொண்டார். அகிலன் அகில இந்திய வானொலி நிலையத்தில் இலக்கியப் பகுதியில் பணியாற்றிக் கொண்டிருப்பதாலேயே இந்தப் பணியைச் செய்யுமாறு தூண்டினார். அகிலனும் அதற்கு மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டார். இரண்டு நாட்கள் இந்தப் பயிற்சி நடைபெற்றது. தமக்குத் தெரிந்த எல்லா விபரங்களையும் உணர்த்தினார். இது மிகவும் பயனுடையதாக அமைந்தது.

மூன்றும் நாள் அதற்குரிய அன்பளிப்பாக ஒரு தொகையை அகிலனுக்கு வழங்க பாலா முன்வந்தார். அந்தக் காசோலையைக் கண்டதும் "இது என்ன?" என்று கேட்டார் அகிலன்.

"இது நீங்கள் தந்திருக்கும் பயிற்சிக்கு அரசாங்கம் தரும் அன்பளிப்பு" என்றார். அந்தத் தொகை தமிழகத்து தொகைக்கு ஏறத்தாழ ஆயிரம் ரூபாயாகும். அகிலன் பாலாவுக்குக் கூறிய பதிலைக் கேள்விப்பட்டு நான் மேலும் வியப்படைந்தேன்.

"நான் அருமையான ஓர் அனுபவத்தைப் பெற்றுள்ளேன், இங்கு நான் பயிற்சியளித்தேன் என்று கூறுவதைவிட, நான் கற்றுக் கொண்டதும் எவ்வளவோ உள்ளன, இதற்கு நான் ஒரு தொகையைப் பெற்றுக் கொள்வது நியாயமானதா? அதிலும் நான் தந்திருக்கும் பயிற்சிக்கு இது பெரிய தொகை. என் மனச்சான்று இதற்கு இடம் தராது. மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

பாலா எவ்வளவோ கூறியும் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். பிறகு பாலாவே சென்று எண்பது வெள்ளி பெறுமானமுள்ள ஒரு கைப்பையை வாங்கி இதையாவது நீங்கள் என் அன்பளிப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூற, அதனையும் "உங்களுக்கு ஏன் இவ்வளவு சிரமம்" என்று கூறிக்கொண்டே பெற்றுக்கொண்டார்.

இப்படி ஒரு பற்றற்ற மனநிலையை வளர்த்துக் கொண்டுள்ள எழுத்தாளரைப் பார்ப்பது அபூர்வம் என்பதே என் எண்ணம்.

எல்லாரோடும் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் மிக முக்கியமான கருத்துக்களைக் கூறினார். அவரது வாழ்க்கை முறைகள், லட்சியம் முதலானவற்றைக் கேட்கும் வாய்ப்பை நமக்கு அவர் அளித்து அதற்கு அவர் தெளிவான விளக்கத்தையும் கூறினார். "எழுத்தாளன் என்பவனுக்கு ஒரு நாலு முழ வேட்டியும், ஓர் அரைக்கைச் சட்டையும்தான், உடையைப் பொறுத்தவரை எளிய தோற்றம் இலக்கணமாக இருக்க வேண்டும் என்று எண்ணுபவன் நான். இதைப் பற்றிய ஓர் லட்சியம் எனக்குண்டு. அதற்குக் காரணமும் உண்டு. இதையே நீங்கள் எல்லாரும் பின்பற்ற வேண்டும் என்பதில்லை. பின்பற்ற வேண்டிய அவசியமுமில்லை" என்று கூறினார்.

தமிழ் எழுத்தாளன் எளிமையாகத்தான் தோற்றமளிக்க வேண்டும் என்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டேன்.

அவர் கூறினார்: தமிழ் எழுத்தாளர்களில் எழுத்தை வைத்து வருவாய் பெற்றவர்கள் மிகக் குறைவு. இன்னும் சிரமப்பட்டுத்தான் வாழ வேண்டியிருக்கிறது. மேலும் தமிழ் எழுத்தாளர்கள் இன்னும் பெருக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இந்நிலையில் தமிழ் எழுத்தாளன் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று ஒரு முடிவெடுத்தோமானால், வருவாய் குறைந்துள்ள யாருமே எழுத முன்வரமாட்டார்கள். ஆடம்பரம் வேண்டும் என்ற தேவையே அவர்களின் மனத்தில் ஒரு சோர்வை உண்டாக்கிவிடும். இந்த மனப்பான்மையை நாம் ஏற்படுத்தக் கூடாது. பெரிய எழுத்தாளர்கள் எளிமையாக வாழ்ந்தால்தான், வளரும் எழுத்தாளர்களுக்கும், நாமும் இவ்வாறு எளிமையாகவே இருந்தால் போதும் என்ற நிறைவு ஏற்படும். தேவை குறைந்துவிட்டால் ஓர் எழுத்தாளன் எழுத்துத் துறையில். இன்னும் மிகுதியான கவனம் செலுத்த முடியும்; அதற்கு வழிகாட்டியாகப் பெரிய எழுத்தாளர்கள்தாம் விளங்க முடியும்; விளங்க வேண்டும்" என்று கூறினார்.

இந்தக் கருத்திலிருந்து எழுத்தாளர்களை அவர் எவ்வளவு மதிக்கின்றார், மற்ற எழுத்தாளர்கள் மீது அவருக்கு எவ்வளவு அன்பும் பொறுப்புணர்ச்சியும் உள்ளது என்பது தெளிவாக விளங்கும்.

அவரோடு கலந்து பழகும் வாய்ப்பு சில நாட்களே எனக்கு கிடைத்தது என்றாலும், அவை என் வாழ்நாளில் மறக்க முடியாத நாட்களாகும். இதை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதால்தான், ஆயிரம் வெள்ளி பெறுமானமுள்ள அவரது நூற்களை வாங்கி மலேசியத்தின் நூல் நிலையங்களுக்கு அன்பளிப்பாக வழங்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். அதன் வழி இன்னும் அகிலனைப் பற்றித் தெரிந்துகொள்ளாத வாசகர்களும் தெரிந்துகொள்ள முடியும் அல்லவா?

சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டியவர் டாக்டர் மு. வ. அவர்கள். அவருக்கு அடுத்து அவரைப் போன்ற ஒரு தாய்மையாளரை நாம் நம் காலத்தில் பெற்றிருக்கின்றோம். அவர் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் பன்னூற்றுக்கணக்கான நூற்களைத் தமிழன்னைக்கு அளிக்க வேண்டும் என்பதே என் ஆசை. ★

புதுமை நிகழ்ச்சி

"மலேசிய வானொலியில் இதுவரை இடம்பெறாத மிகவும் புதுமையான நிகழ்ச்சியொன்றை தாங்கள் தயாரிக்க விரும்பினால் அந்நிகழ்ச்சி எவ்வாறு இருக்கும்?" எனக் கேட்டதற்கு, தயாரிப்பாளர் ஒருவர் இப்படிக் கூறினார்:

"அந்நிகழ்ச்சிக்கு 'அமைதி' எனத் தலைப்பிடுவேன். அரைமணி நேரத்திற்கு அமைதியை நிலவ விடுவேன்!"

தகவல்: எஸ். வைரக்கண்ணு.

பெற்ரேர் ஆசிரியர் சங்கம் சீருடைகளைத் துவைக்கிறது

என். கிருஷ்ணமூர்த்தி

வெளியூரிலிருந்து வந்த என் நண்பரிடம் பேச்சுவாக்கில் பெட்டாலிங் ஜெயா விவேகானந்தா தமிழ்ப்பள்ளியின் சிறப்புக்களைக் கூறினேன். அவற்றைக் கேட்டுவிட்டு உடனடியாகத் தமக்குப் பெட்டாலிங் ஜெயா பகுதியில் அதிலும் தமிழ்ப்பள்ளிக்கு அருகில் குடியிருக்க வீடு பார்க்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். காரணம் கேட்டேன். தமது பிள்ளைகளைப் பெட்டாலிங் ஜெயா விவேகானந்தா பள்ளியில் சேர்க்க வேண்டுமாம்.

நான் அந்தப் பள்ளியில் இல்லாத எதனையும் அவரிடம் கூறவில்லை. பள்ளியில் உண்மையாக நடைமுறையில் இருந்து வருபவற்றையே கூறினேன். அத்தகைய சிறப்புக்கள் அப்பள்ளியில் உருவாகப் பெரும் பங்கு ஆற்றிவருகிறது அதன் பெற்ரேர் ஆசிரியர் சங்கம். நான் அச்சங்கத்தின் தலைவன் என்பதற்காக இப்படிக் கூறவில்லை. உண்மையிலேயே பெற்ரேர் ஆசிரியர் சங்கம் அமைந்த பிறகு பள்ளி கண்டிருக்கும் வளர்ச்சி எண்ணிப் பூரிக்கத்தக்கது என்பதை அங்கு சென்று பார்த்தவர்கள் ஒப்பவே செய்வர்.

மலேசியாவிலேயே மிகப்பெரிய தமிழ்ப்பள்ளி எங்கள் பள்ளிதான் என்பதில் நாங்கள் கொஞ்சம் அதிகம் பெருமைப்படுவதில் தப்பில்லை. 900 மாணவர்கள். அவர்களுக்குப் போதிக்க 24 ஆசிரியர்கள். இவர்கள் அனைவருக்கும் மேலாக எடுத்ததை முடிக்கும் ஆற்றல்கொண்டவரான திரு. ஆ. சோதிநாதன் தலைமையாசிரியர்.

காலையிலும் மாலையிலுமாக இரு முழுநேர வகுப்புக்கள் நடந்தும்கூட இடவசதி போதாத அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு பெருகுவதற்கு பள்ளியில் மாணவர்களுக்கு உள்ள வசதியும் சிறந்த போதனையுமே காரணங்கள்.

சத்துணவு வழங்குவது, இலவச பாட நூல்கள் தருவது, நூலக அமைப்பு, விளையாட்டுச் சாதனங்கள் வாங்குவது, சீருடை, காலணி அளிப்பது, ஆகிய திட்டங்களைப் பெற்ரேர்—ஆசிரியர் சங்கம் மாணவர்களுக்காக அலுக்காமல் சலிக்காமல் மேற்கொண்டு வருவதால், பள்ளி மாணவர்களில் எண்பது சதவிகிதத்தினர் பெரிதும் பயனடைகின்றனர். இந்த எண்பது சதவிகித மாணவர்களும் வசதி குறைந்த மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு திட்டங்களுக்கும் பணத்திற்கு எங்கே போவது என்று பெற்ரேர் ஆசிரியர் சங்கமும் ஆசிரியர்களும் தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவதில்லை.

இவ்வட்டாரத்தில் இயங்கும் ம. இ. கா. கிளைகள், தமிழ் இளைஞர் மணிமன்றம், திராவிடர் கழகம், ரோட்டரி கிளப், லையன்ஸ் கிளப் ஆகியவற்றிடம் நாங்கள் உதவி கேட்டோம். எங்களது சொந்த முயற்சியில் திரைப்படக்காட்சி, கேளிக்கை நிகழ்ச்சி முதலியவற்றை நடத்தியும் பணம் திரட்டுவோம். அத்துடன் பெற்ரேர்களிடம் தவணைக்கு ஒரு வெள்ளி வசூலும் செய்வோம்.

5000 புத்தகங்கள்

எனக்குத் தெரிந்தவரையில் 5,000 புத்தங்களைக் கொண்டிருக்கும் நூலகத்தைப் பெற்றுள்ள தமிழ்ப்பள்ளி மலேசியாவிலேயே எங்கள் விவேகானந்தா பள்ளியாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரு மாணவனுக்குப் பாடப் புத்தகங்களுடன் நூலகப் புத்தகங்களும் கிடைக்க வழி இருந்தால்தான் அவனது அறிவு விசாலமடையும். இதைக் கருதியே மிகுந்த சிரமப்பட்டு அந்த நூலகத்தை அமைத்திருக்கிறேம். பள்ளியின் முன்னள் மாணவர்களும் சுற்றுவட்டாரத்



நூல்களின் மீது மாணவர்களின் நோட்டம்

தில் இருக்கும் வீட்டில் படிக்க போதிய வசதி யற்ற மாணவர்களும் இரவு நேரத்தில் நூலகத் திற்கு வந்து புத்தகங்களைப் படிக்கவும் நாங்கள் வகை செய்துள்ளோம்.

சங்கத்தின் முயற்சியில் உயிர்க்காட்சி சாலை ஒன்றும் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பலவித பிராணிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த உயிர்க்காட்சிசாலையில் மாணவர்கள் பிராணி களின் வாழ்க்கை முறைகளையும், அவற்றை வளர்க்கும் முறைகளையும் தெரிந்துகொள்கின்ற னர். இது அவர்களின் பிற்கால துணை வருமானத் திற்கு வழிகாட்டுமல்லவா?

உயிர்க்காட்சிசாலையில் உள்ள கோழிகள் இடும் முட்டைகள், மனவளர்ச்சி குன்றிய மாண வர்களுக்கும் விளையாட்டுக்களில் பங்குபெறும் மாணவர்களுக்கும் கொடுக்கப்படுவது குறிப்பிடத் தக்கது.

மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்க இவ்வளவு செய்யும் சங்கம் அவர்களின் வயிற் றுப் பசியைப் போக்கவும் வழிசெய்து வருகிறது. பாசிப்பயறு கஞ்சி, பிஸ்கட் போன்ற சத்துணவு களை பேட்டாலிங்ஜெயா ரோட்டரி கிளப், லைன்ஸ் கிளப், திருமுருகன் திருவாக்கு ஆலயம், கம்போங் துங்கு ம. இ. கா., தமது பெயரை வெளியிட விரும்பாத அன்பர் ஒருவர், பள்ளி மேலாளர் குழு ஆகியோர் உதவியுடன் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மாணவர்களுக்கு வழங்கி வருகிறது சங்கத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக பல் மருத்து வர்களால் வாரந்தோறும் மாணவர்களுக்குப் பல் வைத்தியமும் செய்யப்படுகிறது.

பள்ளிக்கு அழுக்கான ஆடைகளை உடுத்துக் கொண்டு வரும் மாணவர்களுக்கு மாற்றுடை வழங்கி, அவர்களின் அழுக்கு உடைகளைப்பள்ளி யிலேயே துவைத்துக் கொடுக்கவும் சங்கம் ஏற் பாடு செய்திருக்கிறது. இது மாணவர்களிடம் தூய்மையாக இருக்கவேண்டும் என்னும் எண் ணத்தை உருவாக்கும்.


வசதியற்ற ஏழை மாணவர்களில் சிலரை ஆசிரியர்கள் ஆளுக்கு இருவர் வீதம் தத்து எடுத் துக்கொண்டு அந்த மாணவர்களுக்கான பள்ளிச் செலவு, உடை, காலணி, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றைக் கவனிக்கின்றனர். இதனால் ஆசிரி யர்களின் கருணை உள்ளம் பிள்ளைகளுக்கும் உரு வாகலாம் அல்லவா?

சங்கத்தின் எதிர்காலத் திட்டம் ஒரு பஸ் வாங்கவேண்டும் என்பதுடன் பாலர் பள்ளி ஒன்றை நிறுவவும் வேண்டும் என்பது. இது தவிர பள்ளியின் நிர்வாகக் குழுவினர் பள்ளியின் வளர்ச்சியில் அளப்பரிய பணிகளைச் செய்துள்ள னர். இப்பணிகளுக்கு முத்தாரம் சூட்டுவது போல் பள்ளியை மூன்று மாடிப் பள்ளியாக மாற்றியமைக்கும் திட்டத்திற்கு பள்ளியின் நிர் வாகக் குழுவின் தலைவர் என். கார்த்திகேசு விவேகானந்தா ஆசிரமத்தின் வழி 1 லட்சம் ரிங்கிட்டை வழங்குவதற்கு அரசிடம் பரிந்துரை வழங்கியுள்ளார். ஆகவே வரும் ஆண்டில் பள்ளி விவேகானந்தரைப்போல் கம்பீர மாக ஓங்கி வளர்ந்து நிற்கும்!

இவ்வளவு வாய்ப்பும் வசதியும் நிறைந்த தமிழ்ப் பள்ளியில் தமது குழந்தைகளைப் பயில வைக்க எனது நண்பர் விரும்பியதில் வியப் பிருக்க முடியுமா? பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினால் ஒரு பள்ளிக்கூடம் எவ்வளவு உயர்வு பெறுகிறது என்பதற்கு எங்கள் பள்ளி நல்ல சான்று. எங்கள் பள்ளியைப் போலவே எல்லாத் தமிழ்ப் பள்ளி களும் உயர அதனதன் பெற்றோர் ஆசிரியர் சங்கம் பாடுபட்டால் தமிழ்ப் பள்ளிகள் தலைநிமிர்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. ●


மின்சாரப் படி

முதன் முதலாக இலண்டன் ரயில்வே ஸ்டே சனில் கீழிருந்து மேலே போக மின்சார ஏணிப் படியை அறிமுகப்படுத்தினார்கள். பொதுமக் கள் அந்த ஏணிப் படியை உபயோகிக்கப் பயந் தனர். பொதுமக்களைத் திருப்தி படுத்துவதற் காக ரயில்வே இலாகா, ஒரு கால் இழந்த



நொண்டியைக் காலையிலிருந்து மாலை வரை ஏணியைப் பயன்படுத்தும்படி ஏற்பாடு செய் தது. ஒரு வயதான மாது அந்த ஏணிப் படியை உபயோகிக்கத் துணிந்து வரும் பொழுது அவள் பக்கத்திலிருந்த மற்றொரு மாது தன் பிள்ளையிடம் கூறினாள் "இந்த மின்சார ஏணியை உபயோகித்தால் ஒரு காலை இழக்க நேரிடும் என்பதற்காகத்தான ஒரு காலை இழந்த மனிதரை இந்த ஏணிப்படியை உபயோகிக்கச் சொல்லியிருக்கிறார்கள்".

—இரா. ஆறுமுகம், ஈப்போ




கற்பின் செல்வி
கண்ணகி
படம்: பாலு
மாசாத்துவான் என்பவரின் மகன்..
அடடே.... முருகக் கடவுள் மாதிரி ரொம்ப அழகா இருப்பாரே அவரா.. பேருகூட... கோவலன்!
ஆமா, ஆமா, அவரேதான் வாங்கடி கல்யாணத்துக்குப் போவோம்....
கோவலன்-கண்ணகி திருமணம் இனிதே நடந்தேறியது!
என்றைக்கும் பிரியாமல் சந்தோஷமாக வாழுங்க...
ஏழடுக்கு மாளிகையில்... கோவலனும் கண்ணகியும் சில ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தபோது..ஒருநாள்.
ஐந்து வயதிலேயே நடனம் கற்கத் துவங்கியவள் மாதவி- அவளுடைய அரங்கேற்றம் அரசன் முன்னிலையில் நடந்தது. கோவலனும் சென்றிருந்தான்
ஆகா, எவ்வளவு அழகாக இருக்கிறாள் மாதவி. அவளைத் தனியே சந்தித்துப் பாராட்ட வேண்டும்
தொடரும்...

சிருஷ்டி

சி. கோன்

மெய் சிலிர்க்க வைக்கும் பயங்கரக் கதைகளை எழுதுவதில் சிறந்த எழுத்தாளனாய்ப் புகழ் பெற்றவன் அவன். அவனுடைய உண்மைப் பெயர் பெரும்பாலோருக்குத் தெரியாது.

"சிருஷ்டி" என்ற புனை பெயரில்தான் அவன் கதைகள் வெளிவந்தன.

அவன் கடைசியாக எழுதிய கதையின் தலைப்பு அவனுடைய புனைபெயரைக் கொண்டதாகவே இருந்தது. ஆம்; கதையின் பெயர்— 'சிருஷ்டி'!

பயங்கரக கதைகள் எழுதுவதில் அவனுக்கு அவனே நிகர் என்று வாசகர்களால் புகழ் பெற்ற அதே எழுத்தாளன், இதோ பயங்கரப் பைத்தியக்காரனாகக் கருதப்பட்டு வைத்தியசாலையில் பைத்தியங்களை அடைத்து வைத்திருக்கும் சிறையில் பாதுகாப்பான தனிப்பட்ட அறையொன்றில் கண்ணீர் சிந்தியவண்ணம் இன்ஸ்பெக்டர் ராஜனிடம், தான் பைத்தியமல்ல என்பதை நிருபிக்கப் பிரலாபித்துக்கொண்டிருக்கிறான். உண்மைதான் என்ன? அவன் ஏன் பைத்தியமாகக் கருதப்பட்டான். உண்மையில் அவன் பைத்தியமாகத்தான் மாறிவிட்டானா?

ஆம் டாக்டர் முதற்கொண்டு வைத்திய சாலைச் சிப்பந்திகள், இன்னும் அவனது கதைகளை அவனிடமிருந்து விலைக்கு வாங்கித் தன் பத்திரிகையில் இவ்வளவு நாட்களாகப் பிரசுரித்து வந்த பத்திரிகாசிரியர் கருணாகரனுட்பட அவனுக்கு உண்மையில் சித்தப்பிரமை என்ற முடிவுக்கே வந்துவிட்டார்கள்.

—காரணம்?

ஆம், தான் கடைசியாக எழுதிய 'சிருஷ்டி'-'என்ற கதைதான் தனக்குப் "பயங்கர பைத்தியக்காரன்" என்ற பட்டத்தைக் கட்டி இதோ இந்த நிலைக்கு கொண்டு வரக் காரணம் என்று சாதிக்கிறான்:

இன்ஸ்பெக்டர் ராஜன் பொறுமையுடன் அவனையே ஊடுருவிப் பார்த்தவண்ணம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

"உண்மைதான் இன்ஸ்பெக்டர், அந்தப் பயங்கர மொக்கனை இறுதியில் என் கற்பனை ஓட்டத்தில் சிருஷ்டித்துவிட்டேன். ஒருவாரமாக இரவு பகலென்று பாராமல் பேனாவின் முனை கிறு கிறுவென்று ஓட உள்ளத்தின் உயிர்ப்பில் எழுந்த— எண்ணத்திலும் எண்ணிப் பார்க்க முடியாத —அத்தகைய மயிர்க் கூச்செறியக் கூடிய பயங்கர மனித மிருகத்தைச் சிருஷ்டி செய்துவிட்டேன்.

"அந்த மனித மிருகத்திற்கு ஒரு பெயரைச் சூட்டினேன்— "மொக்கன்"

"ஆம்; அதுதான் அவன் பெயர்!

"மொக்கன் என் பேனாவின் முனையில் அகப்பட்டுக் கொண்டு என் கற்பனைச் சுழலுக்கு அடி பணிந்து சிரித்தவண்ணம்—ஐயோ! சிரிப்பா அது?—உடலில் ஓடிக்கொண்டிருக்கும் சூடான குருதி அப்படியே ஜில்லிட்டுப் பனிக்கட்டியைப் போல் உறைந்து போய்—நாணேற்றிய வில்லின் நரம்பு பட்டென்று அறுந்து போவது போல் சிந்தனையின் உயிர்ப்பு நின்று போய் விழிகள் நிலைகுத்திப் போகக் கூடிய அத்தகைய கொக்கரிக்கும் சிரிப்புடன்—நான் ஏவிய படு பாதகச் செயல்களைக் கிள்ளுக் கீரையைப் போல் செய்து வந்தான்.

இந்த ஊர் முழுவதுமே பிரபலமான அந்தப் பத்திரிகையில் வெளிவந்த என் தொடர் நாவலைப் படித்து வந்தார்கள் —ஆம், சிருஷ்டியைத்தான் சொல்கிறேன் இன்ஸ்பெக்டர்.

"யார் இந்த எழுத்தாளன்? இப்படிப்பட்ட பயங்கர மொக்கனைச் சிருஷ்டி செய்து எழுதுவது? இத்தகைய கொடிய காரியங்களைச் செய்யத் தயங்காத ஒரு மனித மிருகத்தை எதற்காகச் சிருஷ்டித்தான் இந்த எழுத்தாளன்?" என்று ஒருவர்க்கொருவர் ஆத்திரத்துடன் பேசிக்கொண்டவர் பல பேர். இப்படிப்பட்ட கதைகளில் இரண்டுங் கெட்டானாக இருந்த நபர்களில் ஒருசிலர் இது வெறும் கற்பனைதானா, அல்லது 'மொக்கன்" என்ற பெயரில் உண்மையாகவே ஒரு மனித மிருகம் உலகில்—இல்லை; இந்த ஊரில் தான் உலவி வருகிறதா? என்று சர்ச்சை செய்து வந்தார்கள், என்ற உண்மையும் என் காது வரை எட்டியது. அதைக் கேட்டு எனக்குத்தற்பெருமையாக இருந்ததுதான் என்றாலும், அவர்களது இத்தகைய இரண்டுங் கெட்டான் நம்பிக்கையைக் குறித்துச் சிரிக்கவும் செய்தேன்:

"என் விலாசத்துக்குப் பல நேயர்களிடமிருந்து ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து கொண்டே இருந்தன. அவற்றில் பல கண்டனக் கடிதங்களும் இருந்தன. அதாவது, இத்தகைய பயங்கரக் கதைகள் நம்பத்தகாதவை என்றும், இது சிறுவர் சிறுமியர், இன்னும் கோழை உள்ளம் படைத்தவர்களின் அறிவை மிகவும் பாதிக்கும்; எனவே இத்தொடரை உடனடியாக நிறுத்திவிட வேண்டுமெனவும் எழுதியிருந்தனர்.

ஒருவர் எழுதியிருந்தார். "கதாசிரியர் அறிவது என் மகள் உங்களது 'சிருஷ்டி' என்னும் தொடர்கதையைப் படித்து, அக் கதையில் வரும் பயங்கர 'மொக்கன், உண்மையாகவே சந்து பொந்துகளில் உலவி வருவதாகக் கற்பனை பண்ணிவிட்டாள். இரண்டு தினங்களுக்கு முன் இரவு நேரத்தில், வாசலுக்கு வந்தவள் திடீரென்று 'மொக்கன் மொக்கன்' என்று அலறி, வேலியருகில் நின்ற பலாமரத்தைச் சுட்டிக் காட்டி மயங்கி விழுந்துவிட்டாள். அதிலிருந்து அவளுக்குச் சரியான காய்ச்சல் காய்கிறது. இதற்குக் காரணம் உங்களுடைய 'சிருஷ்டி' என்னும் கதைதான் என்று நான் சொல்லத் தேவையில்லை. எனவே, கண்டிப்பாகச் சொல்கிறேன். உங்கள் கதையை உடனடியாக நிறுத்தாவிட்டால், நான் உங்கள் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும்........."

"இப்படி எத்தனையோ பயமுறுத்தல் கடிதங்கள். நான் எதையுமே சட்டை செய்யவில்லை. இந்தச் சிலரின் மிரட்டலுக்கு அஞ்சி என் பதிப்பாசிரியரிடம் நான் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. அது மட்டுமா, எவ்வளவோ சிரமப்பட்டு, என் கற்பனைக்குள் உதித்த அபூர்வ சிருஷ்டியை, அரைகுறையாகக் கொன்றுவிட என் உள்ளம் இடங்கொடுக்கவில்லை.

"முடியவே முடியாது. என் சிருஷ்டி எனக்கே உரிமையானது; அதை நான் பதிப்பாசிரியரிடம் விற்கிறேன், அவர் எனக்குத் திருப்தியான முறையில் கூலி தருகிறார். அவருக்கும் பத்திரிகை நல்ல விற்பனையாகிறது. அத்துடன் என் பேரும் புகழும் இந்த ஊரில் மட்டுமல்லாமல் இந்த நாடு முழுவதுமே அடிபட்டு வருகிறது. சிறுபான்மையோரின் கண்டனத்துக்காக நான் என் சிருஷ்டியைக் குத்துயிரும் குலையுயிருமாகக் குதறுவதா?" என்ற முடிவுக்கு வந்தேன். நான் தொடர்ந்து எழுதினேன்

"என்னடா இவன் இப்படிச் சொல்கிறான் என்று எண்ணுகிறீர்களா இன்ஸ்பெக்டர், என் மொக்கன் அத்தனை பயங்கர மனித மிருகமா என்று நீங்கள் வியப்புறலாம். கேளுங்கள்.

"அவன் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளவரங்கில் எப்படிப் பவனி வந்தான் தெரியுமா? நான் அவனுக்கு எத்தகைய உருவைக் கொடுத்திருந்தேனோ. அதே உருவே அவர்கள் உள்ளங்களிலும் உருவாகியது. அவனுக்குக் கொலைக் கருவியாக பயன்பட எந்த ஆயுதத்தைத் தந்திருந்தேனோ, அதே ஆயுதத்தின் உருவைதான் அவர்களும் கற்பனை செய்தார்கள். ஏன் அப்படிப்பட்ட பிச்சுவாக்களும் அதன் பின்னர் கடைத் தெருவில் விற்பனை ஆக ஆரம்பித்தன. அந்தப் பிச்சுவாவுக்கு என்ன பெயர் தந்தார்கள் தெரியுமா இன்ஸ்பெக்டர், "மொக்கன் பிச்சுவா!"

"மொக்கன் என் பேனா முனையின் சுழிப்பில் வெள்ளைத் தாளின் மேல் பிறந்தபோதே சிறு குழந்தையாகப் பிறக்கவில்லை.

"அவனைச் சிருஷ்டித்தபோதே பயங்கர உருவில் சிருஷ்டித்தேன். என்னால் கூட நிர்ணயிக்கவியலாத வயதில் கொக்கரித்துச் சிரித்த வண்ணமே பிறந்தான் அவன்.

"முகத்திற்கு ஏற்ற தலையில்லை. முன்புற மண்டை குரங்கினுடையது போன்று சிறுத்து, பள்ளமாய்ப் பின் நோக்கி நீண்டு மண்டையோடு மண்டையாகக் குத்திட்டு நின்ற மிகக் கட்டையான அளவில், பிரஷைப் போலிருந்த தலைமுடியும் பின்புற மண்டை வீங்கியும் முடியே இல்லாமல் வழுவழுப்பாகவும் மின்னியது.

"நெற்றி சற்று முன்தள்ளி, அடர்த்து மேல்நோக்கி வளர்ந்திருந்த கரிய புருவங்களுக்குக் கீழ் உள்ளீடாய் அடங்கி மிகவும் சிறுத்த இரு விழிகள் ரத்தச் சிவப்பில் பயங்கரமாகக் காட்சியளித்தவண்ணமிருந்தன.

மூக்கு சப்பையாகவும் மேலே விரிந்து சிறுத்தும், மேல் உதடு கீழ் நோக்கி நீண்டும், கீழ்த் தாடை அளவுக்குமேல் முன் தள்ளியும் இருக்கும். கீழ் வரிசைப் பற்களில் இரண்டு மிகக் கூர்மையாக மேல் நோக்கிக் குத்திட்டு வளர்ந்திருந்தன. அதனால் அவன் வாயை மூடவே முடியாது; எப்பொழுதும் சற்று ஆவென்று திறந்த கடவாயின் வழியாக எச்சில் வழிந்தவண்ணமாகவே இருக்கும். மற்றப் பற்கள் என்னவோ அரத்தால் வேண்டுமென்றே தீட்டப்பட்டவை போல் கூரியனவாய் இருக்கும்.

உடலும் மனிதனுக்கு உள்ளது போலில்லாது மனிதக் குரங்கினுடையது போன்று கூன் விழுந்து போயிருந்தது என்றாலும் உடலுறுப்புகள் திரண்டு உருண்டு, தசை நார்கள் கரணை கரணையாக வலிவு பொருந்தியன

வாயிருந்தன. மார்பிலும் முதுகிலும் அடர்த்தியாக முடி வளர்ந்திருந்தது.

"அவன் கையில் சதா இருக்கும் அந்தக் கொலைக் கருவிதான் எல்லாரையும் அஞ்சச் செய்தது. அது ஒரு பிச்சுவா என்று சொன்னேன் அல்லவா இன்ஸ்பெக்டர். சாதாரண பிச்சுவா அல்ல அது.

"ரத்தக்கறை படிந்து பளபளப்பு மங்கிப் போயிருந்தாலும் மிகக் கூர்மையாக 14 அங்குலமிருந்தது பிடியுடன் சேர்ந்து. கைப் பிடியின் அடிப்பாகத்தில் ஒரு மண்டையோடு செதுக்கப்பட்டிருக்கும். அதன் பற்கள் பயங்கரமாக இளித்த வண்ணமிருக்கும்..."

இப்படிச் சொல்லிக்கொண்டே வந்த அந்த விசித்திர எழுத்தாளன் சட்டென்று தன் பேச்சை நிறுத்தி அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

"என்ன பார்க்கிருய் சிருஷ்டி?" என்று தாமும் சுற்றுமுற்றும் பார்த்த வண்ணமே கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜன்.

"எனக்கு நன்ருகக் கேட்டது இன்ஸ்பெக்டர். அவன் சிரிப்புத்தான். அந்த மொக்கனின் சிரிப்புத்தான் அவன் இந்த அறையின் மூலையில் எங்கோ அருபமாய் நின்று என்னையே கவனிக்கிருன்" என்ருன் சிருஷ்டி. இன்ஸ்பெக்டர், சற்று நேரம் அவனையே உற்றுப் பார்த்துப் பின் பெருமூச்சுவிட்டு, "சரிமேலே சொல்லு சிருஷ்டி" என்ருர்.

சிருஷ்டி தொடர்ந்தான்.

"முதலில் பேசவே தெரியாத மொக்கன், சிறுகச் சிறுகப் பேசவும் கற்றுக் கொண்டான். அது மட்டுமல்ல. வயது பருவம் என்ற நியதி ஒன்றையும் கிஞ்சிற்றேனும் பொருட்படுத்தாமல் பெண்களைத் தன் குகைக்குக் கடத்திச் சென்று, அவர்களிடம் மிகவும் அக்கிரமமாக நடந்து கொள்ளவும் ஆரம்பித்தான். அத்தோடு விட்டாஞ அவர்களை? தன் வெறி தீர்ந்ததும் கொஞ்சம்கூட இரக்கம் பாராமல், அதே பிச்சுவாவால் ஒரே குத்தாகக் குரல்வளையில் செலுத்திக் குளிர்ந்து கொள்வான்.

'மறு நாளோ, அதற்கு அடுத்த நாளோ, இல்லை—ஒரு வாரம் கழித்தோ அந்த அபலைகளின் பிணங்கள் எங்காவது ஒரு புதருக்குள் கண்டு பிடிக்கப்படும்.

"ஆக, மொக்கன் செய்த கொலைகள், சித்ரவதைகள், கற்பழிப்புகள் கட்டுப்பாடின்றி முன்னேறிக் கொண்டிருந்தன.

"போலீசார் என்னதான் முயன்றும் என் மொக்கன் அவர்கள் கண்களில் மண்ணைத் தூவித் தப்பிக் கொண்டே வந்தான். அவனது மறைவிடம் எங்கிருக்கிறது என்பதை அவர்களால் கண்டு பிடிக்க முடிந்தால்தானே.

"கடைசியாக நான் எழுதிய மொக்கனின் தொடர்ச்சிதான் மக்களை வெறி கொள்ளும்படிச் செய்து விட்டது. அவன் உண்மையாக அந்த ஊரில் நடமாடும் அருவமாக முடிவு செய்து விட்டார்கள். உடனடியாக நான் மொக்கன் தொடர்ச்சியைநிறுத்தி விடாவிடில் என் கைகள் இரண்டையுமே துண்டித்துவிடுவதாகப் பலபேர் கையொப்பமிட்ட பயங்கர மொட்டைக் கடிதம் ஒன்று எனக்கு வந்தது.

"உண்மையில் என்னையுமீறிய ஒரு கவலை அதன் பிறகுதான் ஏற்பட்டது.

"இதில் ஒரு ஆச்சரியமென்னவென்ருல், நான் ஒருமுறை எழுதுவதோடு சரி; பிரசுரமான பிறகு நான் மீண்டும் அந்தத் தொடரைப் படிப்பதே கிடையாது. அதுஎன்னவோ, எனக்கு அப்படிப்பட்ட ஒரு கொள்கை.

"முதல் தடவையாக, நான் எழுதிய கடைசித் தொடர்பு பிரசுரமானதும் படித்துப் பார்த்தேன். படித்ததும் எனக்கே, உடல் நடுக்கம் கொண்டுவிட்டது. ஆம் இன்ஸ்பெக்டர், மக்கள் வெறி கொண்டார்கள் என் கடைசித் தொடரைப் படித்து என்ருல், அவர்களைக் குறை சொல்லத் தேவையில்லை. உண்மையில் படிக்க அருவருக்கும் முறையில்தான் நான் எழுதியிருந்தேன். அப்படி என்னதான் எழுதினேன் என்று அறிய விரும்புவீர்கள் இன்ஸ்பெக்டர், கேளுங்கள்.

"ஒரு சிறுமி; செல்வந்தரின் மகள்; இன்னும் பருவமடையாத வயது; அச்சிறுமி தன் தோட்டத்துப் பூங்காவில் தமையனுடன் விளையாடிக் கொண்டிருக்கிருள். அவள் மீது ஒருவாரமாகக் கண் வைத்து நல்ல சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்த மொக்கன் புதரிலிருந்து வெளிப்பட்டு, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அச்சிறுமியைத் தோளில், ஆட்டுக் குட்டியைப் போல் தூக்கிக் கொண்டு ஓடுகிருன். அலறியவாறே அவன் பின்ஞல் ஓடிய அச்சிறுமியின் தமையன் உடலில் அந்தப் பிச்சுவா பாய்கிறது. சிறுவன் துடிதுடித்துப் பிணமாகிருன்.

"மறுநாள் அந்தச் சிறுமியின் உடல், கழுத்து நெரிக்கப் பட்டு அவளது தோட்டத்துப் பூங்காவிலேயே பிணமாகக் கிடக்கிறது. அவள் பிணமாகியதுகூட வாசகர்களுக்கு அவ்வளவு பொருட்டாகத் தோன்றவில்லை. ஆனல், அந்தச் சிறுமியின் மானம் எனது மொக்கனல் மனித மிருகத்தால் எப்படிச் சூறையாடப்பட்டது என்று நான் பச்சைப் பச்சையாக எழுதியிருந்ததுதான், அவர்களால் பொறுக்க முடியாமல் போய்விட்டது. பெரும்பாலான வாசகர்களின், வெறுப்புக்கு நான் பாத்திரமாகிவிட்டேன் என்பதை அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து புரிந்து கொண்டேன்.

"அந்தக் கடைசித் தொடரை மீண்டும் மீண்டும் படித்தேன். என்மேலேயே, எனக்கு ஆத்திரம் மூண்டது. இத்தனை மோசமான பயங்கரக் கதையையா நான் சிருஷ்டித்து எழுதி வந்திருந்தேன் இத்தனை நாட்களாய்? என்று என்னை நானே வெறுத்தேன்.



"இரவெல்லாம் எனக்கு உறக்கம் வர மறுத்தது. இந்தத் தொடரை முடித்து விடுவோமா வேண்டாமா என்று உள்ளத்தைக் குழப்பிக் கொண்டேகிடந்தேன். கடைசியில் ஒரு முடிவு என் உள்ளே பளிச்சிட்டது. ஆம், உறுதியான முடிவு. மொக்கனை அடுத்தத் தொடருடன் முடித்து விடுவது. அவனுக்குச் சமாதி! அவனுக்கு எந்தப் பிச்சுவாவைக் கொலைக் கருவியாகக் கொடுத்தேனே, அதே பிச்சுவா அவனுடைய உயிரைக் குடித்து எக்களிக்கிறது. இந்த முடிவுக்குத் துணிந்து விட்டேன்.

"விருட்டென படுக்கையை விட்டெழுந்தேன். என் உள்ளுக்குள் ஓர் ஆவேசம்! அப்போது இரவு மணி 2: ஜாமம். மேஜைக்கு முன் உட்கார்ந்து எழுத என் பேனவை எடுத்தேன். எழுதும் காகிதத்தில் "மொக்கனின் சமாதி" என்று எழுதினேன் அவ்வளவுதான் இன்ஸ்பெக்டர். நீங்கள் நம்பினலும் சரி, இல்லை- மற்றவர்கள் எண்ணுவதுபோல், நான் சொல்லப் போவது கட்டுக்கதை அல்லது அளவுக்கு மிஞ்சிய கற்பனையின் விளைவால் ஏற்பட்ட சித்தப் பிரமையின் உளறல் என்று நீங்கள் முடிவு பண்ணிக் கொண்டாலும் சரி, நான் சொல்லப் போவது ஒரு சொல் விடாமல் உண்மை.

"நான் அந்த தலைப்பை அதாவது "மொக்கனின் சமாதி" என்று எழுதியதுதான் தாமதம். என் அறைக்குள் அந்த இரண்டுங் கெட்டான் வேளையில் குருதி ஜில்லிடப் போகக்கூடிய பயங்கரச்சிரிப்பொலி எதிரொலித்தது. நான் வெலவெலத்துப் போய் எழுந்து என் அறைமுழுவதும் பார்த்தேன். நான் கண்டதென்ன? இன்ஸ்பெக்டர், நான் கண்டது யாரை?

"ஆம், இன்ஸ்பெக்டர், எந்த உருவத்தை நான் என் எழுத்து மூலம், கற்பனையின் உயிர்ப்பில்

சிருஷ்டி செய்து, மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டேனோ அதே மோக்கன்-பயங்கர மனித மிருகம்-அறை மூலையில் கையில் மண்டையோட்டு பிச்சுவாவுடன் நின்று கொண்டிருந்தான்"

இன்ஸ்பெக்டர் திகைப்புடன் முகத்தில் கேள்விக் குறிபடர அந்த எழுத்தாளனைப் பார்த்தார். அவன் சொல்வதை நம்புவதா அல்லது வேண்டாமா, என்ற நிலையிலிருந்தது அவரது முகத் தோற்றம்!

"என்னால் நம்பவே முடியவில்லை. இது கனவுதானா, அல்லது என் அறைக்குள் நான் காணும் மோக்கனின் உருவம் உண்மையானதுதானா என்று என் விரல்களைக் கிள்ளிவிட்டுக் கொண்டேன். உண்மைதான். நான் கனவு காணவில்லை. விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன் என்பதை உணர்ந்தேன்.

"எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்படியே திக்பிரமை கொண்டு அவனைப் பார்த்தவாறே நின்றேன். குப்பென்று உடல் முழுவதும் வியர்த்தது. மெல்ல மெல்ல மோக்கன் அடிமேல் அடியெடுத்து வைத்து, என்னை நோக்கி முன்னேற ஆரம்பித்தான். நான் சட்டென்று எழுந்து மேஜை விளிம்பில் சாய்ந்த வண்ணம் மெய் சிலிர்க்க அவனை பார்த்தேன்.

"என்னையே அவன் கூர்ந்து பார்த்த பார்வை என் முன் மண்டையைத் துளைத்து ஊடுருவிப் பாய்ந்து பின்புற மண்டையைப் பிய்த்துக் கொண்டு வெளிப்படுவதுபோன்ற உணர்ச்சி என்னை மயக்க நிலைக்கு கொண்டுபோவது போலிருந்தது. என் அருகில் நெருங்கி விட்டான். எனக்கும் அவனுக்கும் ஒரு அடிதான் இடைவெளி. அவன் வலதுகை அந்த மண்டையோட்டுப் பிச்சுவாவுடன் சரலென்று தலைக்குமேல் உயர்ந்தது. அடுத்த கணம் அந்த பிச்சுவா என் உடலில் ஆழமாகச் சதக்கென்று பாயும்; உடனே பிணமாவேன் என்று நான் எண்ணி முடிப்பதற்குள், வேகமாகக் கீழிறங்கிய பிச்சுவா மேஜையின் மேற்புற மரத்தில் டக்கென்று பாய்ந்து குத்திட்டு நின்றது. அதையடுத்து மீண்டும் அவனது கோரமான வாய் கொக்கரிக்கும் சிரிப்பொலியைச் சிதறிற்று.

"என் நாக்கு அண்ணத்துடன் ஒட்டிக் கொண்டது. "யார் மோக்கனா? என் கற்பனையின் சிருஷ்டியா?" என்று நாத்தடுமாற உளறியவாறே கேட்டேன்.

"மோக்கனின் பயங்கரச் சிரிப்பொலி மீண்டும் என் அறையை அதிரச் செய்தது. தொடர்ந்து அவன் மூர்க்கமாகப் பேசினான். வாயைத் திறவாது கோரப் பற்களை ஒன்றாகக் கிட்டித்தவாறே இருந்த உதடுகளின் வழியாகச் சொற்கள் நிதானமாக உதிர்ந்தன.

"நீ என்னைக் கற்பனை செய்த அன்றே நான் கருவாக உயிர்த்தேன். ஆனால் அப்போது நான் உன் வரையில்தான் உற்பத்தியாகியிருந்தேன். பின்னர், நீ என்னைப் பெற்றாய். உருவாக்கினாய்! பல்லாயிரக்கணக்கான மக்கள் என்னைப் பெற்றெடுத்த-உன் கதையைப் படிக்க ஆரம்பித்தனர். என்னை எத்தகைய உருவில் சிருஷ்டித்தாயோ, அதே உருவத்தையே தங்கள் உள்ளத்தின் கற்பனையில் வடித்துப் படித்துவந்தனர். என் உருவம் அவர்கள் உள்ளத்தில் ஆணித்தரமாய்ப் பதிந்துவிட்டது.

"இப்படிப் பல்லாயிரக்கணக்கான மக்களின் எண்ணத்திலும் ஒரே சமயத்தில் ஒரேவிதமான உருவில் சிருஷ்டிக்கப்பட்டு வியாபித்தபோது, அவர்களுடைய எண்ண அலைகளின் அபூர்வ சக்தி எனக்குக் கற்பனை உருவை மட்டிலுமல்லாமல் உண்மையாகவே உருவையும் உடலையும் கொடுத்தது. இப்போது நான் உன் கற்பனைக் கப்பால் போய்விட்டேன். உண்மையான தசையும், ரத்தமும், எலும்பும், நரம்பும் பெற்ற உயிருள்ள மோக்கனாக உலவ ஆரம்பித்து எத்தனையோ மாதங்களாகிவிட்டன. நீ என்னை அழிக்கமுடியாது ஆம், அழிக்கவே முடியாது.

"முடியாது அழிக்கவே முடியாது!"

"இன்ஸ்பெக்டர். நீங்கள் ஏன் என்னை அப்படிப்பார்க்கிறீர்கள்? நான் கூறுவது அத்தனையும் மெய்; என்னை நம்புங்கள்" என்று கூறினான் சிருஷ்டி.

"சரி சொல்லப்பா நீ சொல்வது சுவாரஸ்யமாக இருந்தாலும்,...... என்று அவர் கூறி முடிப்பதற்குள் சிருஷ்டி வேகமாக இடைவெட்டித் தன் கதையைத் தொடர்ந்தான்.

"திடீரென்று மோக்கன் என்மேல் குத்திய அந்த மண்டையோட்டுப் பிச்சுவாவைப் பிடுங்கினான். பின்னர், அதன் கூர்மையை என் மார்பின்மேல் லேசாக அழுத்தியவாறே........"

"நீ என்னை அழிக்கமுடியாது. அப்படி என்னை அழிக்கமுடியும் என்று ஒன்றிருந்தால் அது உன் பேனா முனைதான். என்று நான் இறந்தேன், என்று கதையை முடித்துவிடுகிறாயோ அன்றே எனக்குச் சவக்குழி தோண்டிவிட்டாய் என்பது திண்ணம். ஆகவே, மனிதனே கேள். என்னை ஒழிக்க எண்ணி நீ உன் பேனாவை இனித் தொடக் கூடாது. தொட்டாயோ, நான் உன்னை அழித்துவிடத் தயங்க மாட்டேன். உன்னுடைய சவக்குழியைத் தோண்டுவதற்கு உன் சிருஷ்டியாகிய நானே காரணகர்த்தாவாக இருக்கவே நேரிடும்."

"நான் ஆவென்று அலறினேன். என் உடல் முழுதும் வியர்த்து ஓடியது-

-அடுத்தகணம்!

"அறையே அதிரும்படியான அவனது பயங்கரக் கொக்கரிப்பு. நான் என் முகத்தை இரு கரங்களாலும் மூடிக்கொண்டேன்.

"நான் மீண்டும் முகத்திலிருந்து கையை எடுத்ததும் மோக்கனைக் காணவில்லை. அவன் மறைந்துவிட்டான். நான் கண்களை நன்றாகத் தேய்த்துவிட்டுப் பார்த்தேன். என் அறை முன்போல்தான் இருந்தது. ஒருவேளை இது வெறும் பிரமைதானோ என்று ஒரு கணம் எண்ணினேன். வெகுநேரம் அப்படியே மேஜையில் முகத்தைக் கவிழ்த்தவண்ணம் சிந்தனையிலாழ்ந்து கிடந்தேன். கடைசியில் இது வீண் பிரமைதான் என்ற முடிவுக்கு வந்து, ஆரம்பித்த கதையை முடித்துவிட வேண்டும் என்ற உறுதியுடன் "மோக்கனின் சமாதி" என்ற தலைப்பின் கீழ் கதையைத் தொடர்ந்து எழுதப் பேனாவை எடுத்து "மோக்கன்" என்று எழுத ஆரம்பித்து அந்தச் சொல்லை முடிக்கவில்லை.

"என் பின்புற மண்டையில் கனமான என்னவோ தாக்கியது போன்ற அதிர்ச்சி. அதையடுத்து என் வலது கையின்மேல் மற்றொரு தாக்குதல்.

"என் கண்முன் அந்த அறையே சுழன்று அந்தரத்தில் பறப்பதுபோன்ற உணர்ச்சியில் இழுத்துச் செல்லப்பட்டேன். பயங்கரச் சிரிப்பொலி அறையில் எதிரொலித்தது. அடுத்த வினாடி-

—என் கண் இருண்டது. நினைவு தப்பிப்போனேன்.

"நான் மீண்டும் நினைவுபெற்று கண் விழித்தபோது, இந்த வைத்தியசாலையின் தனி அறை ஒன்றில் படுத்திருப்பதை உணர்ந்தேன். என்பக்கத்தில் கண்ணீர் சிந்திய வண்ணம் நிர்மலா உட்கார்ந்திருந்தாள். ஆம்; இன்ஸ்பெக்டர் அவளைத்தான் நான் காதலித்துவந்தேன். எங்கள் திருமணம் சமீபத்தில் நடக்கவிருந்தது, நிச்சயதார்த்தம்கூட முடிந்துவிட்டிருந்தது.

"காதலித்துக் கல்யாணம் செய்துகொள்ளவிருந்த ஒரு பெண்ணை அவளது காதலனே கொலை செய்யத் துணிவானா இன்ஸ்பெக்டர். நீங்களே சொல்லுங்கள் டாக்டர். செய்வானா?"

இப்படிக் கேட்டுவிட்டு, "அய்யோ நிர்மலா என்கண்ணே, நிர்மலா" என்று கேவிக்கேவி அழுதான் சிருஷ்டி.

உண்மையில் நடந்ததுதான் என்ன?

சிருஷ்டிதான் நிர்மலாவைக் கழுத்தை நெரித்துக் கொன்றான் என்று டாக்டரும், போலிசாரும் முடிவு செய்ததுமன்றி அவன் பயங்கரப் பைத்தியம் பிடித்தவன் என்று தீர்மானித்து அவனை இந்த இரும்புக் கம்பிகளடைத்த கதவுக்குப் பின்னால் அடைத்து விட்டிருக்கிறார்கள். இதில் எது உண்மை? அவன் சொல்லும் கூற்றை நம்புவதா? அல்லது டாக்டர் அவனைப் பைத்தியம் என்று முடிவு செய்திருப்பதை நம்புவதா?

இனி வருவதை வாசகர்களே படித்து அவரவர்கள் கருத்துக்

கவிஞர் முரசு நெடுமாறன் நூல் வெளியீட்டு விழாவில் இது நடந்தது.

நிகழ்ச்சியின் நடுவில் நூல்களை விற்றனர். அன்புப்பாட்டு, அழகுப்பாட்டு, அறிவுப்பாட்டு, மூன்றையும் கொடுத்துக் காசு பெற்றுக் கொண்டனர்.

கவிஞர் ஒருவருக்கு வழங்கிய நூல்களில் 'அறிவுப் பாட்டு' இல்லாமல் 'அழகுப்பாட்டு' இரண்டு இருந்தது.

புத்தகம் கொடுத்தவரைக் கூப்பிட்டு, "எனக்கு அறிவு இல்லையா!" என்று அக்கவிஞர் கேட்டார்.

பக்கத்தில் அமர்ந்தவர்" உங்களுக்கு என்ன இல்லை"? என்றார்

இவர் கேட்பதன் தொனியுணர்ந்த கவிஞர் "என்னிடம் அறிவு இருப்பதால்தான் அதைக் கொடுக்காமல் தேவைப் படுபவர்களுக்குக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார். உங்களுக்கும் "அதைக்" கொடுத்துவிட்டுப் போயிருக்கிறாரே"! என்றதும் சுற்றிலும் இருந்த அனைவரும் சிரித்தனர்.



ஆறு—ஆறு

கார்டன்ஸ் டவுன் என்பது ஸ்காட்லாந்திலுள்ள ஒரு மீனவக் கிராமம். ஆண்டு தோறும் ஆறு மாதங்களுக்கு அங்கு சூரிய ஒளி படாது.

கேற்றவாறு முடிவுசெய்து கொள்வதே நல்லது.

ஃ ஃ ஃ

சிருஷ்டிக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. மண்டையில் கட்டுப் போடப்பட்டிருந்ததை உணர்ந்தான். வலது மணிக்கட்டுக்குமேல் பிளாஸ்டர் போட்டுக் கழுத்துடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருந்தது.

"நான் எங்கிருக்கிறேன் நிர்மலா" என்று கேட்டான், தன் காதலியைப் பார்த்து.

"ஹாஸ்பிட்டலிலே இருக்கிறீங்க." என்று அழுத வண்ணமே சொன்னாள் நிர்மலா.

சிருஷ்டி எழுந்திருக்க முயன்றான். அவன் மண்டையும் வலது கையும் ஒரே சமயத்தில் வலித்தன. நிர்மலா சட்டென எழுந்து அவனை மீண்டும் படுக்க வைத்தாள்.

"இது எப்படி நிர்மலா எனக்கு ஒன்றுமே புரியவில்லையே" என்று முனகினான் சிருஷ்டி.

நிர்மலா சொன்னாள்:

"நான் உங்களைத் தேடி உங்கள் அறைக்கு வந்தபோது நீங்க அலங்கோலமாய்க் கிடந்தீங்க. ஒரே ரத்த வெள்ளம். உங்க வலது கை முறிஞ்சிபோயி இருந்திச்சி. நான் உடனே உங்களை ஹாஸ்பிட்டலிலே கொண்டு வந்து சேர்த்தேன்" ...

நிர்மலா தன் வாக்கியத்தை முடிக்கவில்லை. சிருஷ்டி அது வைத்திய விடுதி என்பதையே மறந்து, "மொக்கா, சண்டாளத் துரோகி, கடைசிலே பழி வாங்கிட்டியா? அக்கிரமக்காரனே நான் உன்னைச் சும்மா விடமாட்டேன். உன்னை அழித்து விடுவேன்" என்று உரத்துக் கத்த ஆரம்பித்தான். டாக்டரும் நர்சுகளும் அறைக்குள் ஓடிவந்தனர். அவனுக்குச் சித்தப்பிரமை உண்டாகிவிட்டது என்று எல்லாரும் முடிவு கட்டிவிட்டனர். டாக்டர் கூட அப்படித்தான் நம்பினார்.

தன் காதலனின் நிலையைக் கண்டு நிர்மலா வாய்விட்டுக் கதறினாள். அவன் ஒரேயடியாகச் சாதித்தான் அவனுக்கு அந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம் மொக்கன்தான் என்று.

அவனைச் சமாதானப்படுத்தி வைப்பதற்குள் டாக்டருக்குப் போதும் போதும் என்றாகி விட்டது.

டாக்டரும் நர்சுகளும் சென்ற பின்னர், சிருஷ்டி நிர்மலாவைப் பார்த்து, "நிர்மலா உடனே கடைக்கு ஓடிக் கொஞ்சம் புல்ஸ்கேப் பேப்பர் வாங்கிட்டு வா" என்றான்.

அவள் புரியாது விழித்தாள்.

"என்ன விழிக்கிறே நிர்மலா. நான் சொல்றபடி செய்யப் போறியா இல்லையா" என்று வெறி கொண்டவன்போல் உத்தரவிட்டான்.

நிர்மலா பேசாது எழுந்து வெளியில் சென்று சிறிது நேரத்தில் "புல்ஸ்கேப்" காகிதங்களுடன் அறைக்குள் வந்து அவனிடம் நீட்டினாள்.

அவன் அவளை உற்றுப் பார்த்து, "ஏன் என்னிடம் தர்றே? நான் சொல்லச் சொல்ல எழுது. உன்னிடத்திலே பவுண்டன் பேனா இருக்கில்ல. சீக்கிரம் எழுது."

நிர்மலாவுக்கு அவனது விசித்திரமான கூற்றைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. சரி, அவன் மனத்தை ஏன் புண்படுத்த வேண்டும் இந்த நிலையில் என்று யோசித்து "சரி சொல்லுங்கள் எழுதுகிறேன்", என்று கூறி எழுதுவதற்குத் தயாரானாள்.

"எழுது. மொக்கனின் மரணம்" என்று அவன் பற்களைக் கடித்துக்கொண்டு சொன்னான். அவள் அவனைப் பரிதாபமாக ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து பின்னர் குனிந்து, "மொக்கனின் மரணம்" என்ற தலைப்பை எழுதி முடித்ததுதான் தாமதம், மறு கணம் —

ஓர் அலறல்—

ஆம், நிர்மலாவின் குரல்தான்.

அந்த அறையையும் தாண்டி அதனுடன் சேர்ந்திருந்த வார்டு முழுவதுமே எதிரொலித்தது. அதையடுத்து, "கொலை" என்று சிருஷ்டியின் உரத்த குரல் அலறியது.

விநாடி நேரத்தில் அந்த அறைக்குள் நர்சுகளும், டாக்டரும், வைத்தியசாலைச் சிப்பந்திகளும் நிறைந்துவிட்டனர்.

அங்கு அவர்கள் கண்ட காட்சி!

வாயிலும் மூக்கிலுமிருந்து குருதி வழிந்தோட நிர்மலா பிணமாகிக் கிடந்தாள். "சிருஷ்டி" அவளை வெறித்துப் பார்த்தவண்ணமே நிலைகுத்திய கண்களுடன் நின்றுகொண்டிருந்தான். டாக்டர் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினார். அவன் கன்னங்களில் "பளீர், பளீர்", என்று மாறிமாறி அறைந்தார்.

அவன் பிரமை தீர்ந்தது. உடனே "நிர்மலா" என்று அலறியவாறே பிணமாகிக் கிடந்த அவள்மேல் விழுந்து கதறினான். கட்டில் விளிம்பில் மண்டையை மோதிக்கொண்டான்.

"மொக்கன், அந்தச் சண்டாளன் உன்னையும் பழிவாங்கி விட்டானா? மொக்கா நான் பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன். மனித மிருகமே, உன் சிருஷ்டிக் கர்த்தாவாகிய நான் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்" என்று பலவாறு உளற ஆரம்பித்தான்.

டாக்டர் அவனைப் பிடித்து அப்பால் தள்ளினார். சிப்பந்திகள் அவனைப் பிடித்துக்கொண்டனர். டாக்டர் நிர்மலாவைச் சோதித்தார். அவள் கழுத்து நெரிக்கப்பட்டிருந்தது என்பதற்குக் கழுத்தில் அடையாளங்கள் காணப்பட்டன.

பின்னர், என்ன?

சிருஷ்டி ஒரு பயங்கரப் பைத்தியக்காரன் என்று முடிவு செய்யப்பட்டது. இரும்புக் கிராதிகள் போட்ட தனியறைக்குள் அவன் சிறை வைக்கப்பட்டான் அதுமட்டுமல்ல, அவன் தனது மற்றொரு கரத்தையும் அசைக்க முடியாதவாறு பின்புறம் சேர்த்து இரும்புடன் கட்டப்பட்டது.

கடைசிவரையிலும் தான் நிர்மலாவைக் கொல்லவில்லை, மொக்கன்தான் கொன்றான் என்று சாதித்தான். எப்படி நம்ப முடியும் அவன் கூற்றை?

டாக்டரின் சோதனையின்படி நிர்மலாவின் கழுத்து இடது கை விரல்களால் நெரிக்கப்பட்டது, என்பது தெளிவாயிற்று. சிருஷ்டியின் மொக்கனும், தன் இடது கையால்தான் கொலைகளைச் செய்து வந்தான். நிர்மலா பிணமாகக் கிடந்தபோது சிருஷ்டியின் வலக்கரம் கட்டுப்போடப்பட்டு இடக்கரம் சும்மா இருந்தது. எனவே, டாக்டரின் முடிவுப்படி அவன் தன் இடக் கரத்தால் நிர்மலாவின் கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கவேண்டும் என்று யூகித்தார். எல்லோருமே அப்படித்தான் நினைத்தார்கள். இருப்பினும் அவன் ஏன் தன் உயிருக்குயிரான காதலியை அதுவும் சமீபத்தில் மணம் செய்துகொள்ளப் போகும் ஒருத்தியைக் கொல்ல வேண்டும் என்பதுதான் ஒருவருக்கும் புரியவில்லை.

ஃ ஃ ஃ

இன்ஸ்பெக்டர் தமது அறையில் உட்கார்ந்து சிருஷ்டியின் மொக்கன் கதையைப் பற்றியே ஆராய்ச்சி செய்தவண்ணமிருந்தார்.

அவன் உண்மையில் பைத்தியமாக இருக்க முடியாது என்று என்னவோ, அவருள் சொல்லிக் கொண்டிருந்தது, அப்படியானால் டாக்டரின் முடிவு தவறானதா? "மொக்கன்" உண்மையில் சிருஷ்டிக்கப்பட்டு விட்டானா?

அப்போது இரவு மணி ஒன்றரை. எங்கோ ஒரு நாய் எழுப்பிய ஊளையின் அவல ஓசை அந்த நள்ளிரவில் உடலைப் புல்லரிக்கச் செய்தது.

அவர் அறையிலிருந்த டெலிபோன் ஒலித்தது. எழுந்து சென்று ரிசிவரை எடுத்தார். வைத்திய விடுதியிலிருந்து டாக்டர் பேசினார். இன்ஸ்பெக்டரின் முகத்தில் ஓர் அதிர்ச்சிக் குறி.

"சரி வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, அவசர அவசரமாக உடைகளை அணிந்து கொண்டு, காரில் ஏறிப் புறப்பட்டார்.

அவர் காரை நிறுத்திவிட்டு, "சிருஷ்டியை" அடைத்திருந்த அந்த விடுதிக்குச் சென்றார். அங்கு வாசலில் அவர் வரவுக்காக டாக்டரும், இரண்டொரு சிப்பந்திகளும், விடுதி வார்டனும் நின்றுகொண்டிருந்தனர்.

இன்ஸ்பெக்டர் டாக்டரைப் பின்பற்றி சிருஷ்டியை அடைத்திருந்த அறைக்குள் சென்றார். அவ்வளவுதான். அவரை அறியாமல், வாய் பக்கென்று திறந்தது.

—காரணம்?

சிருஷ்டி—பயங்கரக் கதைகள் எழுதும் அந்த எழுத்தாளன் பிணமாக அலங்கோல நிலையில் பக்கவாட்டில் விழுந்து கிடந்தான். அவனது கழுத்துக்கடியில் குருதி குளமாகத் தேங்கிக் கிடந்தது. கண்கள் பிதுங்கி நிலை குத்திக் கிடந்தன.

இன்ஸ்பெக்டர் முகத்தில் கேள்விக் குறி படர டாக்டரை ஏறிட்டுப் பார்த்தார்.

"அவனது பயங்கர மனப் பிராந்தியே அவனைக் கொன்றுவிட்டது. மூளையிலிருந்து இருதயத்துடன் நேரடித் தொடர்புள்ள முக்கிய இரத்தக் குழாய் வெடித்திருக்கலாம்" என்று கூறி முத்தாய்ப்பு வைத்தார் டாக்டர், இன்ஸ்பெக்டரின் பெருமூச்சுடன் கலந்து.

"சிருஷ்டி, மொக்கன்" என்ற சொற்கள் மெல்ல வெளிவந்து மறைந்தன.



புகழ் பெற்ற எழுத்தாளரான சார்லஸ் டிக்கன்ஸ் ஒரு செவிட்டுப் பூனையை வளர்த்து வந்தார். இலக்கியப் பணியில் மூழ்கிவிட்டால் நேரம் போவதே அவருக்குத் தெரியாது; சரியான வேளையில் உறங்க வேண்டுமே, என்ன செய்வது?

அதற்குத்தான் அந்தப் பூனை! குறிப்பிட்ட நேரத்தில் ஒவ்வோர் இரவும் அவரின் மேசையிலுள்ள மெழுகு வர்த்தியை அது ஊதி அணைத்துவிடும்; நேரம் ஆகிவிட்டதை உணர்ந்து டிக்கன்ஸ் தூங்கச் செல்வார்.

மூன்று லட்சம் பேர் திரண்ட விழா!

"தமிழால் பாரதி சிறப்புப் பெற்றதும் தமிழ் பாரதியால் சிறப்புப் பெற்றதும் என்னென்று சொல்வேன்! என்னென்று சொல்வேன்...!" எனப் பாரதி தமிழால் புகழ் அடைந்ததையும், தமிழ் பாரதியால் உயர்வு பெற்றதையும் வியந்து பாரதிதாசன் பாடினார். அதைப் போன்று தொடர்புத்துறை அமைச்சர் டான்ஸ்ரீ வெ. மாணிக்கவாசகம் அவர்களால்- அவர்களின் இல்லத்தால்-தான் பெற்ற சிறப்பை எண்ணிப் பெருமைகொள்ளும் பேற்றைப் "புதிய சமுதாயம்" 27.3.77 ஞாயிற்றுக்கிழமை பெற்றது.

அன்றுதான் "புதிய சமுதாயத்"தின் வெளியீட்டு விழா அமைச்சரின் இல்லத்தில் எளிமையான முறையில் ஆனால் என்றும் பசுமையாக நினைவில் தங்கும் வகையில் நிகழ்ந்தது.

வெளியீட்டு விழாவுக்குச் சுமார் மூன்று லட்சம் பேர் வந்திருந்தனர். என்ன வியக்கிறீர்களா? உண்மையாகத்தான் சொல்கிறேன். ஏறத்தாழ ஒன்றேகால் லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ம.இ.கா. வின் தேசியத் தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் எனது கண்களுக்குத் தனி ஒருவராகப் படவில்லை. ஒன்றேகால் லட்சம் உறுப்பினர்களாகவே தோன்றினார்.

இதே போல வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த மேலவைத் துணைத் தலைவரும், இந்தியக் கூட்டு வர்த்தக சங்கத் தலைவருமான டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லா, துணை அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. சி. வடிவேல், தமிழ் மலர் நிர்வாகி திரு. க. சண்முகசுந்தரம், திராவிடர் கழகத் தலைவர் திருச்சுடர் கே. ஆர். ராமசாமி, மலேசியத் தமிழ் இளைஞர் மணி மன்றப் பேரவையின் தேசியப் பொதுச் செயலாளர் திரு. கி நட்மாறன், யூனைடெட் ஆசியன் வங்கி (யு.ஏ.பி.) யின் தலைமைநிர்வாக இயக்குநர் திரு. கே. வி. மூர்த்தி, அரசாங்க வழக்குரைஞர் (டி.பி.பி) திரு. டி.எஸ். சம்பந்தமூர்த்தி, பெரு வணிகரும், விழாவில் கலந்துகொண்டவர்களிலேயே வயதில் மூத்தவருமான பெரியவர் திரு. என். தாமோதரம் பிள்ளை, மலேசிய வானொலியைச் சேர்ந்தவரும் பட்டதாரியுமான திரு. வி. பூபாலன், ம. இ. கா. தேசிய மகளிர் பகுதியின் பொதுச் செயலாளர் திருமதி தேவகி கிருஷ்ணன், சிலாங்கூர் இந்தியப் பத்திரிகை விற்பனையாளர் சங்கத் துணைத்தலைவர் திரு. எம். இராமசாமி, ஃபைன் ஆர்ட் அச்சகத்தைச் சேர்ந்த திரு. அ. நடராஜா, புதிய சமுதாயத்தின் முதல் சந்தாதாரர் திரு. செங்கோட்டய்யா நல்லய்யா, அரசியல் செயலாளர் திரு க. பொன்னம்பலம், பத்திரிகை விற்பனையாளர் சங்க ஆலோசகர் திரு. சின்னதுரை முதலானோரும் ஒருவர் ஒருவராக எனக்குத் தெரியவில்லை மாறாக அவரவர் சார்ந்திருக்கும் இயக்கத்தின்— அல்லது துறையின் மொத்த எண்ணிக்கையினராகவே தோன்றினர்.

★ ★ ★ ★

மணிமன்றப் பேரவையின் சிறப்புத் தலைவரும், மலேசியத் தமிழ்க் கலைஞர் இயக்கத்தின் தலைவருமான திரு. சா. ஆ. அன்பானந்தனின் வரவேற்புரையோடு விழா துவங்கியது. புதிய சமுதாயத்தின் சார்பில் அதன் இயக்குநர்களில் ஒருவரான திரு. பி.ஆர்.வி.ஆர். சேது, தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்திற்கு மாலை அணிவித்த பிறகு அமைச்சர் மிகச் சுருக்கமாகப் பேசினார்.

"சமுதாயத்தின் எல்லாத் தரப்பினருக்கும் தேவைப்படும் இதழ் இல்லாத குறையைப் "புதிய சமுதாயம்" நிறைவு செய்யும் என நம்புகிறேன்" என்று நம்பிக்கை தெரிவித்ததோடு அமைச்சர் புதிய சமுதாயத்திற்குத் தமது வரவேற்பையும் மனமுவந்த வாழ்த்துக்களையும் கூறி முதல் இதழை டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லா அவர்களிடம் வழங்கினார்.

முதல் குழந்தையைத்தாயிடம் இருந்து வாங்கும் ஒரு தந்தையின ஆவலும், மகிழ்ச்சியும் முகத்திலும் அகத்திலும் ததும்ப, புதிய சமுதாயத்தின் முதல் இதழை டான்ஸ்ரீ உபைதுல்லா அமைச்சரிடமிருந்து பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து ஃபைன் ஆர்ட் அச்சக நிர்வாகியும், புதிய சமுதாயத்தின் இயக்குநர்களில் ஒருவருமான திரு. வி கணபதி இதழ்களை ஒவ்வொன்றாக அமைச்சரிடம் எடுத்துவழங்க, அமைச்சர் அவற்றை மேலே குறிப்பிட்டிருக்கும் அன்பர்களிடம் வழங்கினார்

பச்சிளம் குழந்தையை முதன் முதலில் தூக்கும் "விஷயம் தெரிந்த" பெரியவர்கள் வெறுங் கையோடு தூக்க மாட்டார்கள் அல்லவா? அதைப் போலவே புதிதாகப் பிறந்த புதிய சமுதாயத்தைப் பெற்ற பிரமுகர்களும் வெறுங்கையோடு பெறவில்லை.

அவர்கள் அனைவரும்வழங்கிய தாராளமான அன்பளிப்பு மொத்தம் $940 சேர்ந்தது. வாங்கியவர்களின் எண்ணிக்கை குறைவு; அன்பளிப்போ பெரிது. இதன் மூலம் முதல் இதழை வாங்கியவர்கள் சம்பிரதாயத்திற்காக மட்டுமன்றிப் புதிய சமுதாயத்தின் வளர்ச்சியின் பால் தங்களுக்கு உள்ள உண்மையான அன்புக்காகவும் அக்கறைக்காகவும் வாங்கினர்கள் என்பதை என்னால் மறக்க முடியவில்லை.

விழாவுக்கு வந்தோர் அனைவருக்கும் குறிப்பாக டான்ஸ்ரீ மாணிக்கவாசகம், டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லாவுக்கும் நன்றி தெரிவித்த புதிய சமுதாயத்தின் ஆசிரியரும், நிர்வாக இயக்குநருமான முத்தமிழ் வித்தகர் முருகுசுப்பிரமணியன், வெளியீட்டு விழாவில் கிடைத்த நன்கொடையில் $501ஐ தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதிக்கு வழங்குவதாக அறிவித்துத் தமது நன்றியுரை -யை ஒரு கொள்கையுள்ள நன்றியுரையாக்கினார்.

-வணிகன்

மலர்ந்தது புதிய சமுதாயம்!









முத்துவைக் கேளுங்கள்

என் குமாரன் நாயர்,
புக்கிட் சிலாரோங் தோட்டம்

கே: "புதிய சமுதாயம்" எத்தனை பிரதிகள் வெளியாகிறது?

ப: உண்மையான எண்ணிக்கையை வெளியிட்டால் வயிற்றெரிச்சல் பேர்வழிகளுக்கு வயிற்றுவலி வந்துவிடும். அதனால்தான் பல ஆயிரம் என்று மட்டும் சொல்கிறேன். அப்படி அச்சிட்டும் எல்லா ஊர்களுக்கும் திருப்தியான அளவு அனுப்ப இயலவில்லை

இரா. இராமராவ், தலைநகர்

கே: இப்பொழுது நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

ப ஏழு மாத அஞ்ஞாதவாசத்திற்குப் பிறகு இப்போதுதான் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறேன். நாகப்பாம்பின் கிரகணப் பீடிப்பினால், இருளிலும், சொல்லமுடியாத வேதனையிலும் உழன்றேன்.

கே: யார், யார் தயவில் வாழக்கூடாது?

ப: பிறர் தயவில் வாழ்கிற பிழைப்பு கேவலமானது; ஆபத்தானது யாருமே எவர் தயவிலும் வாழக்கூடாது. தன் சொந்த உழைப்பு, திறமையை நம்பி வாழ்வதே சரி.

எம். குணசேகரன், பாரிட் புந்தார்

கே: நகைச்சுவைத் துணுக்குகளை எழுதி அனுப்பினால் வெளியிடுவீர்களா?

ப: நகைச்சுவைத்துணுக்குகளோடு வெளியிடத்தக்க மற்ற சுவையான துணுக்குகளையும் எழுதி அனுப்புங்கள்.

கே: "புதிய சமுதாயம்" மக்களிடையே பீடுநடை போட என் வாழ்த்துக்கள்!

ப: உங்களைப் போல "புதிய சமுதாயத்திற்கு வாழ்த்து த்தெரிவித்திருக்கும் எல்லா நல்ல உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

கே. ஆர். பத்துமலை, செலயாங்பாரு

கே: பத்திரிகை தருமம் என்பது என்ன?

ப: உச்ச நிலையில் உள்ளவர்களின் குரலை மட்டுமன்றி அடிமட்டத்தில் குச்சுகளில்— வாயில்லாப் பூச்சிகளாக வாழும் அப்பாவிகளின் குரலையும் ஒலிக்கச் செய்வது பத்திரிகை தருமத்தின் முக்கிய கூறாகும். சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான கருத்தைப்பத்திரிகை பிரதிபலிக்க வேண்டும்.

குமாரி எஸ் மகேஸ்வரி,
நைகல் கார்டினர் தோட்டம், பத்தாங் பெர்சுந்தை

கே: "புதிய சமுதா"யத்தின் குறிக்கோள் என்ன?

ப: "வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு"

கரு. இராமன், பினாங்கு

கே: 2001 ஆம் ஆண்டில் நாடு எப்படி இருக்கும்? நம்மவர்கள் எப்படி இருப்பார்கள்?

ப: மலேசியா குறிப்பிடத்தக்க ஒருசில குபேர நாடுகளில் ஒன்றெனத் திகழும். குபேர நாட்டில் வாழும் நாமும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் குபேரர்களாக ஆகியே தீரவேண்டும். வேறு வழியில்லை.

ஆர். பழனியாண்டி. காந்தி கிராமம். 8-வதுமைல், பெட்டாலிங், சிலாங்கூர்

கே: ஆங்கிலத்தில் "தேங்கியூ" என்ற வார்த்தைக்கு மறு வார்த்தையாக "டோன் மென்ஷன்" என்னும் வார்த்தையும், மலாய் மொழியில் "தெரிமா காசே" என்ற வார்த்தைக்குச் "சமா, சமா" என்ற வார்த்தையும் உள்ளன. அதுபோல், நம் தமிழ் மொழியில் "நன்றி" என்னும் சொல்லுக்கு மறு வார்த்தை ஏதேனும் உண்டா?

ப: நன்றி என்று சொல்வதே தமிழ் மரபுக்குப் புதிதாகும். உடனுக்குடன் கணக்குத் தீர்த்து விடுகிற இந்த வாய் உபசாரத்தைக் காட்டிலும் தான் உண்ட வெறும் தண்ணிருக்குப் பதிலாக இளநீரைக் குலை குலையாக வழங்கும் தென்னையைப் போல நன்றியை என்றும் நினைப்பதே சிறப்பாகும்.

அதனால்தான் "நன்றி"க்கு மறுவார்த்தை ஏதும் நம்மிடம் இல்லை. "உங்களுக்கு நன்றி" என்று வேண்டுமானால் சொல்லலாம்.

அஞ்சு ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம். சிலாங்கூர்

கே: "போதும்" என்ற எண்ணத்தோடு வாழும் ஒருவனின் வாழ்க்கை எப்படி இருக்கும்?

ப: "போதுமான" அளவுகூட வளமாக அமையாது.

கே: தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்குக் கிடைக்கும் வரவேற்பும் ஆதரவும் ஏன் உள்நாட்டுக் கலைஞர்களுக்குக் கிடைப்பதில்லை?

ப: தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகு.

கே. கோபால், பத்துபகாட்

கே: உண்மையான தலைவர்களை அடையாளம் கண்டு கொள்வது எப்படி?

ப: பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் உள்ளத்தில் நிலைத்து வாழ்கிறவர்களே உண்மையான தலைவர்கள் "உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளன்" என்பது குறள்.

ம. கிருஷ்ணன், போர்ட்டிக்சன்

கே: போட்டி இல்லாத வியாபாரம் உண்டா?

ப: இங்குக் கீரைக்கடைக்குக்கூட எதிர்க்கடை உண்டு. போட்டியில்லாத வியாபாரம் எதேச்சாதிகார நாடுகளில்தான் உண்டு.



தொலைக்காட்சி

14-4-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப் படம்: **மேஜிக் கார்ப்பெட்** [மந்திரக் கம்பளம்]

17-4-77 ஞாயிறு மாலை 4.00க்கு தமிழ்ப் படம்: ஜெமினி கணேசன், முத்துராமன், புதுமுகம் ஜெயா நடித்த **சுடரும் சூறாவளியும்**

21-4-77 வியாழன் மாலை 5.30க்கு தமிழ்ப் படம்: **வைராக்கியம்**

வானொலி

நாடகம்

(சனிக்கிழமை தோறும் பிற்பகல் மணி 2.00க்கு ஒலிபரப்பாகும்)

16-4-77 சேர்டாங் எல். முத்து எழுதிய **ஒருவரை ஒருவர் உணர்ந்து கொண்டால்**

23-4-77 மலாக்கா பாலகிருஷ்ணன் எழுதிய **மலர்வதெல்லாம் மணப்பதில்லை**

தொடர் நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகும்]

தலைநகர் எஸ். வைரக்கண்ணு எழுதும் புதிய தொடர். **உன்னை நான் காண்பேனா?**

18-4-77 **மயக்கமா? கலக்கமா?** [மூன்றும் பகுதி]

25-4-77 **ஆண்டவன் போட்ட புள்ளி** [நான்காம் பகுதி]
தயாரிப்பு: எல். ராமன்

மனச்சுழல்

[ஞாயிறுதோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகும்]

17-4-77 **அன்னை என்பவள் நீதானா** மாறுபட்ட கதையமைப்பைக் கொண்ட இதனை எஸ். வைரக்கண்ணு எழுதியிருக்கிறார். சித்ராவின் வளர்ப்புத் தாயாகச் சிவகாமி மாதவனும், பெற்ற தாயாகச் சுசிலா ஜெகநாதனும் சிறப்பாக நடித்துள்ளனர்.

24-4-77 **மனமெனும் அரங்கில் ஒரு நரகச்சுழல்** ஊழ் வினை பற்றிய கதை. இளமையில் செய்த கொடுமைகளுக்காக முதுமையில் மனத்தோடு போராடும் 98 வயதுக் கிழவியாக எஸ். புஷ்பாதேவி சிறப்பாக நடித்திருக்கும் இதனை ஜி. கண்மணி கிருஷ்ணன் எழுதியிருக்கிறார். தயாரிப்பு ஏ. பீட்டர்.

ஒலிச்சித்திரம்

[சனிக்கிழமை தோறும் மாலை மணி 6.31க்கு ஒலிபரப்பாகும்]

16-4-77, 23-4-77 ஆகிய நாட்களில் இருபகுதிகளாக ஜெய்கணேஷ், கே. ஆர். விஜயா நடித்த **மகராசி வாழ்க** ஒலியேறும்.

13-4-77ல் ஒலியேறும் தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

காலை மணி 9.00க்கு **புதிய ஒளி.** சிவரஞ்சனி இசைக் குழுவின் துணையோடு பத்துக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்கும் மேடை நிகழ்ச்சியான இதனை எழுதித் தயாரித்திருப்பவர் ரெ. சண்முகம்.

9.30க்கு **சித்திரை மலர்** வி. பூபாலன் தயாரிக்கிறார்.

10.00க்கு **மதுரை சோமுவின் நினைவுகள்** பைரோஜி நாராயணன் தயாரிக்கிறார்.

10.30க்கு **நாடக மாலை.** மனோகர் நாடகக்குழு நடிகர்களுடன் நடத்திய சந்திப்புக்களோடு அவர்களின் நடிப்பையும் ரசிக்கலாம்.

11.30க்கு **தாள மாலை**

நண்பகல் மணி 12.00க்கு **பாடல்கள் பலவிதம்**

பிற்பகல் மணி 12.30க்கு **நல்லுரைக்கோவை**

2.00 மணிக்கு ஒரு மணிநேர ஒலிச் சித்திரம் சிவகுமார், சுஜாதா, ஸ்ரீகாந்த் நடித்த **அன்னக்கிளி**

3.00 மணிக்கு **வெள்ளி நிலவு**
காரைக்கிழார் எழுதிய இந்த உரை, இசை நிகழ்ச்சியை சிங்கம் ஜான்சன் துணையோடு தயாரித்திருப்பவர் என். மாரியப்பன்.

3.30க்கு சிறப்பு நாடகம்
வசந்த கால நதிகளிலே
ஜி. கண்மணி கிருஷ்ணன் எழுதிய இதில் பாசமும், கண்டிப்பும் நிறைந்த தந்தையாக பி. கே. சாமி நடிக்கிறார்.



'மனமெனும் அரங்கில் ஒரு நரகச்சுழல்' நாடகத்தில் 98 வயது கிழவியாகச் சிறப்பாக நடித்திருக்கும் எஸ். புஷ்பா தேவி.

15 நாள் பலன்

(ஏப். 10 முதல் ஏப். 25 வரை)

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இருப்பீர்கள். பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் நோக்கங்களையும் லட்சியங்களையும் நிறைவேற்றுவதற்குத் தீவிரமாக உழைக்க இதுவே உங்களுக்குத் தக்க தருணம். உங்களை யாரும் அவ்வளவு சுலபத்தில் எதிலும் ஏமாற்றிவிட முடியாது. நீங்களாகவே ஏமாந்து போனால் யாரைக் குறை சொல்வது?

நல்ல நாட்கள்: 13, 15, 24
எச்சரிக்கை நாட்கள்: 10, 14, 16

மீனம் (பிப். 19 - மார்ச் 20)

ஆழம் தெரியாமல் எதிலும் காலை விட்டுக் கொண்டு அவதிப்படும் சூழ்நிலைகள் வரலாம். எச்சரிக்கையாக இருங்கள். ஓய்வு ஒழிச்சலில்லாமல் வேலை செய்ய வேண்டியிருக்கும். ஆனால் உடல்நிலை கொஞ்சம் பாதிக்கும். பணம் பத்தும் செய்யும் என்பதற்கேற்ப பண விஷயத்தினாலேயே நெருங்கிய நண்பருடன் தகராறு வந்தாலும் வரும். நீங்கள் மட்டும் கொஞ்சம் கவனமாக இருந்தால் இந்தச் சங்கடங்கள் "புஸ்" என்று போய் விடாதா என்ன?

நல்ல நாட்கள்: 15, 17, 21
எச்சரிக்கை நாட்கள்: 12, 13, 24

மேஷம் (மார்ச் 21 - ஏப். 20)

போன மாதம் ஓய்வு ஒழிச்சலின்றி வேலை செய்திருந்த உங்களுக்கு இப்போது உல்லாசமாகக் காலங் கழிக்க நண்பர்கள் உறவினர்கள் உதவியாக இருப்பார்கள். நண்பர்களால் பண விஷயங்களில் சிக்கல் ஏற்பட்டாலும் கூடப் பெரியவர்களின் அறிமுகம் கிடைக்கும். திருடப்போனாலும் கூட்டு உதவாது. அது போல நீங்கள் எதையும் தனித்து நின்றே செய்யுங்கள். வெற்றி உங்களுங்கே.

நல்ல நாட்கள்: 15, 16, 20
எச்சரிக்கை நாட்கள்: 24, 25

ரிஷபம் (ஏப் 21 - மே 20)

கூட இருப்பவர்களின் ஒத்துழைப்புக் குறைந்து காணப்படும் என்பதால் நீங்கள் அளவுக்கு அதிகமாகத் தொழில் சம்பந்தப்பட்ட காரியங்களில் உழைக்க நேரிடும். நீங்கள் செய்வது நல்லதாக இருந்தாலும்கூட அதை மற்றவர்கள் அவ்வளவாக வரவேற்க மாட்டார்கள். குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஆரோக்கியம் கெடும். அதனால் உங்களுக்கு அலைச்சலும் மன உளைச்சலும் ஏற்படலாம்.

நல்ல நாட்கள். 15, 17, 21
எச்சரிக்கை நாட்கள்: 14, 20, 24

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

படிப்பில் ஆர்வம் செலுத்துவீர்கள். எழுத்தாளர்களாக இருந்தால் எழுதிக் குவிப்பீர்கள். சமயத்தைப் பற்றிய சிந்தனை கொஞ்சம் அதிகமாக உங்களுக்கு இந்த நாட்களில் தோன்றும்.

அதனுல் சமயத் தலைவர்களின் தொடர்பு கூட உண்டாகும். ஆனுல் அவர்களிடம் சொற்போர் செய்யாதீர்கள். வெளியூர்ப் பயணங்களுக்குரிய வாய்ப்பு வந்தாலும் அதற்கு ஏற்ற நேரம் இதுவல்ல.

நல்ல நாட்கள்: 15, 17, 23
எச்சரிக்கை நாட்கள்: 11, 16, 18

கடகம் (ஜூன் 21 - ஜூலை 20)

எதைச் செய்தாலும் அதிலே கொஞ்சமாவது பணம் கிடைக்குமா? என்று யோசித்துத்தான் செய்வீர்கள். அப்படியிருக்க உங்களுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட வழியுண்டா? எதிர்கால சேமிப்புக்குப் பல திட்டங்கள் போட்டு அவற்றைச் செயல் முறையிலும் கொண்டு வருவீர்கள். நண்பர்கள் ஒத்துப்போகாத போது உங்களுக்கு மூக்கிற்கு மேல் வரும் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

நல்ல நாட்கள்: 15, 18, 24
எச்சரிக்கை நாட்கள்: 12, 13, 23

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உறவினர்கள், பாகஸ்தர்கள் முதலியோருடன் வீண் வாக்குவாதம் உருவாகலாம். கூட்டாகச் செய்யும் வேலைகள் வெற்றி தரும். பெரியோர்கள் ஆதரவு கொஞ்சம் மந்தம்தான். சட்டெனக் கோபத்திற்கு ஆளாவீர்கள். சாந்தமாக இருந்தால் எவ்வளவோ தகராறுகள் தீரும். பொருளாதாரம் நல்லபடி இருக்கும்.

நல்ல நாட்கள்: 12, 19, 21
எச்சரிக்கை நாட்கள்: 13, 14, 23

கன்னி (ஆக 22-செப். 22)

நீங்கள் முதலாளியாக இருந்தால் உங்களுடைய தொழிலாளர்கள் உங்களுக்குத் தலைவலியைக் கொடுக்கலாம். தொழிலாளியாக இருந்தால் முதலாளி தொல்லையைக் கொடுக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப நடப்பது நல்லது. அதிக வேலை காரணமாகவோ மன உளைச்சலினுலோ ஆரோக்கியம் பாதிக்கும். அதையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். மாதத் துவக்கத்தில் இருக்கும் சீரான நிலைமை மாத மத்தியில் அவ்வளவு நன்ருக இராது.

நல்ல நாட்கள். 14, 16, 21.
எச்சரிக்கை நாட்கள்: 11,15,17,18.

துலாம் (செப் 23-அக். 22)

உல்லாசமாக இருக்கவேண்டும் என்னும் எண்ணம் உங்களிடையே வழக்கத்திற்கும் அதிகமாகத் தலைதூக்கும். அதற்கேற்ப நண்பர்களும் உங்களை மொய்ப்பார்கள். அவர்களை அறவே ஒதுக்கமுடியாவிட்டாலும் கூடியவரைக்கும் ஒதுக்கினுல் உங்கள் பணமும் நேரமும் மிச்சப்படும். கற்பனை சிறகடித்துப் பறக்கும். கதாசிரியராக—கவிஞராக இருப்போருக்கு ஒரே கொண்டாட்டம்தான்.

நல்ல நாட்கள்: 24, 25.
எச்சரிக்கை நாட்கள்: 20, 21.

விருச்சிகம் (அக்.-23 நவ. 22)

விருந்தாளிகள் அதிகம் பேர் உங்கள் வீட்டுக்கு வரக்கூடும். வாகனப் பயணங்களும் உங்களுக்கு அதிகமாக உண்டாகலாம். உங்கள் வண்டி ஒழுங்காகப் போனுலும் எதிரே வரும் வண்டி உங்கள் வண்டியை ''முத்தமிட'' முயலும். நீங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும். வியாபாரிகளாக இருந்தால் புதிய முயற்சிகளைச் செய்வீர்கள். அது பலன் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கும். யாரிடமும் விவாதம் செய்து கொண்டிருக்கவேண்டாம்.

நல்ல நாட்கள்: 13, 15, 18
எச்சரிக்கை நாட்கள்: 19, 20, 25

தனுசு (நவ. 23. - டிச. 20)

உற்றுர் உறவினர்கள் யாவரிடமும் உங்களுக்கு நல்ல பேர் கிட்டும். நீங்கள் ஏற்கனவே போட்டு வைத்திருக்கும் திட்டங்கள் சிலவற்றை மாற்றவேண்டி இருக்கும். உங்களது புத்திக் கூர்மையால் எதையும் எளிதில் சாதிப்பீர்கள். அதற்கேற்ற வகையில் பலவகையான விவகாரங்கள் உங்களுக்கு வந்துசேரும். அவற்றைச் "சவாலே சமாளி" என ஜமாய்த்து விட்டுத்தான். மறுவேலை பார்ப்பீர்கள்.

நல்ல நாட்கள்: 11, 13, 15
எச்சரிக்கை நாட்கள்: 16, 21, 25

மகரம் (டிச. 21- ஜன. 19)

எண்ணெய்யைத் தடவிக்கொண்டு மண்ணில் புரண்டாலும் உடலில் ஒட்டுவதுதான் ஒட்டும் என்பார்களே! அதுபோல எவ்வளவு முயன்று உழைத்தாலும் உங்களுக்கு ஆண்டவன் அளித்தபடிதான் பலன் கிடைக்கும். இதனைச் சமாளிக்க ஒரே வழி செலவைக் கட்டுப்படுத்துவதுதான்!

பொருளாதாரத்தில் தான் உங்களுக்கு இந்த நிலை! மற்றபடி வேலையில் உங்களின் மேலதிகாரியிடம் "சபாஷ்" வாங்குவீர்கள்.

நல்ல நாட்கள்: 15, 16, 24
எச்சரிக்கை நாட்கள்; 12, 14, 20

—தஞ்சை நகுலன்

சந்திரன் நிலை கொள்ளாமல் தவித்தான். "ஆப்பரேசன் தியேட்டரின்" மூடப்பட்ட கதவுகளை விட்டு அகல மறுத்தன அவன் கண்கள். உட்காருவதும், எழுந்திருப்பதும், அங்குமிங்கும் நடப்பதுமாக முக்கால் மணி நேரத்தைக் கடத்திவிட்டான்.


பிரசவ "வார்டு"க்கு அவன் வந்தபோது சரியாக மணி நாலேகால். அங்கே மல்லிகாவைக் காணவில்லை. "ஆப்பரேசன் தியேட்டரில்" இருப்பதாக ஒரு நர்ஸ் சொன்னுள். அதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. எவ்வளவு ஆவலோடும் நம்பிக்கையோடும் ஓடிவந்தான்!

"ஆப்பரேசன் தியேட்ட"ரின் கதவுகள் திறந்துகொண்டன. அவசரம் அவசரமாக ஒரு நர்ஸ் வெளியே வந்தாள். சந்திரன் எழுந்து நின்றுன். அவனைக் கண்டதும் ஓடி வந்து, "வெகு நேரமாகக் காத்திருக்கிறீர்களா! இப்படி ஆகும் என்று நான் நினைக்கவே இல்லை. மன்னித்துக்கொள்ளுங்கள்!" என்றுள்.

"மத்தியானமே நான் உனக்குப் ''போன்" செய்திருந்ததனுல் நீ தயாராக இருப்பாய் என்று நினைத்துக்கொண்டு வந்தேன். படம் ஐந்தரை மணிக்குத்தான்; பத்து நிமிடம் தாமதமாகப் போனுலும் பரவாயில்லை. புறப்படு மல்லிகா! நீ உடை மாற்றிக் கொள்ளவேண்டாமா?" என்று பரபரத்தான் சந்திரன்.

—'பொடியன்'





வான்நெடும் பாட்டையில் வந்தும் போயும்
கான்நெடுங் கனிவளம் கைவர நல்குவாய்
தேன்உகும் மங்கையர் செறிகுழல் அன்னய்
வான்சிறப் புற்ற வண்ண முகிலே
தெள்ளிய நீர்மை இனிவுகொள் தன்மையால்
சொல்லியது ஆகச் சொல்லுதி இம்முறை
அருவம் உருவம் இரண்டிலு மாக
ஒருவன் உள்ளனுய் ஒப்புவது இயற்கை
மனிதன் தேவன் இருவேறு பணைப்
குனிபெரும் அரங்கில் கொட்டி நிமிர்த்தும்
தனிப்பெருங் கலைஞன் தமிழெனும் நெஞ்சன்
மணிநிகர் மேனியன் 'மனோகர்' பெருமைக்கு
இணைவரத் தகுமோ நின்சிறப்பு
புனைமொழி துறந்து புகலுதி இன்னே!

வேழம் பறிக்க விழுமம் தாங்கும்
ஆலம் விழுதுகாள்! ஆலம் விழுதுகாள்!
பொய்யா மழையொடு புணர்ந்த பொழுதுசனும்
கொய்யா மலர்சூழ் எம்மலை யகத்து
நின்பலம் ஒக்க நிமிர்ந்த குழுவொன்று
தன்புலம் வியக்கத் தமிழர்யாம் கண்டனம்
எழுபத்து வடிவில் எழுந்தஓர் கலைக்குழு
முழுபத்து நாடக முத்திரை பதித்ததும்
இந்நிலம் உற்றுர் ஈடில் பயன்கொளத்
தன்திறம் உணர்த்தித் தலைநிமிர் வெய்ததும்
ஈண்டு கண்டனம் இறும்பூது கொண்டனம்
ஆண்ட தமிழர்க்கு அறிகுறி என்றனம்
நின்போல் கலைப்படை இஃதும்
தண்ணொளி பரப்பித் தழைக்க வாழ்த்துவாம்!

[மலேசியத் தமிழ்க் கலைஞர் இயக்கம், 'நாடகப் பேரொளி' மனோகர் குழுவுக்கு 21-3-77ஆம் நாள் நடத்திய பாராட்டு விருந்தில் வழங்கிய வாழ்த்து வண்ணம்]